
பொன்னி
228

Grams: **PILONK** Phone: **2424**

# PENMEN LIMITED

No. 1-A ANDERSON STREET, MADRAS-1.

Sole Distributors to

**THE PILOT PEN CO. (INDIA) LTD.**

For

- HYDERABAD,
- MYSORE,
- TRAVANCORE
- COCHIN
- COORG

STATES & SOUTH INDIA




**BUY A BOTTLE TO-DAY**

# பொன்னி

## பொருளடக்கம்

மலர் 8 | ஏப்ரல் 15, 1954. | இதழ் 2

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
திருவள்ளுவர் ஆண்டு 198[illegible]
சித்திரை திங்கள் 3-ம் நாள்
21 APR 1954

தலையங்கம் ... 3
மக்கள் மன்றம் ... 6
செய்தித் திரட்டு ... 8
அந்த நாள்! ... 9
பொன்னி வந்தாள்! ... 16
வேண்டாத வேலைக்காரன் ... 17
முடியாதே! ... 24
இலக்கியச் செல்வங்கள் ... 25
குடியுயர... ... 29
பெண்களால் முன்னேறக்கூடும்... 31
நல்வாழ்வு ... 33
விநோத மண முறைகள் ... 36
உயிர்த்துடிப்பு ... 39
இன்பம் பெற... ... 50
மலரட்டும் மக்களாட்சி! ... 51
நமது மருத்துவர். ... 54
இரக்கம்! ... 57
பாட்டாளி மக்களே! ... 61

★

விலை 4 அணா

★

## மக்கள் மன்றம்

★

இன்றைய அரசியல், வாழ்க்கை நிலை ஆகிய அன்றாட நிலவரங்கள் பற்றி 'பொன்னி'யின் வாசகரா கிய நீங்கள் என்ன நினைக் கிறீர்கள்? உங்கள் கருத் துரையைப் 'பொன்னி, மக் கள் மன்றத்தில் அரைப் பக் கத்துக்கு மேற்படாமல் எழுதி அனுப்புங்கள்.

கருத்துச் செறிவுக்கும், பல்வகைக் கருத்துச் சாயல் களுக்கும், நடையழகுக்கும் தனி மதிப்பும் பிரதிநிதித் துவமும் கொடுத்து 'மக்கள் மன்றம்' வெளியிடும்.

★

**8** Prizes are awarded in Competition No. 12. 1st Prize 3 Viz., (1) Mr. R. C. Padayachi, Mallapuram, (2) Mr. K. Rajan, Laligram P.O., (3) Mr. M. Ekambaram Bikshandar Koil P.O. 2nd Prize 1, 3rd Prize 3 & Consolation Prize 1. Full particulars are published in "Sunbeam" dated 10-4-54.

**RAISING COMPETITIONS**

*Key S. No. 12 (19 to 34) - 106*

| | | | |
|---|---|---|---|
| 25 | 30 | 27 | 24 |
| 20 | 31 | 34 | 21 |
| 32 | 19 | 22 | 33 |
| 29 | 26 | 23 | 28 |

Certified.
*For The Premier Bank of India Ltd,*
Sd............
*Agent, Madras.*

**ரிஜிஸ்டர்ட் நெ. 624. போட்டி நெ. 14.**

# ரூ. 25,000

**பரிசு பெறுக.**

எமது ஸீலிடப்பட்ட சரியான விடை சென்னை மெஸர்ஸ் பிரீமியர் பாங்க் ஆப் இந்தியா லிமிடெட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களது அத்தாட்சியுடன் பிரசுரிக்கப்படும் எமது ஸீலிட்ட விடைக்கு வரிக்கு வரி எழுத்துக்கு எழுத்து முற்றிலும் சரியான விடைக்கு முதல் பரிசு **ரூ. 12,500;** முதலிரண்டு வரி சரியான விடைக்கு 2-ம் பரிசு ரூ. 6500; முதல் வரி சரியான விடைக்கு 3-ம் பரிசு ரூ. 3500. இடமிருந்து வலமும், மேலிருந்து கீழும் முதலிரண்டு எண்கள் சரியான விடைக்கு 4-ம் பரிசு ரூ. 2,500

**முடிவு தேதி 27-4-54** **விடை 12-5-54**

பிரவேசக் கட்டணம்: கூபன் 1-க்கு ரூ. 1-0-0.

ஆறு கூபன்களுக்கு ரூ. 5-0-0, 14 கூப்பன்களுக்கு ரூ. 10.

**விடைகள் கண்டு பிடிக்கும் விதம்:-** 21 முதல் 36 வரையுள்ள எண்களைப் பக்கத்திலிருக்கும் கட்டங்களில் பூர்த்தி செய்க.

114

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

இடமிருந்து வலமாகவுள்ள, வரிசைகளையோ, மேலிருந்து கீழாகவுள்ள வரிசைகளையோ, சதுரத்தின் மூலைகளுக்கு குறுக்காகவோ எந்த வரிசையைக் கூட்டினாலும் மொத்தம் 114 தான் வரவேண்டும். ஒரு எண்ணை ஒரே முறைதான் உபயோகிக்கலாம், சாதாரண காகிதத்தில் எத்தனை விடைகள் வேண்டுமானாலும் எழுதலாம். ஒவ்வொரு விடைக்கும் அடியில் அவரவர் பெயர், விலாசத்தை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி, கட்டணத்தையும் கிராஸ் செய்த இந்திய போஸ்டல் ஆர்டராகவோ, மணியார்டராகவோ அனுப்பவும். மணியார்டர் பாரத்தில் கூப்பன்களில் அவரவர் பெயர் விலாசத்தை எழுதவேண்டும். விடை கூப்பன்களுடன் மணியார்டர் ரசீதை அனுப்பவும். வெளி நாட்டிலிருந்து அனுப்புவோர் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டராக வாங்கி அனுப்பவேண்டும். பரிசுத் தொகைகள் வசூலுக்குத் தக்கபடி மாறும். எல்லா விஷயங்களிலும் மானேஜரின் தீர்ப்பே முடிவானது. சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். விடை வேண்டுவோர் 4 அணா தபால் ஸ்டாம்பு அனுப்பினால் விடை தபாலில் அனுப்பப்படும். எமது விதிகளையும் நிபந்தனைகளையும் நன்கு அறிந்தவர்களே போட்டியில் கலந்துகொள்ள வேண்டும்.

விடைகளையனுப்பும் விலாசம்:-

# The Raising Competitions No. 14

28, (P) Thandavaraya Gramani Street, Madras-21.

# வாழ்த்துகின்றோம்!

## ஆனால் ... .... ....

சென்னை மாநில முதலமைச்சர் பொறுப்பினை உயர் திரு. காமராசர் ஏற்க முடிவு செய்து விட்டார் என்பதை அறிந்தோம்.

தமிழ் நாட்டுத் தேசியக் கட்சியின் தலைவராகப் பல்லாண்டுகள் பணி புரிந்தார்; கண்ணீரும் செந்நீரும் விட்டு இயக்கத்தைக் காத்துவந்தார்; பட்டத்தாலோ பதவியாலோ அல்லாமல் உழைப்பால் உயர்ந்தவர்; ஏழைகளின் இன்னல்களிடையே வாழ்ந்தவர்; தொழிலாளர்களின் துயரங்களின் நிலையைப் புரிந்தவர்; மக்களின் மனப்பண்புணர்ந்து அவர்களை மதிப்பவர்; திராவிடப் பெருங்குடியில் தோன்றிய தமிழ் மகனாரொருவர் சென்னை மாநிலத்தின் முதலமைச்சர் பதவியை ஏற்கப்போவதையறிந்து வாழ்த்துகின்றோம்! வாழ்க முதலமைச்சர்!! ஆனால்..........

கல்வி நீரோடையில் கருத்தோடு ஆடும் நல்லிளஞ் சிறுவர்களை நாசமாக்க எண்ணி, புதிய முறைக் கல்வித்திட்டம் என்ற முதலையைப் புகுதியிருக்கிறார் முன்னாள் முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார். நீருள் அமிழ்ந்து நின்று பாறையெனத் தோன்றி நீருள் மூழ்கி

ஆடப்புகின் பிடித்திழுத்துச் சென்று கொல்லும் முதலையைப் போன்றதுதான்—கல்வியாகிய ஓடையில் நன்மை பயப்பதுபோல் தோன்றி சிறுஅரை நாசமாக்கும் புதிய முறைக் கல்வித்திட்டம். இத்திட்டத்தை ஒழித்துக் கட்டுவாரா ?

ஆந்திரம் பிரிந்த அவதி நிலையை அறிந்திருந்தும் மத்திய அரசாங்கத்தார் "மொழிவழி மாகாணத் திட்ட"த்தை அமுலாக்காதிருப்பதின் நோக்கம் என்னவோ? அதனை விரைந்து அமுலாக்க முயற்சி யெடுப்பாரா ? இப்படிக் கூறுவதால் மொழிவழி மாகாணம்தான் நமது நோக்கம் என்பதல்ல ; திராவிட நாட்டுப் பிரிவினைக்கு மொழி வழி மாகாணப் பிரிவினையும் படிக்கட்டாயமையும் என்பது தான். மொழிவழி மாகாணங்கள் பிரிக்கப்படுமா ?

உயர்தனிச் செம்மொழியென்று உலகோர்போற்றும் செந்தமிழ் மொழி ஆட்சிமொழியாக்கப்பட வேண்டும். ஆட்சி இழந்து அன்னியரால் அலக்கழிக்கப்பட்டு அழுது நிற்கும் செந்தமிழ் அன்னையை அரியாசனம் ஏற்றி "அன்னையே!" என்றழைக்கவேண்டும். ஆட்சிப்பீடமேறி செந்தமிழன்னை செங்கோலோச்ச வேண்டும். செய்வாரா முதலமைச்சர் ?

இவற்றைச் செய்தால் தமிழகம் காமராசர் பெயரைப் பொன்னேட்டிலே பொறித்து வைக்கும். மக்கள் மனத்திலே மாறாத இடம் பெறுவார். காமராசருக்கு மனம் இருக்கலாம் ; மார்க்கமும் வகுக்கலாம்; ஆனால் வடநாட்டுப் போக்கு மாற வேண்டுமே—மாறுமா ? அல்லது இவர் தம் போக்கை மாற்றிக் கொள்வாரா ?

# இலங்கை அரசாங்கம்

இலங்கை; ஆம், கடலின்கண் முத்தெனத் திகழும் இலங்கை; கனம் நேரு அவர்களோடு செய்துகொண்ட' ஒப்பந்தத்தையும் காற்றில் ஊதி விளையாடும் இலங்கை அரசாங்கம்தான்.

அங்குதான் சட்டதிட்டங்களால், சமநோக்கின்மையால், இலங்கை வாழ் தமிழ் மக்கள் விலங்கென மதிக்கப் படுகின்றனர். சமவுரிமையோடு வாழவேண்டிய தமிழக மக்கள் மாக்களாக நடத்தப்படுகின்றனர்.

காட்டைத் திருத்திக் கழனியாக்கி மக்கள் வாழும் நாடாக ஆக்கிக் கொடுத்தவர்கள் கன்னித் தமிழகத்தார் என்பதைக் கவனித்துணராத இலங்கையரசாங்கம் தமிழரைக் கட்டுப்படுத்தத் தொடங்கியிருக்கின்றது.

அந்நியர் வந்தால் இந்நாட்டில் ஆட்சிப்பீடம்; நம்மவர் சென்றால் பிற நாட்டில் அடிமைப் பீடம். எந்நாளும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் கதி இதுதான் என்றால்.... இலங்கையரசாங்கம் தன் போக்கை மாற்றிக் கொள்ள முடியாதென்றால்........ இந்திய அாசாங்கம் கண் மூடிக் கவலையற்றுத் திட்டங்களைத் தீட்டிக் காலங் கழித்துக் கொண்டிருப்பினும், **தென்னாடு அமைதியாயிருக்குமென எதிர்பார்த்தல் அறிவிற்குப் புறம்பானதாகிவிடும்** என்பதை நம்மால் நினைவு படுத்தாமலிருக்க முடியவில்லை. பொறுத்துப் பார்ப்போம்! இலங்கை வாழ் தமிழர் சமவுரிமையொடு வாழும் பொன்னான நன்னாளை எதிர்பார்ப்போம்!

# மக்கள் மன்றம்

பெண்கள் படிப்பகத்தார்,
சென்னை-14.
3—4—54

அருமையாக அமைந்து விட்டாள் பொன்னி. இனிய தேமதுரத் தமிழில் இன்பம் தந்தாள்! பருகினோம். புதுமை தந்தாள்! புரிந்துகொண்டோம்! பகுத்தறிவொளி பரப்பினாள்! விழித்துக் கொண்டோம். வருக பொன்னி! வளர்க பொன்னி!

* * *

இரா. பாஷ்யம்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
3—4—54

மின்னும் தமிழ் மதியை மேகத்திரை கிழித்து கண்ணுக்கு முன்னிறுத்தும் காதல் "பொன்னி"யைக் காணாத மாணவருள்ளம் வெம்பிற்று — வேதனைப்பட்டது. இன்று பூத்து மிளிரும் "பொன்னி"யின் புது மணம் கண்டு அதன் புகழ் பாடித் திரியும் பொன் வண்டுகளாக மாறினர் மாணவர். வாழ்க பொன்னி!

* * *

க. ரெகுபதி,
குடந்தை,
8—4—'54

"அந்தநாள்" தொடர்ச் சித்திரமும், விநோதமண முறையும் ருசிகரமான அம்சங்கள். "மாறுதல்" போட்டிக் கதை நன்முக அமைந்ததோடு, புதுமைப்பித்தன் சிறு கதைப் போட்டியில் புதுமைப்பித்தன் பாணியே கையாளப்பட்டிருப்பதும் பாராட்டத்தக்கது.

நா. பாண்டுரங்கன், M A.,
திருவல்லிக்கேணி,
5—4—54

முன்னேற்ற இலக்கிய வானத்தில் பொன்னி கணநேரம் பறந்து மறையும் மின்மினியல்ல, காலத்துக்கும் சிறந்து உறையும் விண் மீன்! காலம் இதனைக் காட்டும்.

* * *

சோலை-இருசன்
7—4—54

பொன்னி தமிழர் தம் இதயத்தில் குடி கொண்டுவிட்ட கன்னி. நல்ல பல கருத்துக்களை, தீஞ்சுவைக் கனிகளை, சீர்கெட்ட தமிழரைச் செழுமையாக்க ஆடிவரும் தேனாய் விளங்கட்டும். வாழ்க பொன்னி! வளர்க தமிழ்!

* * *

நா. இராசகோபால்,
நாவலப்பிட்டியா.
இலங்கை, 6—4—54

தீந்தமிழ்த் திராவிடத்தைத் தேன் மிகு சோலையாக்கி, இலக்கிய மேதைகளின் இதயத்தில் இடம்பெற்று, சோழனது நாட்டினிலே சொகுசாக ஆட்சி செய்யும் 'பொன்னி'யாம் அந்நதி போல் "பொன்னி" யெனும் இத்தாளும் பகுத்தறிவு எனும் முரசு கொட்டி இலக்கியமெனும் படை திரட்டிப் பாராண்ட திராவிடனின் பண்பதனை எடுத்தியம்பிப் பார் முழுதும் பரவி நீடூழி வாழ்க,

வித்வான்—சி. இளங்கோவன்
தமிழாசிரியர்
கோவை, 10—4—54

"அம்மாமித் தமிழைத் தாங்கி வரும் பத்திரிகைகளைப் படித்து, செம்மையான தமிழை மறந்து போன பள்ளி மாணவ மாணவியர், 'பொன்னி'யைப் பெற்று புதுமை நடைபோடும் நல்ல தமிழைக் கற்றுணர்தல் நலம் பயப்பதாகும்."

* * *

இரா. செல்லத்துரை,
மதுரை, 2—4—54

நாட்டிடை உலவும் மூட நம்பிக்கைகள் நீங்க அறிவூட்டும் கருத்துக் கருவூலம்—வாழ்க்கை வளம் பெற வழி பல கூறும் ஏடு—கருத்துக்களை நிழற்படுத்திக் காட்டும் காலக் கண்ணுடி—பொன்னி வாழ்க!

* * *

மகாலிங்கம்,
பண்ருட்டி, 10—4—54

வான் மறைக்கும் பனித்திரையைக் கிழித்துவரும் பகலவன் போல் வந்தாள் பொன்னி! நல்லாள். கண்டேன்.... விண்டேன்.... உண்டேன் தமிழமுதம். வாழ்க பொன்னி! பொன்னி பெற்ற நாடு வாழ்க!!

* * *

ஆ. செயராமன்,
பெங்களூர்.
3—4—54

தமிழரெனும் வண்டினங்கள், "பொன்னி" யெனும் மலரினூறும், தமிழிலக்கியமெனும் செந்தேனைச் சுவைக்கத் தவறமாட்டார்.

"குழந்தை உறங்கும்போது, புலியொன்று வீட்டினுள் நுழைந்து குழந்தையருகில் சென்ருல் தந்தை என்ன, அந்த நேரத்தில் அஞ்சவா செய்வான்? குழந்தை காப்பாற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்தில், புலியின் கூரிய நகங்களையும், கோரப் பற்களையும் அவன் சாதாரண மனிதனுனலும் எதிர்க்கத் துணிவான். அதைப்போலவே, சீர்த்திருத்தவாதிகள் கொடுமைகள் பலவற்றிற்கும் ஆளாயினும் நாடு நலம் பெற உழைக்கத்தான் துணிவர். நாம் சார்ந்துள்ள பரம்பரை சாக்ரடீஸ், ஆப்ரகாம் லிங்கன் பரம்பரை.

—அறிஞர் அண்ணு.

(தஞ்சை சமூக சீர்திருத்த மாநாட்டில்)

## செய்தித்திரட்டு

### மொழிவழி மாகாணம் :

''மொழிவழி மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டுமா? வேண்டாமா என்பதல்ல; எல்லைக் கமிஷன் வேலை. மொழிவழி மாகாணங்களை அமுல்படுத்துவதென்பதே அதன் வேலை'' என்று முன்னாள் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. சங்கரராவ் தேவ் கூறியுள்ளார்.

* * *

### அன்று கூறினோம்!
### இன்று கூறுகிறார்!

''சுதந்திரம் பெற்றதும் காங்கிரசைக் கலைத்துவிடுங்கள்'' என்று காந்தி சொன்னாரே அதன்படி செய்திருந்தால் காங்கிரஸ் இந்த நிலைக்கு வந்திருக்குமா?

—ம. பொ. சி.

* * *

### கிட்டாதபோது...

சமீபத்தில் நடைபெற்ற சென்னை மேல்சபைத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்படாத போது ''காமராசர் என்னைப் பழி வாங்கினார்'' என்று கூறிய ம. பொ. சி., சென்னை நகரப் புத்தக சாலை சங்கத்தின் 26-ம் ஆண்டு விழாவில் ''என்னை இதுவரை அடைத்து வைத்திருந்த சிறையிலிருந்து விடுதலை செய்துவிட்டார்கள், இனி நான் சுதந்திரமாகச் சுற்றித் திரியலாம் என்று கூறினார்.

* * *

### மீண்டும் அறப்போர்

''வரப்போகும் புதிய மந்திரி சபை கட்டாயம் புதிய கல்வித் திட்டத்தை ஒழிக்கும். அப்படி ஒழிக்காவிடில், நாம் இறுதியாக ஒரு பொதுக்கூட்டம் கூட்டி, எச்சரித்துவிட்டு அப்போது யார் முதல் மந்திரியோ அவர் வீட்டின் முன் மறியல் நடத்தப்படும்'' என்று தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் தூத்துக்குடி வழக்கு நிதிச் சிறப்புக் கூட்டமொன்றில் அறிவித்துள்ளார்.

* * *

### டில்லியின் போக்கு

''தொழில் துறையில் ஏற்கனவே வளம் பெற்றுள்ள பகுதிகளுக்கே, குறிப்பாக பம்பாய், கல்கத்தாவிற்கே புதிய தொழில்களை யுண்டாக்கும் அனுமதி கொடுக்கும் யூனியன் சர்க்கார் போக்கை நான் கண்டிக்கின்றேன் தொழில் வளம் பெருகுவதின் முக்கியத்துவத்தை சென்னை, திருவாங்கூர், கொச்சி, மைசூர் முதலிய அரசாங்கத்தார் உணராதும், அதற்கென முயலாதும் இருப்பது கண்டு வருந்துகின்றேன்'' என சென்னை டிரேட்ஸ் அசோசியேஷன் நிரந்தர தலைவர் அனந்தராம கிருஷ்ணன் கூறியுள்ளார்.

* * *

### மேனாட்டு முறையில் வட நாட்டு அணங்குகள்

திருமதி சந்திரலேகா மேததா, இலங்கைப் பிரதம மந்திரியுடனும், திருமதி தாரஷெல்கால் இந்திய ஹைக்கமிஷனர் திரு ஸி. ஸி. தேசாயுடனும் அவர்கள் இருகை பிடித்து இந்தியப் பண்பாட்டிற்கு விரோதமாக மேனாட்டு முறையில் நாட்டியமாடினர். இவர்கள் யார் தெரியுமா? இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் தங்கையின் மக்கட் செல்வங்கள்.



# அந்த நாள்

"சிலம்பின் செல்வன்"

### காட்சி 3

[இடம்: செங்குட்டுவன் தனியறை. நிமித்திகன் மொழியும். அரசவை நிகழ்ச்சியும், செங்குட்டுவன் உள்ளத்தே ஒரு பெரும் புயலை உண்டாக்கிவிட்டன.]

செங்கு:—பெற்ற தாய், மகனே! மகனே!! என்று அலறினாள் பேசாவூமையாகப் பீடுநடை காட்டிப் பெயர்ந்தேன். அன்னை அழைத்தாள்; அவமதித்து மீண்டேன். என்னுடன் பிறந்தானைப் பகைவன் என்றெண்ணினேன்.

உள்ளம்:—ஆம்! அதிலென்ன தவறு? மண்ணுலகாளப்போகும் உன்னைப் பார்த்து, இந்த மண்டலம் ஆளும் தகுதியில்லையென்றானே அந்த மடையன்—கேட்டுக்கொண்டிருந்த தாயை, கேட்பதிலே வேட்கை பூண்டிருந்த தந்தையை, அவமதித்ததில் தவறென்ன? பைத்தியக்காரன்.........(சிரிப்பு)

செங்கு:—இல்லை......ஆட்சி போயினும் மறக்குலமாட்சி மறவாத என் தந்தையா? இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனா? நீதிக்கு மாறு புரிவான் இல்லை......இல்லை......ஒருக்காலும் இல்லை.

## காட்சி 4

[இடம் :—இளங்கோவின் தனியறை, சிந்தனைச் சுழல்களிடையே]

**இளங்கோ :**—அண்ணாவின் மனத்தைப் புண்ணாக்கிவிட்டேன். ஆம்! நான்தான் புண்ணாக்கிவிட்டேன்.

**உள்ளம் :**—நீ எதற்கு அண்ணாவின் மனதைப் புண்ணாக்குகின்றாய்?........வந்த நிமித்திகன் உன் சொந்தக்காரனா? என்ன! உனக்கென்ன தெரியும் அவனைப்பற்றி. அண்ணாவின் மனதைப் புண்ணாக்கியது நீயல்ல.

**இளங்கோ :**—இல்லை. நான் இல்லை. அண்ணாவின் நல்ல மனத்தை, இந்தத் தம்பி புண்ணாக்கியிருக்க மாட்டான். ........அப்படியானால் அண்ணாவின் நல்ல மனத்திலே நச்சுப் பையை வீசும் இந்த நாசவேலையைப் புரிந்தது யார்? அண்ணாவை அழிக்கத் திட்டமிட்டவர்கள் யார்?

**உள்ளம் :**—உனக்குத் தெரியாதா? (சிரிப்பு) அண்ணாவின் எண்ணங்கள்; அண்ணாவின் சொற்கள்!......அண்ணாவின் செயல் திட்டங்கள்——இந்த நாட்டிலே சட்டமாக்கப்பட்டால் சாதிப்பூசல் அழியும்; சமயப்பூசல் ஒழியும். "**பிரிந்தாலும் சூழ்ச்சியின் பிந்தலாட்டப் பட்டமாம் சாதி**" "**சோம்பேறிக் கூட்டம் வாழ சொர்க்க வாசல் அமைக்கும் சமயம்**" இவற்றைக் கை முதலாகக்கொண்டு வாழும் அந்தக் கயவர் கூட்டம் அழியும். அன்னியர் அழிவர்! அவர்கள் பண்பாடுகள் அழிந்துபடும்!

இந்நிலை யுணர்ந்த அன்னியர்கள் சதித்திட்டம் தொடங்கிவிட்டனர். ஆரியரை அழிக்கப் பேரிகை கொட்டிச் சென்றானே இமயவரம்பன்....அவன்தான் உன் தந்தை....அவனை அழிக்க முடியவில்லை. அவன் மகனை அழிக்கத் தொடங்கிவிட்டனர்........சூரத்தனத்தால் அல்ல! சூழ்ச்சித் திறத்தால்........வாளைத் துணையாக்கும் வல்லமையற்றவர்கள் வஞ்சகத்தைத் துணையாக்கிக் கொண்டனர். இதைக் கூட நீ புரிந்துகொள்ளாமல்........

**இளங்கோ :**—ஆ........உண்மையாகவா?........

**உள்ளம் :**—ஆம்........சிந்தித்துப் பார்! பகுத்தறிவைப் பயன் படுத்திப்பார்! அருந்தமிழ் நாட்டார் ஆரியரை அழிக்கத்தொடங்கி விட்டனர்; அவர்கள் நாட்டை அகப்படுத்தியும் விட்டனர். ஆரியப் படையை அரைநொடியில் வெட்டிக்குவித்து வெற்றி மாலை சூடினான் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். இமயத்திலே தமிழ்க் கொடியை ஏற்றிவைத்தான் உன் தந்தை. உன் அண்ணனோ! அவர்கள் பரப்பும் அன்னியர் பண்பாடுகளுக்குச் சம்மட்டி அடி கொடுக்கத் துணிந்துவிட்டான். இத்தனை நிகழ்ச்சிகளையும் எப்படித்தான் பொறுத்துக்கொண்டிருப்பர்! எண்ணித் துணிந்தனர். வாள் வீச்சால் வாகைசூட வகையில்லை என்று கண்டனர் வாய் வீச்சில்.

உள்ளம் :—அறியாத்தனத்தால் ஆட்சியிழந்து அவதிப்படாதே; அகிலம் உணராதவன் நீ. சிந்தனை செய்துபார்......தன்மானத்தால் தரணிவென்று பரணிகொண்ட தமிழ்வேந்தன், நிமித்திகனை அழைத்து நிமித்தம் கேட்கக் காரணம்?

செங்கு :—தானாக வந்தான் அந்தத் தறுதலை. யாரும் சென்று வாரும் என்று வரவேற்பளிக்கவில்லை. எங்கிருந்தோ வந்தான்; வாய்க்கு வந்ததை வகைப்படுத்திச் சொன்னான்; அவையினர் கேட்டுக்கொண்டிருந்தனர். குற்றவாளி யார்? அன்னையா? தந்தையா? அரும்பெறல் தம்பியா? யாருமில்லை. ஆனால் எல்லோரையும் இகழ்ந்து எழுந்து வந்த நானே குற்றவாளி!

உள்ளம் :—இல்லை....குற்றவாளி நீயல்ல. அன்னைமீது வைத்த அன்பால் தமிழன் பண்பை மறக்காதே. தந்தையானாலென்ன? தம்பியானாலென்ன? வீரம், மானம் இவை விலை கூறப்பட்ட பின்னர் "நீ மண்டலம் ஆளலாம் மதிப்புப் பெறலாம்" என்று மனப்பால் குடித்தால், அது உன் மதியீனம்.

செங்கு :—இல்லை, அந்த வஞ்சகன் குறி கூறத் தொடங்கிய போதே தம்பி எதிர்த்தான், தந்தை சினந்தார்—நண்பர்கள் 'நாவடக்கு' என்றனர். ஆனால் நான்தான்..........

உளம் :—ஆம் நீதான் "அன்னியன் நகைப்பிற்கு ஆளான பிறகு அவையில் வீற்றிருத்தல் ஆகா"தென எழுந்தாய். மானமுடையவன் வேறென்னதான் செய்ய முடியும்.

செங்கு :—வேறென்ன செய்யமுடியும்? கோழைப் பயல் என்று என்னை அவன் கூறியிருந்தால்........அந்தக் கொடியனை வேரறுத்து என் வீரத்தை நிலைநாட்டியிருப்பேன். அறிவற்றவன் என்று என்னை அவன் அழைத்திருந்தால் அறிவுத்திறங்காட்டி வென்றிருப்பேன். வீரத்திலே குறைகூறவில்லை—வெற்றியிலே குறைகூறவில்லை—அறிவிலே, ஆண்மையிலே—ஆட்சியிலே மன்னர் மாட்சியிலே அவன் குறைகாணவில்லை; அவனால் குறைகாண முடியவில்லை. முகக்குறி பார்த்து என் அகத்தை ஆய்ந்துவிட்டானும்! அந்த மூடன்! மடமைக்கு ஆட்சிப் பீடம்! அதில் மன்னனும் மயங்கிவிட்டான், இந்த மாநிலமும் மயங்கிவிட்டால்........

உள்ளம் :—மடமையை உடமையாகக் கொண்டிருக்கும் மக்கள் மனத்திலே அறிவொளி பரப்பப்படவேண்டும்; மாசு அகற்றப்பட வேண்டும்; அப்படியானால் நீ ஆட்சிப்பீடமேற வேண்டும்.

செங்கு :—இல்லை. அண்ணன் ஆண்டாலென்ன? தம்பியாண்டாலென்ன? ஒன்றுமட்டும் நிறைவேற வேண்டும். **அறியாமையைப் பரப்பும் இந்த ஆணவம் பிடித்தோர் இந்நாட்டைவிட்டு அகற்றப்பட வேண்டும்.** இல்லை, அழிக்கப்படவேண்டும். இங்கு வாழினும் எங்கு வாழினும்.......இல்லை.......இமயத்தில் வாழினும்..........

வெற்றிகாண சூழ்ச்சி வலையை வஞ்சகத்தால் விரித்தனர்....அதிலே முதல் கட்டம் அண்ணனுக்கும் தம்பிக்கும் அழியாப் பகையை ஆக்கு வது. இதனைப் புரிந்துகொள்ளாமல் என்னென்னவோ சிந்திக்கின்றாயே ஏன்?

இளங்கோ :—ஆம்! உண்மைதான்! அறியாமைக் குழியில் அமிழ்ந்து கிடக்கும் மக்களிடம், சாத்திரம்கூறி பாத்திரத்தில் பசிக்கு உணவேற்ற பரதேசிக் கூட்டம், விதியைக்கூறி சதிபுரியத் தொடங்கி விட்டது. அரசவை ஏறி ஆட்சியின் ஆணிவேரையே அழிக்கத் தொடங்கிவிட்டது........ஆம்! அழிக்கத்தான் தொடங்கிவிட்டது, பட முடியாது இத்தொல்லை. பட்டதெல்லாம் போதும்........புறப்படுகின்றேன்—சதிகாரக் கூட்டத்திற்குச் சாவுமணி அடிக்கின்றேன். விதியென்று கூறி மக்களை மதியிழக்கச் செய்யும் அந்த வீணர்களுக்குப் புதுப்பாடம் கற்பிக்கப் புறப்படுகின்றேன்,

## காட்சி 5

*[இடம்: இமயவரம்பன் அவை. இமயவரம்பன், செங்குட்டுவன் முதலியோர் வீற்றிருக்கின்றனர். இளங்கோவின் வருகையை எதிர்நோக்குகின்றனர்........]*

காவலன் :—(காவலன் ஒருவன் ஓடிவந்து) வாழ்க எம்கோவே! வாழ்க. அடிகள் ஒருவர் தங்களைக் காண அனுமதி வேண்டுகின்றார்.

இமய :—காவலனே! அடிகளை கடிதின் இவண் அழைத்து வருக. (அமைச்சரைப் பார்த்து) அமைச்சரே! ஏன் இன்னும் இளங்கோ வரக்காணோம்!

அமைச் :—ஆம்! இளவரசரை இன்னும் காணோமே!

இளங்கோ :—(அவைமுன் அடிகள் தோன்றி) இல்லை....இதோ இளவரசன் வந்துவிட்டான். அரசவுடையில் சென்றவன் அடிகள் ஆடையொடு வந்திருக்கின்றான்.

அமைச் :—யார் இளவரசரா?

அழும் :—அரசே! என்ன கோலம் இது?

இமய :—யார்? இளங்கோவா? என் மகனா?

நற்சோணை :—ஐயோ என் மகனா?

இளங் :—ஆம்! தந்தையே ஆம்! தங்கள் மகன் இளங்கோதான்—(எல்லோரும் உற்றுப் பார்க்கின்றனர்) நீங்கள் கண்டுகளித்த இளவரசன் இளங்கோ இறந்துவிட்டான்; இந்த அவையிலே வந்திருப்பவன் துறவி இளங்கோ. இல்லறம் பூண்டு இந்நாட்டை ஆளுவான் என்றெண்ணியிருந்த இளவரசன் மறைந்தான். உள்ளத் துறவு பூண்டு இந்த உலகெல்லாம் ஆளும் துறவரசன் தான் உங்கள்முன் நிற்கின்றான்,

நற்சோணை :—இளங்கோ! என்னருமை இளங்கோ!! பால்மணம் மாறா இளமைப் பருவத்திலா பற்றற்ற துறவு பூண்டனை. கொடிது

கொடிது !! மிகமிகக் கொடிது !!! வேண்டாம்! வேண்டாம் மகனே ! வேண்டாம்.

இளங்கோ :—என்னை ஈன்றெடுத்த அன்னையே! மகன்மீது கொண்ட மாருத பாசம் உங்களை மயக்குகின்றது. தங்களின் மூத்த மகன் வீரத்திலே வெற்றியிலே சான்ருேனுகப் போகின்ருன் இளைய மகன் அறிவிலே நல்ல துறையிலே சான்ருேனுகப்போகின் ருன். கண்டுகளிப்பது உங்கள் கடமை. பெற்றநாளினும் பேருவகை யடைவது உங்கட்குப் பெருமை.

அமைச்சர் ;—அரச குமரர் தாங்களா அவையில் புக அனுமதி பெற்றீர்கள்?

இளங்கோ :—ஆம்! அமைச்சரே! கேளும் கூறுகின்றேன். நேற்றுவரை நான் இளவரசன்.........இந்நாட்டின் அரசன்.........இந் நாட்டு மக்களின் சொந்தக்காரன். பேரவையில் புக பிறப்புரிமை யுண்டு. ஆனுல் இன்று நான் இந்த நாட்டிற்கு மட்டும் சொந்தக்கார னல்ல ! இந்த உலகிற்கே சொந்தக்காரன்.

(செங்குட்டுவனைப் பார்த்து) அண்ணு! பொன்னுன இந்நாட்டு மன்னர் தாங்கள். அரசு, ஆணை, ஆட்சி அனைத்தையும் துறக்கின் றேன். தங்களுக்காக அல்ல! தாய்நாட்டு மக்களுக்காக. நிமித்தம் பார்ப்போன் கணித்துரைத்தானே இளங்கோதான் பட்டமாள்வான் என்று. முறைகெட்டவன் வார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி வைக் கின்றேன். பட்டம் பதவிகளை இனி நான் எட்டியும் பார்க்கமாட் டேன். அரசபோகத்தை ஆனந்தபுரியைத் துறந்துவிட்டேன். இனி உறவு பகை ஒன்றும் எனக்கில்லை.

மாளிகை வாசம் வேண்டாம்! மண் குடிசையில் வாழத்தொடங்கி விட்டேன். குபேரப் பட்டின வாழ்க்கை வேண்டாம்; குணவாயிற் கோட்டத்திலே குடி புகுந்துவிட்டேன். அண்ணு இந்நாட்டை ஆள வேண்டும். அகிலமெங்கும் சென்று வெற்றிகாண வேண்டும். பொன்னுன திருநாடு இப்பூமியிலே எந்நாளும் நன்ணுடாய் இலங்க வேண்டும்.

செங்கு :—தம்பி ! உன் தன்மையறியாது போனேன். வேண் டாம் தம்பி வேண்டாம்! வாழ்க்கையைத் துறக்கவேண்டாம்!

இளங்கோ :—அண்ணு !.........

செங்கு :—இனத்தை.........இந்நாட்டை.........இனிமைத் தமிழ் மொழியையா? துறக்கின்ருய்! வேண்டாம் தம்பி! வேண்டாம். உன் அண்ணன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். நானே உனக்குப் பட்டம் சூட்டிப் பாராளும் வேந்தனுக்க முடிவுசெய்து விட்டேன். நீ எட்டிசையைக் கட்டியாளுவதைக் கண்டுகளிக்க எண்ணிவிட்டேன்.

மறுக்காதே தம்பி! மறுக்காதே. வந்தவர் :வஞ்சகர் தமிழால் தமிழ்நாட்டால் வாழ்க்கை பெற்ருர். ஆனுல் இன்று தமிழர் வாழ் வையே அழிக்கத் தொடங்கிவிட்டார். தமிழர் பண்பாட்டையே அழித்துவிட்டனர்.

இளங்கோ :—ஆம்! அண்ணு! அதை அறிந்துதான் துறவுபூண்டேன்; நீங்கள் ஆட்சிப்பீடம் ஏறி அரசு பெற்ருல்..........ஆட்சி புரியலாம்; ஆணை செலுத்தலாம்..........அமைதி பெறலாம். ஆனுல் ஒரு கூட்டம்..........ஒண்டி வாழவந்த ஊதாரிக்கூட்டம் மக்கள் பண்பை மறைமுகமாக மதத்தின் பெயரால் மகேசுவரன் நாமத்தால் மக்கள் பகுத்தறிவைப் போக்கி மடமையில் ஆழ்த்திவிட்டால்..........நீங்கள் மன்னராவதில் இந்த மண்ணுலகாள்வதில்..........மாற்ருரை மண்டியிடச் செய்வதில் பயனென்ன? வடவரை வென்று அவர்கள் வாழும் நாட்டிலே வெற்றிக்கொடி நாட்டுவதால் ஆவதென்ன?..........மக்கட் பண்பைத் திருத்தவேண்டும்; மறத் தமிழர் பண்பாட்டை மறவாதிருக்கச் செய்யவேண்டும், செந்தமிழர் பண்பாட்டை இந்த செகமெங்கும் செழித்திடச் செய்யவேண்டும்.

இமய :—மறத்தமிழர் பண்பாட்டை மண்ணகத்தே பரப்புவோம்! அதற்காக நீ துறவியாக வேண்டுமா?

இளங்கோ :—ஆம்! தந்தையே ஆம்! ஆரியர் தம் பண்பாட்டை அருந்தமிழ் நாட்டில் திணிக்க வாளெடுத்து நின்ரு வாகைசூடினர்? இல்லை வேலெடுத்து நின்ரு வெற்றி கண்டனர்?

செங்கு :—இல்லை! மந்திரம் புரிவதாக மக்களை ஏமாற்றித் தந்திரத்தால் வென்றனர்.

இளங்கோ :—எனவேதான் துறவுபூண்டேன். அன்னியர் இந்நாட்டிற் புகுத்தும் அழிவுச் சக்திகளை அழிக்கவேண்டும்..........அதற்கு நான் கண்ட வழி இதுதான். துறவறத்திலே நிற்பேன், தூய நெறியிலே தமிழர் பண்பாட்டை உணர்த்துவேன்! மக்கட் பண்பற்ற சமூகத்தில் மன்னனுகை மகுடம் ஏற்ருல் செங்கோலேந்தவா முடியும்? கொடுங்கோலேந்திக் குடிமக்களைக் கொன்று குவிக்கத்தான் முடியும்! எனவே அண்ணு ஏற்று நடத்தட்டும் அரசியலை; ஆண்மையொடு நீதி நேர்மையாக இந்தத் தம்பி நாட்டின் தந்தையாக நின்று சமுதாயத்தைத் திருத்தும் நற்பணியை மேற்கொண்டுவிட்டான்..........வருகின்றேன் தந்தையே! வருகின்றேன் அண்ணு! நாட்டைத் துறந்து காட்டில் வாழும் துறவியல்ல! நான். நாட்டில் வாழ்ந்து மக்களை நன்னெறியில் வாழச்செய்யும் நல்லோனுக வாழ்கின்றேன் நான்....

(அவையை விட்டு வெளியேறுகின்ருர்)

வில்லவன் :—இளங்கோவடிகள்!

எல்லோரும் :—வாழ்க!

## காட்சி 6

[ 'விதி' நாடகம் முடிவுறுகின்றது. இளங்கோவடிகள் நன்றியுரைக்கின்ருர்.]

இளங்கோ :—நாடகத்தைக் கண்டு களிக்கும் நல்லதோர் வாய்ப்பை அளித்தீர்கள். "விதி" நாடகத்தைக் கண்டு கேட்டு

சுவைத்து மகிழ்ந்தேன். 'நீத்தார் நினைவுநாள் விழா'வை எனது நினைவுநாள் விழாவாக்கி விட்டீர்கள். அனைவரும் என்பால்கொண்ட அன்பைக் கண்டு பெருமிதம் அடைகின்றேன். அனைத்தும் வாழ்வில் நடந்தன எனினும் கற்பனையில் என்னை அளவுகடந்து புகழ்ந்துவிட்டீர்கள் அன்பின் தூண்டுதலால்.

இந்த நினைவுநாள் விழாவின் சார்பில் உங்கள்பால் யாம் விடுக்கும் வேண்டுகோள் இதுதான்.

இனத்தை, இனப்பண்பை;
மொழியை, மொழிப்பற்றை;
மறவாதீர்கள் என்பதுதான்
தெய்வம் தொழுமின்!
தெளிந்தோர்ப் பேணுமின்!!

—வணக்கம்.

வில்லவன்:—வாழ்க எம்கோவே! வாழ்க. நாட்டு மக்கட்கோர் நல்வாய்ப்பு; நமது மன்னர் நாளை மலைவளங் காண நால்வகைப் படையுடன் புறப்படுகின்றார்.

மலைவளம் காணவிரும்பும் இந்த மண்டலத்தோர் அனைவரும் புறப்படலாம் என்பது நமது மன்னர் பெருந்தகையின் ஆணை.

வணக்கம். (தொடரும்)

## உங்கள் கருத்து

'பொன்னி' தமிழ் மக்களின் பெரு மதிப்புக்கும் இடைவிடா அன்புக்கும் ஆட்பட்டு நடந்துவரும் தமிழ்க்குடும்பப் பத்திரிகை. பொன்னியில் இடம்பெறும் பகுதிகள் குறித்தும் இடம் பெறவேண்டிய பகுதிகள்குறித்தும் நண்பர்களின் கருத்துரைகளைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். 'பொன்னி'யை வளர்க்கும் முயற்சியில் அக்கருத்துரைகள் பெரிதும் பயன்படுமாதலால் அனைவரும் சுருக்கமாகத் தங்கள் தங்கள் கருத்துகளை எழுதியனுப்ப வேண்டுகிறோம்.



ரநதா.

# பொன்னி வந்தாள்



'சிந்தனை மணி'

இருமுறைதான் வந்தெனக்கு இன்பந்தந்து
இதயத்தை மகிழ்ச்சியிலே தள்ளிவிட்டாள்!
மெருகதுதான் கலையாத மேனியோடு
மிளிர்ந்திட்ட கன்னியவள் ஏன்மறைந்தாள்?
கருகியதோர் மலர்போல உள்ளமெலாம்
கவலையது மொய்த்திருக்கக் காத்திருந்தேன்.
அருவியது துள்ளிவரும் அழகுபோல
அசைந்தாடி எனைமயக்க வந்துவிட்டாள்!

நெஞ்சத்தைத் தொட்டிட்டாள்; நினைவிலெல்லாம்
நேசத்தைத் தேக்கியவள் பாசத்தோடு,
கொஞ்சுகின்ற தமிழ்பேசி குலுங்கிவந்து
குறுநகையால் எனைவிழுங்க எங்குகற்றாள்?
எஞ்சாத இன்பத்தை இறைத்துவந்த
என்னழகே! பொன்மலரே! எனைப்பிரிந்தாய்!
செஞ்சுடரே! மீண்டுவந்து சிரித்துவிட்டாய்!
செயலிழந்தேன்; உனைக்கண்டு "பொன்னி"
[என்றேன்!

# வேண்டாத வேலைக்காரன்

நா. பாண்டுரங்கன்

**காலை** பிறந்ததும் கழுத்தில் மாலை விழப்போகும் மணப் பெண் தன் முகத்தைக் கண்ணாடியில் அடிக்கொரு தடவை பார்த்து அகமகிழ்வதைப்போல, மனிதனின் உள்ளே இருக்கும் மனம் என்ற 'பொருள்' எண்ணக் கண்ணாடியில் நொடிக்கொரு முறை தன்னைப் பார்த்துக் கொள்வதும் புன்னகை புரிவதும் பூரிப்படைவதுமாக இருந்தது.

மனம் என்றால் என்ன?........ கொடியிலும் செடியிலும் குலுங்கும் மலர், தன் வாய் திறந்து அது ஒரு வண்ணத்திப்பூச்சி என்று சொல்லிற்று. பேச்சில் கொஞ்சம் பொடி வைத்துப் பேசுபவர்கள், அது ஒரு குரங்கு என்றனர், கண்ணைச் சிமிட்டியபடி முனிவர்கள் அது ஒரு காட்டு யானை, அதை அடக்கும் அங்குசம் காட்டில்தான் இருக்கிறது என்று நாட்டைத்துறந்து காட்டை நோக்கிப் பறந்துவிட்டார்கள். தத்துவவாதிகள் 'அது வானத்தின் எல்லை!' என்று பெருமூச்சு விட்டார்கள். கானம் பாடும் காதலனோ 'என் காதலிக்குத்தான் அந்தப் பெயர்' என்றான். சித்தர்களோ, 'அது என் அடிமையல்லவா? என் அடிமைக்குத்தான் அந்தப் பெயர்!', என்று சொல்லிச் சிரித்தார்கள்- பித்தர்களைப்போல் திரிந்தார்கள். பித்தர்களோ 'அதுதான் எங்கள் எஜமானன்!' என்று சொல்லாமலே அதை எல்லோருக்கும் புரியவைக்கச் சித்தர்களைப்போல் நடந்துகொண்டார்கள்.

ஒரு கையில் சிறு அணுகுண்டை வைத்துக்கொண்டு இந்தப் பெரிய உலகத்தையே மிரட்டக் கூடிய விஞ்ஞானிகளோ 'மனம் என்றால் என்ன?' என்று கேட்டால், அணுகுண்டைக் கண்டு நடுங்கும் அகிலத்தைவிட அதிகமாக நடுங்கத் தொடங்கிவிட்டார்கள்—அவர்களின் அறிவுக்கு விட்ட சவாலை ஏற்றுக் கொள்ள முடியாததால்!

இதை யெல்லாம் மனிதன் தோன்றிய காலத்திலிருந்து பார்த்துக் கொண்டே வந்த மனம் 'கக்கக்கடகட' வென்று சிரிக்கும். உலகத்திலுள்ள பெரிய அதிசயம் நான்தான் என்று அது கூறிக்கொள்ளும், கூறிக் கொள்ளுமா? உண்மையே அதுதானே! அதனால் அதற்கு மண்டைக் கர்வம் அதிகமாகிவிட்டது. கையில் சாட்டையை வைத்துக்கொண்டு சடார் சடாரென்று சுழற்றும் பாகன் சர்க்கஸ் கூடாரத்தில் யானையை ஆட்டிப் படைப்பதைப்போல, இந்த மனம் மனிதனை ஆட்டி வைத்து வேடிக்கைப் பார்ப்பதே தொழிலாகக் கொண்டுவிட்டது.

'என் வழியிலேதான் எல்லாரும் போகவேண்டும்' என்று மனம் கர்வத்தோடு கூறிக் கல

கலவென்று சிரிக்கும். இதைப் பார்த்த ஒரு பாட்டிக்குக் கோபம் வந்தது ஒரு நாள், நெடுங்காலத் துக்கு முன்பே! பாட்டியா? ஆமாம் நரை மூதாட்டி--தமிழைத் தாலாட்டி வளர்த்த ஒளவைப் பாட்டிக்குத்தான் கோபம் வந் தது; மனிதனின் கையைப் பிடித்து நிறுத்திக் கோபத்தோடு உரிமையோடு சொன்னுள் 'மனி தனே! மனம்போன போக்கெல் லாம் போகவேண்டாம்' என்று!

"அதெப்படி முடியும்? என்று மனிதன் கேட்டான்.

"ஏன் முடியாது? முயற்சி திருவினையாக்கும்" என்ருள் மூதாட்டி.

"ஆக்காது — இந்த வினையில் முடியாது!"

"ஏன்?"

"பாட்டியே! நீங்கள் சொல்லு கிறபடி என்னுல் செய்து விட முடியும். மனம் போன போக் கெல்லாம் போகாமல் நான் இருந்து விடமுடியும்,"

"அதைத்தானே நான் செய் யச் சொல்லுகின்றேன்!"

"எப்படி?"

"மனம் போன போக்கெல் லாம் போகவேண்டாம் — இப் படிக் கூறுவது எது? மனம் தான்! நான் மனம் போனபோக் கெல்லாம் போகாமல் இருந்து விட்டால் மனம் கூறியபடிதானே நடக்கிறேன்–மனம்போன போக் கெல்லாம் போகாமல் இருக்க முடியும்?"— இப்படிச் சொன் ஞன் மனிதன். சொன்னது மனி தனல்ல—மனம் அப்படி மயக்கி வைத்திருப்பதால் தான் அதன் படி ஆடுகிருன் மனிதன் என்று வருந்தியவாறே ஒளவைப்பாட்டி கழியை ஊன்றிக் கொண்டே அவனை விட்டுவிட்டு அப்பால் போய் விட்டாள்!

மனத்தின் மண்டைக்கர்வம் அதிகமாகி கொண்டே வந்தது— பொங்கும் அலையைப் போல, பொழுது சாய்ந்ததும் ஒவ்வொரு நாளும் வளரும் பிறயைப்போல, போர் என்றதும் தமிழனின் நெஞ்சில் வீறிட்டெழும் மகிழ்ச்சி யைப் போல, அந்த மண்டைக் கர்வம் பெருகிக் கொண்டே வந் தது. கர்வத்தைத் தூண்டும் நிகழ்ச்சி வரும்போதெல்லாம் மனத்தினுடைய களிப்பு நெய் பாய்ந்த நெருப்பைப் போலத் தாண்டிக் குதிக்கும்.

ஆனுல் மனத்துக்கு ஒரு பெரிய குறை, நீண்ட நாட்களாகவே இருந்து வந்தது. அந்தக் குறை மட்டும் இல்லாவிட்டால்.........? சிறையில் அடைப்பட்ட கைதி வெளி உலகையே எப்போதும் சிந்தித்து வருந்துவதைப்போல, மனம் அந்தக் குறையை எண்ணி எண்ணி வருந்தியது. அந்தக் குறை என்ன தெரியுமா? அது இது தான். கட்டளையிடுவ தென்ன, மனம் கண் ஜாடை காட்டினுலே போதும், வெட்டிவா என்ருல் கட்டிவரும் வீரர்கள் ஐவர் அதன் ஏவல் நோக்கிக் காத்துக் கிடந்தனர்; கல்லைக் கொண்டுவா என்ருல் மலை யையே எடுத்துவரும் கர்மவீரர் கள் ஐவர் அதன் உத்தரவை நிறைவேற்றச் சித்தம் மகிழ்ந்து நின்றனர். ஆனுல்........? ஒரே ஓர் ஆள் மட்டும் மனத்தின் பேச் சைக் கேட்காமல் தன் போக்கி லேயே இருந்து வந்தான், இது அதற்குப் பெரிய அவமானமாக இருந்தது. வாழைப்பழத்தைக் குடையும் வண்டைப்போல்

மனத்தை இக்குறை அரித்து வந்தது. ஒரு நாள் இதற்கு முடிவு கட்டிவிடுவது என்று உறுதி செய்துகொண்டது. உடனே அந்த ஆளைக் கூப்பிட்டு அது உரத்த குரலில் பேசத் தொடங்கியது. கபில ஏற்றத்தில் பூட்டப்பெற்ற மாடுகளைப்போல் முன்னுக்குப் போவதும் பின்னுக்குப் வருவதுமாகிய செயலை ஒரே அளவில் தொடர்ந்து செய்த படியே அந்த ஆள் தன்னுடைய வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தான்—அப்படி இருந்தபடியே மனத்தின் குரலைக் கேட்டுப் பதில் கொடுத்தான். அந்த ஆளின் பெயர் என்ன தெரியுமா? மூச்சு—இதுதான் அவன் பெயர்.

எழில்மலை, எரிமலையாகி வெடித்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது மனத்தின் நிலை பேச்சு எல்லாம்!

"அடேய்! உன்னைத்தான் கூப்பிடுகிறேன், ஏய் மூச்சே! உன்னைத்தான்–நீ, நான் வாழும் இடத்தைவிட்டுப் போய்விடு— ஓடிவிடு. இது என் கட்டளை!"

"எதற்காக?"—மூச்சு என்ற அந்த ஆள் அமைதியாகக் கேட்டான்.

"எதற்காக என்று கேட்கிறாய்? ஏடா மூடா! இந்த இடத்தில் எனக்குப் பயன்படாதவர்கள்—என்னை மதிக்காதவர்கள் இருக்கக்கூடாது. இப்போதே நட. உம் நட!"

"உனக்குப் பயன்படவில்லை–உன்னை மதிக்கவில்லை என்று எப்படி நீ உணர்கிறாய்?"

மனம் இந்தப் பதிலைக் கேட்டதும், தண்ணீர் குதித்த கொதிக்கும் எண்ணெயாகக் குதித்தது. பேசியது.

"மூச்சே! நீங்கள் என்ற சொல்லுக்கு பதிலாக நீ என்ற சொல்லை நீ பயன் படுத்துவதிலிருந்தே என்னை நீ மதிக்கவில்லை என்பது நிலாவிலுள்ள கறைபோல உலகம் முழுவதும் தெரிகிறதே! மூச்சு என்னும் மூடனே! எனக்கு நீ எவ்வாறு பயன் படுகிறாய்? என்னுடைய ஐந்து வீரர்களைப் பார், கண்ணைக் கொஞ்சம் தட்டி விட்டால் போதும், உலகத்து எழிலில் உண்டாகும் எல்லாச் சித்திரங்களையும் எனக்குக் கொண்டு வந்து தருகிறான். கண் என்பவன் ஒரு பொன்னான வீரன்! காதைத்தான் பாரேன். ஒருமுறை சொன்னால் போதும். உலகை உருக்கிக் கடலில் கரைத்து விடும் வன்மைவாய்ந்த இசைக்கனிகளை எனக்குத் தேடி எடுத்து வருகிறான். நாக்கைத் தான் நோக்கேன். பூனையாக இருக்கும் மனிதனைப் புலியாக மாற்றும் அளவுக்குப் பேசுகிறான்—பானைத் தேனானாலும் கட கடவென்று குடிக்கிறான். மூக்கு என்பவனைத்தான் பாரேன். புவனத்தில் எந்தத் தோட்டத்தில் மலர் பூத்தாலும் அதன் நறுமணத்தை அள்ளியள்ளி அனுப்பி வைக்கிறான்; "எதிரியை அணைத்து அவன் எலும்புகளை நொறுக்கவேண்டுமா?— தயார்! ஏந்திழையை அணைத்து இன்பத்தைப் பெருக்கவேண்டுமா?— தயார்! மலைமேல் ஏறவேண்டுமா? அலைகடலில் நீந்த வேண்டுமா? எதற்கும் தயார்;"— என்று சொல்லுகிறான். உடல் என்பவன்! கண்—காது—மூக்கு —நாக்கு—உடல்! ஐந்து கர்ம வீரர்கள் இவர்கள்; என் கட்டளைக்குக் காத்துக் கிடக்கும்

சூரர்கள்; இவர்கள்; இருக்கும் இடத்தில் மூச்சே நீ இருக்கக் கூடாது. நட. இந்த இடத்தை விட்டு இப்போதே நட. உம்—நட!………..''—வானத்திலிருந்து எல்லா நட்சத்திரங்களும் ஒவ் வொன்ருக எரிந்து விழுவதைப் போல மனத்தின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளி வந்து கொண்டிருந்தன. கதிரவன் தன் மீது நெருப்பை அள்ளிக் கொட் டிக் கொண்டிருந்தாலும். கலை மதி தன் மீது பாலாபிஷேகம் செய்துகொண்டிருந்தாலும், தன் னுடைய வேலையிலேயே கண் ணுங் கருத்துமாக இருக்கும் கட லலையைப் போல, மூச்சு மனத் தின் கடுமொழியைக் கேட்டுக் கொண்டே தன்னுடைய வேலை யில் கவனமாக இருந்து கொண்டே மனத்தைப் பார்த்து அமைதியோடு பதில் சொல்லி யது:

> மாற்ருர் வியக்கும்படி பவனி வந்த "பொன்னி"யை நாடு அறியும். இடையில் வழக்கமாக நமக்கெல்லாம் ஏற் படும் புயலின் காரணமாக ஓய்ந்து கிடந்த "பொன்னி" மீண்டும் உலவத் துவங்கியுள் ளது. "பொன்னி" புதுமை ஏடாகத் திகழும் வகையில் திராவிட மக்கள் ஆதரவு அளிக்க வேண் டும். "பொன்னி" வாழ்க!
>
> "திராவிடநாடு"
> 11–4–54

"மனம் என்னும் மாமன் னனே! உங்களுடைய ஐந்து வீரர்களைப் போலவே நானும் உங்களுக்குப் பயன்படும் வேலை யைத்தான் செய்து வருகிறேன்; உண்மையில் அவர்களை விட உயர்ந்த வேலையைத்தான் செய்துகொண்டிருக்கிறேன். உங் களுடைய வேலைக்காரன் தான் நானும்! நம்புங்கள் இதை."

தன்னுடைய வேலையை மரியா தைக்காகக் கூடச் சிறிது நிறுத்தி வைத்துவிட்டுத் தன்னிடம் பேசாது, வேலை செய்து கொண்டே தன்னிடம் பதில் பேசும் மூச்சைப் பார்த்ததும் மனத்தின் கோபம் பொங்கியது. கடகடவென்று இடிமுழங்குவது போல் பேசத் தொடங்கியது மனம்.

"மூச்சே! ஏ முட்டாளே!—நீயா எனக்கு வேலை செய்கிருய்? என்னுடைய வேலைக்காரனு நீ? நீ இருப்பதால்தான் எனக்கு அவமானம். இரவில் உடலைத் தூங்கவைக்கும் போது, நீ குரல் வளையில் சென்று குறட்டைத் தம்பட்டத்தை அடிக்கத்தொடங்கி விடுகிருய். அந்தத் தம்பட்ட ஒலி யைக் கேட்டுக் குழந்தைகள் பேய் என்று குழறி அலறுகிருர் கள். பக்கத்திலுள்ளவர்கள் எல் லாரும் பரிகாச அம்புகளை உடல் மேல் சரசரவென்று பாய்ச்சு கிருர்கள். எரியும் மெழுகு வர்த் தியின் அருகே சென்று அதன் எழிலைக் காணச் சென்ருல் நீ அதை அணைத்துவிடுகிருய். இரைப்பையில் உணவு அஜீ ரணத்தால் தாக்கப்பட்டால் அந் தத் தோல்வியை முகத்தின் அரு கில் நின்று பேசுபவர்களுக் கெல் லாம் பறையறைந்து வெளிப்

படுத்துகிருய்—அவர்கள் முகங்களைச் சுளித்துக்கொண்டு ஓடும்படி செய்து விடுகிருய். இதெல்லாம் போனல் போகட்டும் என்று பார்த்தால், காதலி அருகே இருக்கும்போது அவள் முகத்தில் அனல் காற்ருகி வீசுகிருய்—என் உடலின் மேலுள்ள அன்பால்தான் அவள் இதனைப் பொறுக்கிருள். இல்லா விட்டால் என் கதி என்னுகும்? மூச்சே எனக்கு நீ பயன்படும் வேலையா செய்கிருய் என் வேலைக்காரனு நீ? எனக்கு நீ வேண்டாம் — வேண்டாத வேலைக்காரன் நீ. ஓடு — இந்த இடத்தை விட்டு இப்போதே ஓடு!''

மூச்சு இப்போதுதான் முறுவல் செய்தது. பேசியது, "மனமே!—மன்னர் மன்னனே! உங்களுடைய பேச்சைக் கேட்டாலே என் மூச்சு சற்று நின்று விடுமோ என்று பயப்படுகிறேன். தண்டின் உச்சியில் விரிந்து மலர்ந்துள்ள தாமரை, தண்டைப்பார்த்து 'ஏ! தாயே! மலர்களின் மகாராணியாகிய என்னைப் பெற்றுள்ள நீ கால் வலிக்க வலிக்க இந்தக் குளத்தில் சேற்றில் ஏன் நிற்கிருய்? நறுமணம் வீசுகிறது என் உடலில் — நாறுகிறது சேறு! நீ சேற்றில் நின்ருல் உனக்குக் கால் வலிக்கும் என்பது கூட அல்ல, எத்தனையோ தூரத்து மலைக்காட்டிலிருந்து வரும் என் சித்தம் கவர்ந்தவன்—சிங்காரப் பண்பாடும் காதலன் கருவண்டு என்னைப்பற்றி எவ்வளவு இழிவாக எண்ணுவான். நாற்றுச் சேற்றில் நிற்கும் தாய்க்குப் பிறந்தவளா இந்த நறுமணம் வீசும் தாமரை? நாளடைவில் இவளும் இப்படித்தான் நாற்றத்தில்—கெட்ட நாற்றத்தில் வீடு கட்டிக்கொள்வாள் போலிருக்கிறது. வேண்டாம் இவள் காதல்—தீண்டேன் இவளை—திரும்பியும் பாரேன் என்று கூறி வண்டுக் காதலன் என்னிடம் வராமலே போய்விட்டால் நான் என்ன செய்வேன்? எப்படி வாழ்வேன்? ஏ! தண்டுத் தாயே—சேற்றை விட்டு வா—கரையேறிச் செல்வோம்—கட்டழகு சொட்டும் வீட்டுக்குப் போவோம். இப்படிச் சொன்னதாம் ஒரு தாமரை! மனமே!—ஏ, மன்னவா, உங்கள் பேச்சு இந்தத் தாமரையின் பேச்சைத்தான் எனக்கு நினைவூட்டுகிறது......''

துள்ளிக் குதித்தது மனம் இந்தப் பேச்சைக் கேட்டு!

"மூச்சே! நீ எனக்கு வேண்டாத வேலைக்காரன். வெட்டிப்

## வருந்துகின்ருேம்!

திருச்சி நண்பர், பொன்னியின் அன்பர் தோழர் என். சங்கரன் அவர்கள் 4—4—54-ல் நம்மைவிட்டு மறைந்தார் என்ற செய்தி கேட்டு மீளாத் துயருற்ருேம். அன்னரின் தம்பி சாம்பு அவர்கட்கும் அவரது குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

பேச்சு ஏன்? கட்டு மூட்டையை. இல்லாவிட்டால் எட்டி உதைத்து வெளியே தள்ளுவேன். மரியாதையாக மூட்டை கட்டு" என்றது மனம்.

உடனே மூச்சு பதில் சொல்லியது.

"நான் யாருக்கும் அடிமையல்ல—எல்லோருக்கும் நான் தொண்டன்—நல்ல தொண்டன்—வல்லமையான தொண்டன். என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று மூச்சு சற்று கண்டிப்பாகவே கூறியது.

மனம் இதைக் கேட்டு எகிறிக் குதித்தது; வேல்பட்ட வேங்கை போல் உறுமியது. "மூச்சே! ஏ! முழுமூடா! உன்னை உதைத்து வெளியே தள்ளுகின்றேன் பார்—பார்! ஒரு நொடியில் என்ன நடக்கிறது பார்!" என்று மனம் உறுமியது.


**கொக்—சாஸ்திரம்**



தனிமையில் படிக்க—ஆண் பெண் உறவு குறித்த படங்களும், நீங்கள் இதுவரை படித்திராத பல உபயோகமான விஷயங்களும் அடங்கியது.

விலை ரூ. 3. தபால் செலவு ரூ. 1.

**படுக்கையறைப் படங்கள்**

பெண்களின் அந்தப்புர லீலைகள்—படுக்கையறைக் காட்சிகள்—அழகு—இன்னும் வேறு பல காண விரும்புகிறீர்களா? அப்படியானால் இன்றே ஆர்டர் செய்க. 50 படங்கள் கொண்ட செட் 1-க்கு ரூ. 5.

தபால் செலவு ரூ. 1.

இரண்டும் ஆர்டர் செய்தால் ரூ. 8.

H. H. Stores (P. M.)
Post Box 51, MEERUT.


மூச்சு எப்படியெப்படியெல்லாமோ அறிவுரை கூறிப் பார்த்தது. பலன் இல்லை. "எனக்குப் பயன்படாதவன்—என் கட்டளைக்கு அடங்காதவன்—என்னை மதியாதவன்—என் வீட்டில் இருக்கக் கூடாது. வேண்டாத வேலைக்காரன், தூண்டா விளக்கின் சுடர்மீது வீசும் சூறைக் காற்று! அவன் ஒழியவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே மனம் உடலில் இருந்த இரண்டு கைகளுக்கும் உத்தரவிட்டது. ஒரு கை வாயை இறுக மூடிக் கொண்டது. இன்னொரு கை மூக்கை அழுத்திப் பிடித்துக் கொண்டது. மூச்சு என்ன செய்வதென்று தெரியாது திகைத்தது. மனம் 'கக்கக் கடகட'வென்று சிரித்தது! மூச்சு இரண்டு கைகளையும் விரட்ட முயற்சித்தது. ஆனால் மனம் கண்களை ஒரு சுழற்றுச் சுழற்றியது. இரண்டு கைகளும் மூக்கை அழுத்திப் பிடித்ததிலிருந்து—வாயை இறுக்கி மூடியதிலிருந்து விலகவில்லை. மூச்சு பரிதாபமாக அலறியது. எவ்வளவோ காலமாக தான் வாழ்ந்து பணிசெய்து வந்த இடத்திலிருந்து விலக நேரிடுகிறது என்றால், அதற்கு எப்படித்தான் இருக்கும்? இறுதியில் கண்ணீர் விட்டுக்கொண்டே மூச்சு உடலைவிட்டு வெளியேறியது!

வெட்டப்பட்ட மரம்போல உடனே சாய்ந்தது உடல்—தரையில்!

கண்—காது—மூக்கு—நாக்கு—உடல்!........ஐந்து வீரர்களும் 'சத்யாக்ரகம்' செய்துவிட்டார்கள்—ஒத்துழையாமை இயக்கம் தொடங்கி உடனே வெற்றிம்

கட்டத்தில் நிறுத்திவிட்டார்கள். மனம் என்ன சமாதானம் சொல்லியும் அந்த ஐந்து 'வேலைக்காரர்களும்' வேலை நிறுத்தம் செய்துவிட்டனர். மனம் தவியாய்த் தவித்தது.

கொட்டுமுழக்கோடு பிணத்தை எடுத்துச் சென்று சிதையில் வைத்து எரியூட்டினர்.

தீ வேகமாகப் பரவியது. உடலில் அது பிடித்துப் பற்றியது. குடியிருக்கும் மாளிகையே கொளுத்தப்படுகிறது. அதன் உள்ளே இருந்து குய்யோ முறையோ என்று கூக்குரலிட்டு அலறியது மனம்.

தீ வேகமாகப் பரவியது. காற்று வீசியது. அந்தக் காற்றில் மூச்சு ஒரு மூலையில் இருந்தது. மனம் இதைக் கண்டதும் அலறிப்புடைத்துக் கொண்டு ஓடி மூச்சின் காலில் விழுந்தது. கண்ணீர், அப்போதும் மூச்சின் கண்களிலிருந்து வழிந்து கொண்டுதான் இருந்தது; வழிந்த கண்ணீர்த் துளிகள் மண்டியிட்டுக் கிடந்த மனத்தின் மீது பட்டுத் தெறிக்கத் தொடங்கின. இதனுல் மனத்தின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. அழுது கொண்டே மனம் கூறியது. "மூச்சே! நீ வேலைக்காரனல்ல—நீ தான் என் எஜமானன் நீ தான் என் தாய்—நீ தான் என் தந்தை! உன் வாழ்வுதான் நீ என்னிடம் இருந்தபோது எனக்கு வாழ்வளித்தது என்பதை உணர்ந்தேன். மீண்டும் என்னிடம் வா! என் வீட்டில் குடியேறு வா—என்னிடம் வா! நீ வரா விட்டால் நானும் உடலுடன் எரிந்துவிடுவேன். நீ இங்கே வா—இல்லாவிடில் நான் சாவேன்"என்று கதறியதுமனம். பெருமூச்சு விட்டது தன் இயலாமையை எண்ணிய மூச்சு! காற்று வேகமாகப் பரவியது. அந்தத் தீயின் ஜ்வாலையில் மனத்தின் கடைசி அலறல் கரைந்து மறைந்தது!

ஓடிக்கொண்டிருந்த காற்று மூச்சைக் கூடி இழுத்துச் சென்றது. அருமையான இசைவாணன் ஒருவன் அழகான குழலை எடுத்துத் தன் இதழில் பொருத்தினுன். அவனைச் சுற்றியிருந்த காற்றுச் செடியிலெல்லாம் இசை அரும்புகள் பற்றி வெடித்து மலர்ந்தன. அம்மலர்கள் சொரிந்த நறுமணத்திலெல்லாம் மூச்சு முறுவல் புரிந்தது!


பொன்னி வெளி வருவதறிந்து மகிழ்கின்றேன். தமிழகம் பெரிதும் உடனிருந்து ஆதரவளிக்க விரும்புகின்றேன்

"தமிழர்கள் நீடித்த ஆதரவு தருவதில் பழக்கமில்லாதவர்கள்" என்றகுறை தமிழகத்தை விட்டு நீங்கவேண்டும்.

பொன்னியின் செல்வாக்கு தமிழகத்திலும் பிறநாட்டிலும் வளமுற வாழ்த்துகின்றேன்.

அன்பன்

**வீ. முனுசாமி M.P.**

திருக்குறளார்



# முடியாதே!

"வாணிதாசன்"

பாய்ந்தோடும் ஓடையில் தாமரைப்பூ—என்னைப்
பார்த்துச் சிரித்ததே; உன்னைக்கண்டேன்!
தேய்ந்த நிலவல்ல நீயெனக்கே!—உன்னைத்
தேடா திருக்க முடியாதே!

குட்டையில் தேங்கிய பாசியின்மேல்—நீலம்
எட்டிச் சிரித்ததே; உன்னைக்கண்டேன்!
விட்டுப் பிரிந்தாலும் பேரழகே!—உன்னை
விட்டுப் பிரிய முடியாதே!

வீட்டு முருங்கையில் பச்சைக்கிளி—கூச்சல்
போட்டுப் பறந்ததே; உன்னைக்கண்டேன்!
நாட்டைக் கடந்தே இருந்தாலும்—உன்னை
நான்விட்டு நீங்க முடியாதே!


மேய்ந்தோடி வந்தது பெட்டைக்கோழி—அதன்
மென்னடை கண்டேன்; உன்னைக்கண்டேன்!
காய்ந்த வெறியல்ல நீயெனக்கே!—உன்னைக்
காணா திருக்க முடியாதே!

பாண்டத்து வெண்ணெய்யைப் போலநிலா—ஒளிப்
பாலை உருட்டிற்றே; உன்னைக்கண்டேன்!
நீண்ட தொலைவில் இருந்தாலும்—உன்னை
நினைக்கா திருக்க முடியாதே!

# இலக்கியச் செல்வங்கள்


திரு. K. S. மகாதேவன், M.A., B.Sc.

அரசினர் கலைக்கல்லூரி, கோவை.

முதுவேனில் காலம் :

முழுமை பெற்ற முதுவேனில் கொடுங்கோல் ஓச்சுங் காலம்; காலையிலும் மாலையிலுங்கூட ஞாயிறு நண்பகல் போல் காய்கின்றது. நீர் நிலைகள் யாவும் வறண்டு விட்டன. நிழல் என்பதே இல்லையென்றாகிவிட்டது, நிலமோ நெருப்பால் அடித்தாக்கிய தகடாக மாறிவிட்டது. விலங்குகளும் பறவைகளும் வெப்பத்தால் வாடி இன்பமிழந்து துன்பமுறுதல் காணப் பொறுக்காத காட்சியாகும். வெய்யிலிலே பழுக்கக் காய்ந்து வேல் போன்ற கூர்மையுடன் அடியினைக் கிழிக்கும் பரல் நிறைந்த அப்பாதையில் யார் தாம் செல்லக் கூடும்?

இருந்தாலும், உயிர் வாழ்க்கை இம்மண்ணுலகில் நடைபெற்றுத்தானே யாகவேண்டும்! இலைகள் வாடி உதிர்ந்த கடப்பமரத்தின் வரி நிழலிலே வழி நடத்தலினால் களைப்படைந்து விறலி ஒருத்தி தங்கியிருக்கின்றாள், கற்புக் கடம் பூண்ட அப்பெண்ணின் கூந்தல் கார் மேகம்போல் இருண்டு தோன்றுகின்றது. விழிகள் மான் போல் மருண்ட தன்மையுடையவை. தொடைகள் வாழைத் தண்டினை ஒத்திருக்கின்றன. நடத்தலினால் வாடியிளைத்த அவள் அடிகள் ஓடி இளைத்த நாயின் நாக்குபோன்று மெலிந்துள்ளன. பற்கள் முல்லை முகை போன்றன. மீண்டும் அப்பாலையில் எவ்வளவு தொலைவு செல்ல வேண்டுமோ?— இதை எண்ணியபடி அவ் விறலி ஏங்கியிருக்கின்றாள்.

அருகிலே அமர்ந்திருக்கின்றான் பாணன், கலையின் ஆழங்கண்டு தெளிந்த அவனுக்கு, அந்தோ! வறுமைக் கடலை நீந்த முடியாத நிலை! பொன்னால் வார்த்தெடுத்தது போன்ற முறுக்கிய நரம்பினையுடைய சீறியாழை இடப்பக்கத்தே தழுவியபடி இன்னிசையை எழுப்புகின்றான். அவன் வாசிப்பது நட்டபாடை என்னும் நயம் மிகுந்த பண். பாலைவெளி முழுவதும் பாய்ந்தோடும் அவ்வினிய இசை வெள்ளம் அங்கும் ஒரு பசுமையைக் கொணரத்தான் செய்கின்றது.

ஆ! ஆ!! காலந்தான் எப்படி அடியோடு மாறிவிடுகின்றது! இன்று வெந்தழலில் உருமாறிக்கிடக்கும் இவ்வழி, ஒரு காலத்தில் எத்துணை எழில் வழிய நின்றது! இளவேனிலின் நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். மண்மகளின் மார்பிலே கிடந்து அசையும் வெண்முத்தாரம் போன்று, காட்டாறு ஒன்று மலைகளுக்கிடையே வளைந்து வளைந்து இறங்கி வந்துகொண்டிருந்தது. ஆற்றின் பெருக்கால் குளிர்ச்சியடைந்த கரையில் உள்ள மரங்கள்யாவும் குலுங்கக் குலுங்கப் பூத்து நின்றன. இன்னிசை பாடும் குயில்களின் அலகினுல் கோதியுதிர்க்கப்பட்ட அம்மலர்கள் ஆற்றின் கருமணலிலே வீழ, அம்மணல் இளவேனில் மங்கைத் தன் எழில் கூந்தலை விரித்தது போலக் காட்சி தந்தது. அத்தகைய இளவேனில் பருவம் இன்று எங்கேயுள்ளது? ஏன்? வாழ்க்கையும் இப்படித்தானே!

எண்ணச் சுழலிலே ஆழ்ந்தும் இசையின் ஓட்டத்திலே மிதந்தும், பரிசில் அளிக்கும் வள்ளல்களைப் பெருது வருந்தும் ஏழைப் பாணன் முன், களிறும் தேருங்கைக் கொண்டாஞக எதிர்ப்படுகின்ருன் மற்ருெரு பாணன். வறுமையின் பிடியிலே அகப்பட்டு வாடும் இவனுக்கு வழி காட்ட வேண்டும் என்பதோர் கடமை யுணர்ச்சியினுல் உந்தப்பட்டு, ஆற்றுப்படுத்துகின்ருன். ஆனுல் உலகம் முன் போலவா இப்பொழுது இருக்கின்றது?

**சேரநாட்டின் சிறப்பு :**

செழிப்புக்கு ஓர் எடுத்துக் காட்டு சேர நாடாகும். கொழுத்த மீன்கள் குளம்புகளிலே பட்டு நொறுங்க எருமை வயலிலே நடந்து ஆங்குள்ள செங்கழு நீர்ப்பூவை உண்ணும். உண்டகளைப்பு நீங்கப்பின் மிளகுக் கொடி படர்ந்த பலாமரப் பந்தரின் கீழ் காட்டு மல்லிகைக் கொடியாலமைந்த படுக்கையில் மெத்தென்று கிடக்கும். காற்றினுல் உந்தப்பட்டு, அருகிலுள்ள மஞ்சள் செடியின் மெல்லிலை அதன் புறமுதுகைத் தடவிக் கொடுக்கின்றது. எருமை தான் உண்ட செங்கழு நீர்ப் பூவைக் காடெல்லாம் தேன் மணக்கும்படி மெதுவாக அசைபோட்டுப் பின்

கண்ணை மூடியபடி உறங்கி விடுகின்றது! விளங்குகின்ற விற்கொடியை இமயத்தில் பொறித்த இரும்பையொத்த தோளினையும், விரைந்து செல்லும் தேரினையுமுடைய சேரர் பெருமான் ஆண்ட அவ்வளநாட்டின் தலைநகர் வஞ்சி யாகும். . ஆனால் அது வறிதாகி விட்டது!

**பாண்டிய நாட்டின் பண்பு:**

தமிழன்னை தவழ்ந்து விளையாடி வளர்ந்த தொட்டில், பாண்டிய நாடு. அழகிய முத்துக்களைக் காணிக்கையாக வைத்து அலைகள் அடிவருட வீற்றிருக்கும் நகரம், அந்நாட்டின் தென் பகுதியிலுள்ள கொற்கை. உப்பு வணிகரின் வண்டிகளை நெட்டி மாலை பூண்ட நல்லெருதுகள் உள்நாடு நோக்கி நெடுந்தூரம் இழுத்துச் செல்லும். வண்டிகளின் பின்னே வந்து சேர்ந்த குரங்குக் குட்டிகளை வணிகர்கள் தம்பிள்ளைகளைப் போலப் போற்றி வளர்ப்பர். கணவரிடத்து நீங்காத அன்பு கொண்ட உமட்டியர் தங் கூந்தலை ஐந்து வகையாகக் கோதி முடித்திருப்பர். குழந்தைகளின் கைகளில் கிலு கிலுப்பைகளைக் காணும் குரங்குக்குட்டிகள் வாள்போன்ற கிளிஞ்சிலில் முத்துக்களை யிட்டுத் தாமும் அவர்களுடன் கிலுக்கி விளையாடும். வெண் கொற்றக் குடையையும் வெற்றி மாலையையும் தேரையும் உடைய பாண்டியர் தம் அழகிய வளநாட்டின் தலைநகர் மதுரை. அதுவும் இப்பொழுது வறிதாகப் போய் விட்டது!

**சோழ நாட்டின் செழுமை:**

சோழ நாடோ சோறுடைய நாடு. மருதநிலத்தே உயர்ந்து நிற்கும் மரக்கூட்டங்கள் மாலை மாலையாகப் பூத்திருக்கும். இந்திர கோபத்தை யொத்த பூக்களின் சிவந்த தாது உதிர்ந்து பரந்திருப்பதால் நீர் உண்ணும் துறையானது ஓவியம்போல் காட்சி தரும். அத்துறையிடத்து முகம் போன்று மலர்ந்த தாமரையின் சிவந்த தவிசிலே பெடையுடன் கூடிய தும்பி மகிழ்ந்து 'சீகாமரம்' என்ற பண்ணைப்பாடும். நல்ல புகழையுடைய சோழ மன்னன் ஆண்ட இந்நாட்டின் தலைநகர் உறையூர். ஆனால் இன்றோ அதுவும் வறிதாகிவிட்டது!

# குடியுயர

"எழில் வேந்தன்"

தற்கால வுலகிலே தன்னலமே யுருவாயமைந்த தன்மையுடையோரை மிகுதியாகக் காணுகின்றோம். பொதுநலங் கருதியுழைக்கும் ஒருசிலரும் வாழ்க்கைப் போராட்டத்தாலும், பேராசையினாலும், வேறு சூழ்நிலைகளாலும் தன்னலமுடையராய் மாறுங் காட்சியைக் காணுகின்றோம். இந்நிலை நீடிக்குமாயின் இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் கழிந்தாலும் தமிழகம் தலைநிமிர்ந்து வாழ்தல் அரிது.

தமிழகம் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமாயின் அதன் கண் வாழும் ஒவ்வொரு குடிமகனும் தன்னாலியன்ற அளவேனும் நெறிப்பட்ட வாழ்க்கையை நடத்த முற்பட வேண்டும். வாழ்க்கை என்பது யாது? இதனைப்பற்றி நம் தமிழகத்தில் எழுதுவோர் பலருண்டு. ஆனால், வாழ்ந்து காட்டுவோர் ஒருசிலரே. அச்சிலர் பலராக மாறுகின்றவரையில் இந்நாடு நல்வாழ்வு பெறமுடியாது என்பது அறிஞர்களின் நம்பிக்கை. அத்தகைய நிலையை ஏற்படுத்தப் பாடுபடுதல் அறிவுடை மகனுடைய கடமையாகும்.

வாழ்வின் குறிக்கோள் இன்பம் பெறுதல் என்பதை யாரும் மறுக்க முடியாது. மறுக்கவும் உடன்படார். ஆனால், அவ்வின்பத்தை எவ்வகையிலே பெற வேண்டுமென்பதிலேதான் மக்களின் செய்கைகள் வேறுபடுகின்றன. பிறரை வஞ்சித்து இன்பம் பெற விழைவார் சிலர், பிறரை அறிவாலும், அழகாலும் மயக்கி நெறியல்லா நெறியில் இன்பம் பெற விழைவார் வேறு சிலர். பிறரைத் துன்புறுத்தியேனும் தான் இன்பமுற்றால் போதுமென்றெண்ணுவார் இன்னும் சிலர்; பிறர், தன்பால் கொண்டுள்ள மதிப்பையும், நல்லெண்ணத்தையும் முதலீடாகக் கொண்டு அவர்தம் வாழ்வைக் கெடுத்துத் தம் வாழ்வை உயர்த்திக்கொள்ள நினைப்பார் மற்றும் சிலர். இவை யாவும் அறநெறியல்ல. '' துன்புறான் பிறரை இன்புறுத்தலும் துன்புறுத்தாது தான் இன்புற்று வாழ்தலும் உலக வாழ்க்கையின் உட்கருத்தாகும் '' என்ற ஆன்றோரின் வாக்குப்படி வாழ்க்கை நடத்தலே அறநெறியாகும். அத்தகைய வாழ்வை மற்றவர்களும் மேற்கொள்ளுமாறு தூண்டுதலே அறிவுடைய குடிமகன் தன் சமுதாயத்திற்குச் செய்யவேண்டிய பணியாகும்.

அழிந்த சமுதாயம் ஆக்கம்

பெறுதற்கும், இழிந்த சமுதாயம் ஏற்றம் பெறுதற்கும், நலிந்த சமுதாயம் நலம் பெறுதற்கும் வள்ளுவப் பெருமகன் வழிகாட்டுகின்ருன். சமுதாய வளர்ச்சிக்கு அடிப்படையான தேவை ஆள்வினை என்ருன். ஆள்வினை என்பது உடல் முயற்சியைக் குறிக்கும். உடல் முயற்சியே உயர்வுக்கு அடிப்படை என்பது வள்ளுவன் கருத்து.

இதனைப் படிக்கும்பொழுது நமதுள்ளத்தில் ஓர் ஐயப்பாடு எழுகின்றது. உடல் முயற்சியுடையோராய், உழைப்பதையே பெருமையாகக் கருதுகிறவராய், உழைத்தாலன்றி வாழ்வில்லை என்ற நிலையினராய், 'வினையே ஆடவர்க்குயிர்' என்ற தொன்மை மிகுந்த இலக்கணமாம் தொல்காப்பியத்திலமைந்த தொடரின் பொருளை அறியாமலேயே அதன் வழி வாழ்வோராய் அமைந்த மக்களைக்கொண்ட பெரியதொரு சமுதாயம் இன்று பல்வகைத் துறைகளிலும் படு பாதாளத்திலிருப்பது ஏன்? என்பதே அவ்வையப்பாடாகும். அதனை நீக்கும் வகையிலே வள்ளுவர் ஆள்வினை என்பதற்கு அடுத்தபடியாக 'ஆன்ற அறிவு' என்ற தொடரை அமைத்துள்ளார். 'ஆன்ற அறிவு' என்பது கல்வி கேள்விகளாலும் உலகியல் அனுபவத்தாலும் நிறைந்த அறிவு எனப் பொருள்படும். அத்தகைய அறிவின்றி வெறும் உடலுழைப்பு மட்டுமிருப்பின் அவ்வுழைப்பின் பயனை அச்சமுதாயம் துய்க்க இயலாது. இங்கும் ஓர் ஐயப்பாடு எழத்தான் செய்கிறது.

அஃது யாதெனில், பல்கலைக் கழகப் பட்டங்கள் பெற்ற பல பேரறிஞர்களும், பாராளு மன்றத்திலே இடம் பெற்ருேர்களும், உலக அறிஞர்களால் உண்மையாகவே உயர்த்திப் பேசப்பட்டவர்களும் தமிழர் சமுதாயத்திலே தோன்றி வாழ்ந்தார்கள்; வாழ்கின்ருர்கள். இத்துணையமைந்திருந்தும் இச்சமுதாயத்தில் முன்னேற்றம் காணப்படாதது ஏன்? என்பதேயாகும்.

அத்தகைய அறிஞர்களிற் சிலர் தன்னலங் கருதி வாழ்கின்றனர். பிறர்நலங் கருதிப் பாடுபடுகின்ற சிலரும் தொடர்ந்து அப்பணியைச் செய்யாது இடையே நழுவவிடுகின்றனர். தாம் உயர்நிலையுற்றபின் மற்றவர் நலத்தையும், அவர்கள் அடைகின்ற தொல்லையை எண்ணிப் பார்க்கவும் மறக்கின்றனர். மறுக்கவும் செய்கின்றனர். இதனாலும் இச் சமுதாயத்தின் முன்னேற்றம் தடைப்படுகிறது.

இதனையும் எண்ணியே வள்ளுவர் அதற்கடுத்தபடியாக 'என இரண்டின் நீள்வினையால் நீளுங் குடி' என்ற தொடர்களால் சமுதாய முன்னேற்றத்திற்குரிய செயல்களைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்ற கருத்தை விளக்கியுள்ளார்.

மேற்கூறிய கருத்துகளெல்லாம் அமைந்து விளங்கும் குறள்,

ஆள்வினையும் ஆன்ற அறிவும்
எனவிரண்டின்
நீள்வினையால் நீளுங் குடி.

என்பதேயாம்.

இவையாவும் தமிழர்களால் உணரப்பட்டு அவர்தம் வாழ்க்கையில் மேற்கொண்டொழுகி நலிவடைந்த சமுதாயத்தை நலம்பெற்றதாக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் வெளியிடப்பட்டனவாகும். படித்துணர்ந்து பயன்பெறுக.

# பெண்களால் முன்னேறக்கூடும்

●

டர்பன் ச. மு. பிள்ளை

கி. பி. *1481*-ம் ஆண்டு ஆஸ்டிரியா தேசம் சுவிட்சர்லேண்டின் மீது படை யெடுத்தது. சுவிட்சர்லேண்டுக்குப் படைபலம் அதிக மில்லை. இதனுல் சொற்பப் படையைக் கொண்டே ஆஸ்டிரியர்களை எதிர்க்க ஆரம்பித்தது. 'செம்பாக்' என்ற இடத்தில் போர் நடைபெற்றது. ஆஸ்டிரியர்கள் நீண்ட ஈட்டிகளைக் கையிலேந்திக் கொண்டும், சுவர் மாதிரி இடைவிடாமல் வரிசையாக அணிவகுத்துக் கொண்டும் முன்னேறிச்சென்ருர்கள். சொற்பப் படையினரான சுவிஸ்கள் கையில் குறுகிய ஈட்டிகளே ஆயுதங்களாபிருந்தன. எனவே தோல்வியை ஒப்புக்கொண்டு கலைந்து போக வேண்டிய நிலையிலிருந்தார்கள்.

இந்தச் சமயத்தில் ஒரு போர் வீரன், தோல்வியை ஒப்புக்கொண்டு ஓட மனமில்லாதவனுய் தன் சகோதர போர் வீரர்களை மற்றுமொருமிறை உற்சாகப் படுத்திப் பார்க்கலாமென்று தீர்மானித்தான். அப்படியே சுவிஸ் போர் வீரர்களைப் பார்த்து ''என் தாய் நாட்டுச் சகோதரர்களே! நான் சுதந்திர பாதையைத்திறந்து விடுகிறேன். என்மனைவி மக்களைக் காப்பாற்றுங்கள்'' என்றுசொல்லி விட்டு, மற்றப் போர் வீரர்களில் சிலருடைய ஈட்டிகளையும் வாங்கிக் கொண்டு, ஒரே மூச்சாக ஆஸ்டிரியப் படையின் நடுவில் நுழைந்துவிட்டான். ஆஸ்டிரியப் படை வழிவிட்டது. அந்த வழியில் சுவிஸ் போர் வீரர்கள் வெற்றி முழக்கத்துடன் பிரவேசித்தார்கள். விங்கல்ரீட் என்ற அந்த சுவிஸ் போர் வீரன், ஆஸ்டிரியப் படைக்குள் நுழைந்து இறந்து விட்டான் என்பதென்னவோ உண்மை. ஆனுல் அவன் நாடு காப்பாற்றப் பட்டதல்லவா ?

இந்த போர் நடைபெற்றது *1481*–ம் ஆண்டு ஜுலை மாதம் 9-ஆம் தேதியன்று. இப்பொழுது கூட பிரதி ஆண்டு அந்த நாளை சுவிஸ்கள் தங்கள் தேசீய தினமாகக் கொண்டாடி வருகிருர்கள் விங்கல்ரீட் என்ற தங்கள்தலைவனை வழிபடுகிருர்கள். இவன் ஒரு சாதாரண போர் வீரனு? இல்லை! இவனை ஒரு மகானென்றே சொல்ல வேண்டும். இதனுல்தான் சுவிஸ் தேசத்தார் இவன் வசித்த வீட்டை ஒரு யாத்திரை இடம் போல் இன்னும் காப்பாற்றி வருகிருர்கள். இவன் அணிந்திருந்த சல்லடம், உபயோகித்த ஈட்டி முதலியவைகளும் காப்பாற்றப் பட்டு வருகின்றன, ஆங்காங்கு இவனுக்கு உருவச் சிலைகள் ஏற்பட்டிருக்கின்றன.

சுவிட்சர்லேண்ட் வாசிகளில் ஆண்களுக்கு மட்டுந்தான் இந்தச் சுதந்திரப் பற்று, தியாகஉணர்ச்சி

விற்பனையாளர் தேவை :

செங்கல்பட்டு
பவானி
போடி நாயக்கனூர்
பல்லடம்
தர்மபுரி
கொடைக்கானல்
குன்னூர்
கள்ளிக்கோட்டை
பாலக்காடு
தலைச்சேரி
பூந்தமல்லி
திருவள்ளூர்
அரக்கோணம்
காட்பாடி
ஜோலார்பேட்டை
கிருஷ்ணகிரி
திருப்பதி

முன்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

பொன்னி லிமிடெட்
*111*, பவழக்காரத் தெரு,
சென்னை—1.

முதலியன இருக்கின்றனவென்றில்லை. பெண்களின் வீரமும் தியாகமும் அந்த நாட்டு இதிகாசத்தில் மகாபிரசித்தமானது. மேற்படி செம்பாக் யுத்தம் நடைபெற்ற சுமார் இருநூறு வருடங்களுக்குப் பிறகு அதாவது கி. பி. *1622*-ம் ஆண்டு ஆஸ்டிரியர்கள் மீண்டும் சுவிட்சர்லேண்டின் மீது படையெடுத்தார்கள். ஆஸ்டிரியர்கள் எவ்வித சந்தடியும் செய்யாமல் ஒரு பெரும் படையினராக சுவிட்சர்லேண்டிலுள்ள ஒருகணவாயில் வந்து சேர்ந்தனர். அந்தக் கணவாயில் பல கிராமங்கள் இருந்தன கிராமவாசிகளில் ஆண்கள் தங்கள் அறுவடை முதலியவற்றைக் கவனிக்க மலைமீது சென்றிருந்தனர். ஆஸ்டிரியப் படை வந்த தருணத்தில் பெண்கள் மட்டுமே கிராமங்களில் இருந்தனர். ஆஸ்டிரியப் படை வந்ததைப் பார்த்த இந்தப்பெண்கள் அத்தனைபேரும் ஒன்று சேர்ந்தனர். வீடுகளிலே கிடந்த மண்வெட்டி, கோடாரி முதலிய அகப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு ஆஸ்டிரியப் படையை எதிர்த்தனர். எதிர்பாராத இந்த எதிர்ப்பைக் கண்டு ஆஸ்டிரியப் படை சிதறி ஓடிவிட்டது. சுவிட்சர்லேண்டின் சுதந்திரம் மீண்டும் ஒருமுறை காப்பாற்றப்பட்டது. யாரால்? பெண்களால்! இதனால் தான் இன்றுகூட சுவிட்சர்லேண்டில், பெண்களுக்கு அதிகமான சலுகைகளும் உரிமைகளும் இருந்து வருகின்றன. எனவே பெண்களால் முன்னேறக்கூடும் நம் நாடும் பிறவும் என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

# நல்வாழ்வு

"வாழ்நன்"

நல்வாழ்வு என்று கூறும்போதே நாவிலே ஒரு நற்சுவை பிறக்கிறது. ஆதலின் நல்ல வாழ்வை விழையாத மாந்தர்கள் நானிலத்திலுண்டோ? நவில்மின் மாக்கள் முதல், புல் பூடுகள் வரை நல் வாழ்வை நாடியே நிற்கின்றன. நல் வாழ்வு ஏற்படின் நாகரிகம் வளரும், நற்பண்பு தோன்றும், நற்றொழில் பலபெருகும், நல்லோர் நிறைவர், நன் மக்கள் பலர் நடமாடுவர், அறம் வளரும் மறம் மடியும், அன்புகொழிக்கும் வன்பு கொலைக்களம் செல்லும். வறுமை ஒழியும், வண்மை சிறக்கும். இரப்போர் ஒழிவர் புரப்போர்க்கு வேலையிராது. அறமன்றங்களும் ஆவணக்களரியும் தேவையிராது. தண்டனையளிக்கும் தண்டலர்களும், குற்றத்தடுப்புக் குழுவினர்களும் தேவைப்படார். மக்கள் பணியாற்றும் மனிதனே தேவைப்படுவான். இன்னோரன்ன இன்பம் எதுபோது தோன்றும்? அதன் சூழ்நிலை யாது என்பன குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்காகும்.

நல்வாழ்வு என்று நவின்றவுடன் பஞ்சணை மெத்தையிலே, பத்தடுக்கு மாளிகையிலே, தேனும் பாலும் உண்ணும் தெவிட்டாத வாழ்விலே ஆடவும் கூடவும் அணி அணியான அழகிய அணங்குகள் பல்லோருடனே எடுக்கவும் பிடிக்கவும் ஏவலர் பலருடனே பார்க்கவும் களிக்கவும் படக்காட்சிகள் பல வற்றுடனே காற்றைப் போல் கடுகிச் செல்ல, கால் தரையில் படாதிருக்க கவர்ச்சி மிக்க ஊர்திகள் பல பெற்று வாழும் உல்லாச புருடர்களின் வாழ்க்கையென்று நீங்கள் நினைப்பீர்களானல் அது முற்றிலும் தவறு. பின் யாதென வினவின் நரைதிரையின்றி, மூப்புப்பிணியின்றி, நெஞ்சில் அச்சமின்றி நன்மக்கள் சூழவாழ்வதே யாகும். அது எவ்வாறு இயலுமென்றல்? புறநானூறு, என்னும் எட்டுத்தொகை நூலிலே புதுமையும் பழமையும் கொழிக்கும் தமிழ்க் கடலிலே மூழ்குதல் வேண்டும். மூழ்கின் விலையுயர்ந்த பல நன் முத்துக்கள் கிடைக்கும். அவ்வாறு நான் எடுத்த அரு விலை முத்தொன்றை எல்லோரும் பெற்று இன்பம் எய்துமாறு இதோ தருகின்றேன். முத்தின் நலனுணர்ந்த நற்றமிழ்மக்களும் ஏனையோரும் அதனைப்பெற்று அதன் பெருமையுணர்ந்து நன்னிலை அடைவார்களாக.

வான்பொய்ப்பினும் தான் பொய்யாத பொன்னியென்னும் பொற்புடை ஆற்றின் பாய்ச்சலால் சோற்று வளமும் அறிவு வளமும் மிக்கு விளங்கும் சோழ நாட்டைக் கோப்பெருஞ்சோழன்

ஆண்டு வருகின்றான். அதே காலத்தில் பழந்தமிழ் வளர்த்த பண்புடைப் பாண்டிய நாட்டில் பிசிர் என்ற ஊரிலே வாழும் ஆந்தையார் சோழனின் சிறப்பையும், செங்கோலின் செவ்விய முறையையும், புலவர்களைப் புரக்கும் புகழ் மிகு செயலையும் கேள்விப்படுகிறார், அஃதே போன்று சோழனும் புலவரின் புலமையையும் அவர் தம் இன்குண நலனையும் கேள்வியுற்று வள்ளுவர் வரைந்தாங்கு ஒருவரை ஒருவர் நேரில் காணாதே பழகாதே "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதவம் நட்பாம் கிழமை தரும்" என்ற பொய்யா மொழிக் கேற்ப நட்புக் கொள்ளுகின்றனர். சின்னாள் சென்ற பின்னர் வேந்தன் வடக்கிருக்கின்றான். இதனையறிந்த புலவர் அவ்விடம் நோக்கி வருகின்றார். அதனைக் கண்ணுற்ற சான்றோர்கள் பிசிராந்தியாரைப் பார்த்து ஆண்டு நூறுக்கு மேலாகியும் நரை திரையின்றி இந்நல்லுடலைப் பெற்றிருப்பதன் காரணம் என்னை? என்று வினவ அவர் கீழ் வருகின்ற நல்ல முத்துக்களை எடுத்து வீசுகின்றார்.

**"யாண்டு பலவாக நரையில வாகுதல்**
**யாங் காகிய ரெனவினவு திராயின்**
**மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்**
**யான் கண்டனைய ரென் இளையரும் வேந்தனும்**
**அல்லவை செய் யான்காக்கும் அதன்தலை**
**ஆன்ற விந்தடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர் யான் வாழுமூரே"**

என்று நயம்பட உரைக்கின்றார்.

அன்பர்களே, இலட்சக் கணக்கான உங்களுள் யாருக்காவது இப்பாட்டின் கண் அவர் அறிவிக்கும் ஏதுக்களை, நல்வாழ்விற்கான நல்ல முறைகளை மாணவர்கள் மட்டுமன்று ஆசையையும் மனமாசையும் நீக்கும் ஆசிரியப் பெரியோர்களும், வருங்கால இந்தியாவை வளமாக்கும் வாலிபர்களும், கலையறிவு மிக்க கலைஞர்கள், அரசியல் சூதாட்டத்தில் ஈடுபாடுடைய அன்பர்களும், மதி மிக்க மந்திரிகளும் சமூக நலன் நாடும் சமுதாயத் தொண்டர்களும், சீர் திருத்த எண்ணமுடைய சிந்தனைச் சிற்பிகளுமாகிய அனைவரும் அறிய வேண்டுவதொன்றாகும்.

உரிமை பெற்ற நாட்டிலே வாழும் நாம் நல் வாழ்வு வாழாவிட்டால் பிற நாட்டார் நம்மைப் பார்த்து நகைப்பாரன்றோ? நல்வாழ்வில் நாட்டங்கொண்ட நற்றமிழ் மக்களே! அவ்வாழ்வு உண்டாக, புலவர் மணி கூறுவதை உன்னுங்கள். பிறகு தெரிந்துகொள்ளுங்கள். அவரது திறத்தை செப்பிடும் முறையை மாட்சிமைப்பட்ட குண நலன்களும் கற்பெனும் திண்மையும் ஒருங்கே அமைந்த மனையாளும், அறிவு நிரம்பிய மக்களும், யான் கூறுமலேயே என் குறிப்பறிந்து பணியாற்றும் பணி மகனும், பொருந்தாத தீயவற்றைச் செய்யாதும் நேர்மை தவறாதும், பிறர் தீங்கு செய்யின் அதினின்று நம்மைக் காக்கும் நாடாளும் நல்ல தலைவரும், கல்வி கேள்விகளால் நிறைந்து அறிவு முதிர்ந்து, பணிவும் பண்பும் மிக்கு நல்ல கொள்கைகளையே நல்ல நண்பர்களாகக் கொண்டொழுகும் ஆன்றோர்கள் பலரும் தாம் வாழுகின்ற ஊரிலே இருப்பதால் தமக்கு ஆண்டு பல

வாயினும் நரைதிரையின்றி நல்வாழ்வு பெற்றிருப்பதாக நவில்வதைக் கேட்கும் நாமும் அவர் உரைத்த அச் சூழ்நிலையுண்டாக இன்றுமுதல் தயங்காதுழைத்துத் தமிழகத்தைத் தட்டியெழச் செய்யவேண்டும், இன்றேல் வெறும் விஞ்ஞான வளர்ச்சியால் விபரீத விளைவுகளே பெருகி நாடு நாசமடையும். ஆதலால் இன்றைய அரசியல் பொறுப்பேற்றுள்ள அறிஞர்கள் இதிலே சிந்தனையைச் செலவிட்டு பிசிராந்தையார் கூறிய முறையிலே நாடும் ஊரும் அமைய நல்ல பல திட்டங்களை வகுத்து

"இதனையிதனாலிவன் முடிக்கு
மென்றாய்ந்ததனை யவன்
கண் விடல்"

என்ற தமிழ் மறைக்கேற்ப அலுவலாற்றும் ஆண்மையுடையோரை, வேண்டியவன் வேண்டாதவன் என்ற விருப்பு வெறுப்பின்றிச் செயலாற்றும் திறன்மிகு தீரர்களைப் பொறுக்கியெடுத்து நாளும் நற்றொண்டு பல செய்யுமாறு நாடாண்டு வந்தாலன்றோ நாடு நாடாவளமுடையதாய் நல்வாழ்வின் பெட்டகமாய் விளங்கும். இதுவன்றோ நல்வாழ்வு. இதுவன்றோ நாட்டிலே நல்வாழ்வு தோன்ற நல்லறிவுடையோர், நாடாள்வோர் செய்தகு திருப்பணியாகுமென்று நான் கருதுவல். ஆதலின் ஆளவந்தாரும் அறிவுடையாரும் ஆவன செய்து அவனியோர் வாழ வழி செய்யுமாறு வேண்டுகின்றேன்.


# பொன்னி

(மாதமிருமுறை)

| | உள்நாடு | வெளி நாடு |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 6—0—0 | ரூ. 7—8—0 |

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது, சிலோனுக்கு மட்டும் வி. பி. பி. மூலமாக அனுப்பப்படும். தனிப்பிரதிக்கு 0—5—0 தபால் தலை அனுப்பவேண்டும்,

உங்கள் சந்தா சம்பந்தமாக அலுவலகத்திற்கு எழுதும்போது உங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிடவேண்டியது அவசியம்.

விபரங்கட்கு:

**பொன்னி லிமிடெட்**

111, பவழக்காரத் தெரு, சென்னை-1

# விநோத மண முறைகள்

*எஸ்.என்.கே.ராஜன்*

**தோடி :**

நீலகிரி மலையின் மேல் வாழும் தோடி என்ற சாதியில் ஒரு வாலிபன் தனக்கு விருப்பமுள்ள ஒரு பெண் கிடைக்காமற் போனால் அவளை அடைந்தே தீர வேண்டும், அல்லது தற்கொலை செய்து கொள்வதாகக் கூறுவான். அதையறிந்து அவனுடைய நண்பர்களும், சுற்றத்தாரும் அவனைத் தலைவனுக்கி அம்மலையிலே வசிக்கும் தோடர்களிடம் சென்று, அவர்களில் பல சாலிகளைச் சேர்த்துக் கொண்டு ஊர் திரும்புவர். பிறகு சுலபமாக விரும்பும் பெண்ணைப் பெறுவான் வாலிபன். மணமும் நடந்தேறும்.

**குட்டன் :**

நீலகிரிச் சமவெளிகளில் வாழும் குட்டன் குலத்தில் ஒருவர் வீட்டில் ஊழியம் செய்ய ஆள் தேவை ஏற்பட்டால் ஊழியம் செய்ய வருபவருக்குத் தன் மகளை மண முடித்துத் தருவதாகத் தெரிவிப்பர். யார் சென்று அவர் வீட்டில் அப்படி ஊழியம் செய்கிருனே அவனுக்கு அவர் தன்மகளை மணமுடித்துத்தருவார் பின்னர் அவன் அக்குடும்பத்தை விட்டு விலகாமல் அக்குடும்பத்தில் ஒரு வார்சு ஆகிவிடுகிருன்.

**தோடர் :**

நீலகிரி மலைத் தோடர்களிடையே பருவமடைந்த பெண் ஒருத்தி மணமாகா முன் விருப்பமான ஒரு புருஷனுடன் தனிமையில் வாழலாம். அதன் காரணமாக அவள் கர்ப்ப முற்ருல் ஐந்தாம் மாதத்தில் அவளைத் தனியாக ஒரு குடிசையில் இருக்க வைத்து சீமந்தம் போன்ற ஒரு சடங்கைச் செய்வர். அதன் பிறகுதான் விவாகத்தைப்பற்றி ஆலோசிப்பார்கள். ஒரு மரத்தில் முக்கோணம் போல் வெட்டி அதில் எண்ணெய் விளக்கை ஏற்றி வைப்பார்கள். பிறகு ஒரு அம்பும், வில்லும் செய்து மணப் பெண்ணிடம் கொடுப்பார்கள். மணமக்கள் அவ்விளக்கின் அருகில் செல்வார்கள். மணப் பெண்ணின் ஒரு கையில் மணமகனின் ஒரு கையும், மற்ருெரு கையில் அம்பும் வில்லும் இருக்கும். அப்படிச் சுமார் ஒரு மணி நேரம் பக்தியோடு அவ்விளக்கையே பார்த்துக்கொண்டு நிற்பார்கள். பின்னர் இருவரும் உறவினரை வணங்குவார்கள்.

மணமகனின் தலைமேல் மாமனர் தன் காலால் மிதித்து ஆசீர் வதிப்பார். எவ்வளவு ஏழை யானலும் இருபது எருமைகளை யாவது சீதனமாகக் கொடுப்பார் பெண்ணின் தந்தை. ஒரு பெண் மணக்காமல் இறந்து விட்டால் தகனத்தின்போது அந்தச் சடங்கை முடித்து விடுவார்கள். அவர்களிடையே விவாகரத்து சர்வசாதாரணம்.

படகர் :

நீலகிரி மலைப் பிரதேசங்களில் வாழும் படகர் என்ற ஜாதி யாரில் ஆண்களுக்கும், பெண் களுக்கும் தத்தமக்கு விருப்ப மானவர்களைத் தேர்ந்தெடுத்து மணக்கும் உரிமையுண்டு. அவ் வாறு ஒன்றுபட்ட ஒரு ஆணும், ஒரு பெண்ணும் உறுதியான மணச் சடங்கிற்கு முன் சிறிது காலம் கணவனும் மனைவியுமாக வாழ்வர். ஒரு ஆண் தனக்குப் பிடித்த பெண்ணின் வீட்டிற்குச் சென்று, பெண்ணின் பெற்றோ ருக்குப் பரிசுகளைக் கொடுத்து, அந்தப் பெண்ணைத் தன்னுடன் சிறிது காலம் வரை மனைவி யின் ஸ்தானத்திலிருக்கும்படி அழைத்து வருவான். ஆனல் பெண்ணுக்கு விருப்பமில்லையேல் அவள் அவனுடன் செல்ல மறுக் கலாம். மேற்கூறியவாறு வாழும் அந்தச் சிறிது காலத்திற்குள் அவர்கள் மனத்தாங்கலாலோ, வேறு எக்காரணத்தாலோ பிரிய நேரிட்டால் அது களங்கமாகக் கருதப்படுவதில்லை. அவ்வாறு பிரிந்தவர்கள் மற்றவரை மணந்து வாழலாம். மணமக் களின் மனம் ஒன்றுபட்டால் மணச் சடங்கு எளிய முறையில் நடைபெறும்.

இடையர் :

மதுரை ஜில்லாவில் வாழும் இடையர்கள் மணமாகி, மஞ்சள் நீராடிய பிறகு மணமக்களுடன் எல்லோரும் ஒன்று சேர்ந்து, ஊருக்கருகிலிருக்கும் குளத்திற் குச் செல்வார்கள். மணமகனின் நண்பனெருவன் ஒரு மண்வெட்டி யையும், ஒரு கூடையையும் கொண்டு வருவான். மணமகன் குளத்திற்கருகில் சென்று மூன்று தடவை மண்வெட்டியால் மண்ணை வெட்டிக் கூடையில் போட்டு நிரப்பிக்கொண்டுவந்து மணப்பெண்ணிடம் கொடுப் பான். அவள் அதைக் கொண்டு போய்த் தூர எறிவாள். பிறகு அவர்கள், “தருமத்திற்கு ஒரு குளம்வெட்டி விட்டோம்!” என்று கூறுவார்கள். இவ்வழக்கம் வறண்ட இடங்களில் இடையர் களுக்கு ஆடு மாடு மேய்க்க அத் தியாவசியமான குளங்களைத் தோண்டுதல் என்பதற்கறிகுறி யாகக் கருதப்படுகிறது.

வன்னியர் :

வன்னியர்களிடையே மண மான மறுநாள் மணமகன் தன் கிராமத்திற்கருகிலுள்ள காலி இடத்திற்குக் கலப்பை, மண் வெட்டி முதலியவற்றை எடுத்துக் கொண்டு போவான். அவனைத் தொடர்ந்து மணப்பெண் ஒரு பழைய சட்டியில் கஞ்சியை ஊற் றித் தலைமேல் தாங்கிச் செல் வாள். மணமகன் மண்வெட்டி யால் கொஞ்சம் மண்ணைவெட்டி பிறகு கலப்பையால் உழுவதைப் போல பாவனை செய்து, மிகக் களைப்படைந்தவன் போலப் பாசாங்கு செய்வான். உடனே மணப்பெண் கலயத்திலிருக்கும்

கஞ்சியைத் தன் கணவனிடம் கொடுப்பாள். அவனும் அதை வாங்கிக் குடிப்பது போலப் போக்குக் காட்டி அதைத் தூரக் கொட்டிவிடுவான். பிறகு அவ் விடத்தில் மண் பாத்திரங்களில் பயிராக்கப்பட்ட பலவித தானி யக்கதிர்களை வைத்துக் கும்பிட்டு அதையும் தூர எறிந்துவிட்டு, அப்பாத்திரங்கள் நிறையத் தண் ணீரை நிரப்பி, மணமக்கள் தலை மேல் சுமந்து வீடு திரும்புவர். அத்தண்ணீரைக் கொண்டு மறு நாள் சமையல் செய்து விருந்து வைப்பர்.

பரெங்க கடபா :

விசாகப்பட்டினத்தைச்சேர்ந்த பரெங்க கடபா (Parenga Gadaba) என்ற ஜாதியாரிடையே இரண்டு வித மணச்சடங்கு நடக்கும். ஒன்று : மணமக்களுக்கு எருது களையும், தானிய வகைகளையும் பரிசாகக் கொடுப்பர். பிறகு மணச் சடங்கின்போது மணமக ளுக்காக இருதரப்பு (ஆண், பெண்வீட்டு) ஆண்களும் தங்கள் முஷ்டியைக் கொண்டு சண்டை யிடுவர். அப்பொழுது மணமகன் மணப்பெண்ணை பலவந்தமாகத் தூக்கிக்கொண்டு எங்காவது போய்விடுவான். பிறகு சண்டை முடிவடைந்து, எல்லோரும் சமா தானமாக அமர்ந்து, விருந்துண்டு மதுவை அருந்தி மகிழ்வர்........

-மற்றொரு வகை : மணம் நிச்ச யமானதும் மணமகன் மணப் பெண்ணை அழைத்துக்கொண்டு, அல்லது பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு அருகிலுள்ள காட் டிற்கு ஓடிவிடுவான். பிறகு சில நாட்கள் கழித்து வீடு திரும்புவர் மணமக்கள். அப்பொழுது மண மகன் இருபது ரூபாயையோ, அல்லது தன்னால் முடிந்த தொகை யையோ பெண்ணின் பெற்றோ ருக்குக் கொடுப்பான். பிறகு இருவரும் கணவனும் மனைவியு மாகக் கருதப்படுவர்.

பகடா :

விசாகப்பட்டினத்தில் வாழும் செம்படவ ஜாதியைச் சேர்ந்த பகடாக்கள் (Bagatas) மணத்தின் போது மாப்பிள்ளை மைத்துன னால் அடிக்கப்படுவான். பிறகு மைத்துனனுக்கு மாப்பிள்ளை புதுத் துணிகளைக் கொடுத்துச் சமாதானப்படுத்துவான்.

பொண்டபொரோஜா :

விசாகப்பட்டினத்திலும், அதற் கருகிலும் வாழும் பொண்டபொ ரோஜா (Bonda Poroja)களிடையே நடக்கும் மணத்திற்குமுன் மணம் செய்துகொள்ளப்போகும் வாலி பனும், மங்கையும் அருகிலுள்ள காட்டிற்குச் சென்று நெருப்பை மூட்டுவார்கள். பிறகு அம்மங்கை அதிலிருந்து எரியும் ஒருகுச்சியை எடுத்து வாலிபனின் தொண்டை யின்மேல் வைப்பாள். அப்போது சூடு பொறுக்கமாட்டாமல் அவன் கத்தினால் அவன் அவளுக்குத் தகுந்தவனல்ல என்று விலக்கி விடுவர். அம்மங்கை ஓராண்டு கன்னியாகக் காலங்கழித்த பிறகு மற்றொருவனை மணக்க லாம். அப்படி மணமகன் கத்தா விட்டால் உடனே மணம் நடந்தே றும். மங்கை வைக்கும் சூடு அவள் வாலிபனின்மேல் கொண் டுள்ள விருப்பு அல்லது வெறுப் புக்குத் தகுந்தவாறு இளக்கமா கவோ, அன்றி சகிக்கவொண்ணா ததாகவோ இருக்கும்.

(தொடரும்)

# உயிர்த் துடிப்பு

*வேலே - வில்லவன்.*

அன்புள்ள வாசகர்களே,

இது கதையல்ல, அறிக்கை. ஆமாம். அறிக்கைதான் அறிக்கை என்றவுடன் இதைப் படிக்காமல் விட்டுவிடுகிறீர்களா? வேண்டாம், வேண்டாம். இதைக் கதையாக வேண்டுமானலும் வைத்துக் கொள்ளுங்கள். கதைக்குக் கதை; அறிக்கைக்கு அறிக்கை.

நான் என்னுடைய இந்த அறிக்கைக் கதையின் மூலம் உங்களுக்குஒரு வேலே தர போகிறேன். சாதாரணமாகக் கதையெழுதும் எழுத்தாளர்கள்வாசகர்களுக்குச் சிந்தித்தல், சிரித்தல், அழுதல்முதலான வேலேகளேத்தான் தருகிருர்கள். ஆனுல் நான் உங்களுக்குத் தரப்போகும் வேலே அந்த ரகத்தைச் சேர்ந்தல்ல. அது கொஞ்சம் புதுமையான வேலே.

அன்பர்களே, நான் ஒரு வாரத்திற்கு முன்பு இழந்துவிட்ட ஒருபொருளே எப்படியாவது மறுபடியும் என்னிடம் சேர்ப்பிக்கும் வேலேயைத்தான் அன்புடன் உங்களுக்குத்தருகிறேன். கொஞ்சுதலுடனும் பணிவுடனும் என்னுடைய அன்புவேண்டுகோளே உங்களுக்கு விடுக்கிறேன், உங்களிடம் நான் உயிர்ப்பிச்சை கேட்கிறேன். என் உயிர்த் துடிப்பு—ஜீவநாடி, நான் இழந்துவிட்ட அந்தப் பொருளிலேதான் இருக்கிறது. அந்தப் பொருளே மீண்டும் நான் அடையா விட்டால் நிச்சயம் செத்து மடிந்து விடுவேன்.

அன்பர்களே, இலட்சக் கணக்கான உங்களுள் யாருக்காவது ஒருவேளே அந்தப் பொருள் கிடைத்திருக்கலாம்; அல்லது இனிக் கிடைக்கலாம்; அல்லது என் மீது அனுதாபங் கொண்டு அதைப்பலரிடம் விசாரித்துத் தேடும் முயற்சியிலீடுபட்டால் கிடைக்கலாம், ஆமாம். நிச்சயமாகக் கிடைக்கலாம்....... நான் ஆறுதலோடு வாழலாம். அது என்ன பொருள் என்கிறீர்களா?

ஒரு கடிதம்! மூன்று மாதங்களுக்கு முன்பு மதுரையிலிருந்து எனக்கு வந்த ஒரு கடிதம். அது ஒன்றும் வெள்ளித்தாளிலே பொன்னெழுத்துக்களால் எழுதப்பட்டதல்லதான். பிறகு எதற்காக இப்படித் துடிக்கிருய்? அது போனுல் போகட்டுமே என்கிறீர்களா? இல்லே, அது அப்படியில்லே.

அந்தக் கடிதம் உங்களுக்கு ஒரு சாதாரணக் கடிதமாக இருக்கலாம். தினந்தினம் உலகம் முழுவதும் சுற்றும். குப்பைக்

கூடைக்குள்ளேபோய் அழுந்திக் கொள்ளும், தீயிலே பொசுங்கும் பலரகமான கடிதங்களுள் ஒன்ருக அது எனக்கு இந்த உலகத்திலே உள்ள மாபெரும் சொத்து; கருத்துப் புதையல்; அன்பு வடிப்பு; தியாகச்சுடர்; ஜீவ முடங்கல்! அது மட்டுமா! நான் இழந்து விட்ட என்னுடைய உயிர்ச் செல்வத்தின் நினைவுச் செல்வமுங் கூட அது! அதைத் தான் நான் இழந்து விட்டுத்தவிக்கிறேன். இந்த ஒரு வாரகாலமாக எங்கெங்கோ தேடிப் பார்த்துவிட்டேன்; பலரிடம் விசாரித்துவிட்டேன்; சொல்லி வைத்திருக்கிறேன். ஆனல் இன்னும் அது எனக்குக் கிடைக்கவில்லை!

இந்தப் பேரிழப்பினல் பிரேத மனிதனுகித் தெளிவிழந்த நிலையில் சிந்தனையில் மூழ்கியிருக்கும் போதுதான் திடீரென்று எனக்கு ஒரு யோசனை பிறந்தது.

'தமிழ் மக்கள் அனைவருக்கும் இதை ஒரு அறிக்கையாக விளம்பரப்படுத்தி அவர்களிடம் அதை என்னிடம் சேர்ப்பிக்க வேண்டிக் கொண்டால்........!'

ஆனல் அந்தத் திட்டத்தை நிச்சயமாக என்னல் நிறைவேற்ற முடியாதென்பது எனக்குத் தெரிந்து விட்டது, செய்தித்தாளில் விளம்பரம் செய்யப் பணம்....? நான்தான் பிச்சைக்காரனைப் போல அலைந்துகொண்டிருக்கிறேனே!

பணச் செலவு ஏதுமில்லாமல் என்னுடைய அறிக்கையைப் பத்திரிகையில் விளம்பரப்படுத்த வேண்டும், அதற்கு வழி? வெகு நேர சிந்தனை! கடைசியில் எனக்கு இந்த யோசனை வந்தது. ஆமாம். 'என்னுடைய அறிக்கையைக் 'கதையாகப் பத்திரிகைக்கு அனுப்பிவைத்தால்....!' என்ற எண்ணம்தான். சோர்ந்து சோபையிழந்து இருந்த எனக்குக் கொஞ்சம் உற்சாகத்தைத் தந்தது இந்தப் புது எண்ணம். இந்த எண்ணம் என் மனத்திலே எழும்பியவுடனேயே இழந்த மடல் நிச்சயமாக எனக்குக் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை என் உள்ளத்திலே முளைவிட்டு விட்டது! தமிழ் நாட்டு ரசிக அன்பர்களைப்பற்றி எனக்குத் தெரியும். அவர்கள் மிகவும் அன்பும் அனுதாபமுங் கொண்டவர்கள்; எழுத்தாளர்களுக்கு அவர்கள் 'பண அபிஷேகம்' செய்ய முடியாத நிலையிலிருந்தாலும் இந்த உதவியைச் செய்ய முடியாத நிலையில் அவர்கள் இல்லை என்பதை நான் நன்ருக அறிவேன். ஆகவேதான் என்னுடைய இந்த அறிக்கையைக் கதையாக விளம்பரப்படுத்த உற்சாகத்துடன்முன் வந்துவிட்டேன். வாசக அன்பர்களே, என் மனசிலே முளைவிட்டிருக்கும் நம்பிக்கையை நீங்கள் தான் உறுதிப்படச் செய்து, பலனளிக்கச் செய்ய வேண்டும்!....

அறிக்கையை எழுதும் போது என் மனசிலே இனந்தெரியாததொரு அசட்டுப் பெருமையும் மகிழ்ச்சியும் எழும்புகின்றன! ஏதோ கதையெழுதத் தெரிவதால் என்னுடைய விளம்பர அறிக்கையை, கதை வடிவிலே பத்திரிகையில் 'ஓசி'யில் வரப் போகிறதே, அதை நினைத்துக் கொண்டால் அவை என் மனத்திலே நிழலாடுகின்றன! அது கிடக்கட்டும்.

அன்பர்களே, நான் இழந்து விட்ட அந்த ஜீவமடல் பத்து நீல நிறக் கடிதாசிகளிலே எழுதப் பட்டிருக்கும். எழுத்துக்கள் அவ்வளவு திருத்தமாக இராது. கை நடுக்கத்துடன் எழுதியவையாகத் தோன்றும் அவை. என் பெயரும் முழு விலாசமும் எழுதப் பட்டதொரு கவரினுள்ளேயே யிருக்கும் அந்த மடல்.

நான் சென்ற வாரம் மதுரைக்குச் சென்று வரும் வழியில் அதைத் தொலைத்து விட்டேன். அது எங்கே விழுந்திருக்குமென்பது எனக்கு விளங்கவில்லை. ரெயிலில்வரும்போது தூக்கமயக்கத்தில் டிக்கட் பரிசோதகரிடம் டிக்கட்டைக் காட்டிய பொழுது, என் சட்டைப் பையிலிருந்த அது வண்டியில் விழுந்திருக்குமா, அல்லது பெட்டியின் ஜன்னலிலே கைகளைப் படிய வைத்துத் தலைசாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தபோது காற்றிலே பறந்து போயிருக்குமா, அல்லது விழுப்புரம் ஜங்ஷனில், காட்பாடி வண்டி புறப்படும் நேரத்தில் விழுந்தடித்துக் கொண்டு ஏறிய சமயத்தில் விழுந்து விட்டிருக்குமா........ அல்லது வேறெங்காவது விழுந்திருக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. அந்தக் கடிதம் நான் மதுரையில் ரெயிலேறும்போது என் ஜேபியிலிருந்தது. வேலூரில் ரெயிலிலிருந்து இறங்கி, டிக்கட் பரிசோதகரிடம் டிக்கெட்டைத் தரும் பொது என் ஜேபியில் இல்லை!....

அது இப்பொழுது இந்த நாட்டின் ஒரு மூலையிலேயோ, யாரிடமாவதோ இருக்க வேண்டும்!

பெரியோர்களே, அந்தக் கடிதத்தைப் பற்றிய முழு விவரங்களையும் உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன். ஏன்? அந்தக் கடிதத்தை அப்படியே எழுத்துக்கு எழுத்து மாறுபாடில்லாமல் உங்களுக்கு எழுதிவிடுகிறேனே! இது உங்களுக்குக் கொஞ்சம் ஆச்சயத்தைத்தந்தாலும் தரலாம். நான்தான் அந்தக் கடிதத்தை மூன்று மாதங்களுக்குள்ளாக ஓராயிரம் தடவைகளுக்கு மேலாகப் படித்தவனாயிற்றே! அது அப்படியே என் நினைவிலே படிந்துபோய் விட்டது. அதைப் படிப்பதிலேதான் எனக்கு எவ்வளவு ஆவல்; ஆர்வம்; ஆறுதல்!.... இப்போது நான் உங்களிடம் அந்த மடலை என்னிடம் சேர்ப்பிக்க வேண்டிக் கொள்வது அதைப் பத்திரமாக வைத்துக் கொண்டு கோடானு கோடி முறை படித்துப்படித்து மனஆறுதல் பெறுவதற்காகத்தான்!

பெரியோர்களே, அந்த ஜீவ முடங்கலில் இப்படித்தான் எழுதப்பட்டிருக்கும்.

* * *

மதுரை.
18-1-'54

அன்பு அத்தான்!

வணக்கங்கள். நீங்கள் இப்பொழுது பூரண சுகத்துடனிருப்பீர்களென்றும் நம்புகிறேன். ஆனல் நான்தான்....! அத்தான், என்னுடைய முந்திய கடிதத்திலேயே அதைக் குறிப்பிட்டிருந்தேனே! நீங்கள் என் நிலை குறித்து விசனப்பட்டு எழுதியிருந்த அந்த வரிகளைப் படித்தேன். :கனகம், நீ இப்பொழுது வியாதிப் படுக்கையிலிருப்பதற்குக் காரணம் நான்தான்.

உன்னுடைய வியாதிக் கஷ்டத்திலே தயவு செய்து என்னை நொந்து அலுத்துக் கொள்ளாதே! நான் உன்னை மன்றாடி மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். எதற்கும் பயப்படாதே. தைரியத்தைக்கைவிட்டு விடாதே. சீக்கிரமே நீ சுகமடைந்து விடுவாய்!' இந்த வரிகள் எனக்கு ஆறுதலைத் தரத்தான் செய்தன.

அத்தான், நான் விரைவிலேயே பூரண சுகமடைந்து விடுவேனென்று உறுதி கூறி என்னைத் தைரியப்படுத்திடும் வகையில் நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். நான் விரைவிலோ, நாள் கழித்தோ சுகம் பெற முடியாதென்பது எனக்குத் தெரிந்து விட்டது. ஆமாம் அத்தான், நான் வியாதியோடு அல்ல மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கிறேன். அணு அணுவாக என் உயிர் என் உடலை விட்டுப் பிரிந்து போய்க்கொண்டேயிருக்கிறது! நான் சீக்கிரமே இறந்து விடுவேன் போலத் தோன்றுகிறது. ஒரு வேளை நான் எழுதும் இந்தக் கடிதமே உங்கள் உயிர்க் காதலி உங்களுக்கனுப்பும் கடைசிக்கடிதமாகவும் இருக்கலாம். அத்தான்,நீங்கள் எனக்கு அறிவுறுத்தியுள்ளதற்கிசைய நான் தைரியத்தைக் கைவிடவில்லை. மரண ஆற்றின் கரையிலே தைரியத்தோடு நிற்கிறேன்.

அத்தான், திடீரென்று உங்கள் தலைமேல் நான் ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போடுவதைப் போன்ற உணர்வு நிச்சயம் உங்களுக்கு உண்டாகி உங்கள் உடலையும் மனதையும் ஒருசேர உலுக்கித் தீர்க்கும். நீங்கள் எனக்காக அதிகமாக வருந்தவோ வேதனைப்படவோ வேண்டாம். நான் மரணமடைவதற்குக் காரணம் தாங்கள் தான் என்று தப்பர்த்தம் செய்து கொள்ள வேண்டாம். ஆமாம். அப்படி நினைப்பது தவறு. காதலின் பலம் பொருந்திய சக்தி தான் அதற்குக் காரணம். அத்தான்! நான் காதலின் ஆழத்தையும் அன்பின் உயரத்தையும் தியாகக்கோல் கொண்டு அளந்து பார்த்துவிட்டேன்.

நான் இறக்கும்போது உம்மைத் தூற்றிக்கொண்டே இறந்தேன் என்றும் எண்ணவேண்டாம். உம்மை நான் எப்போதுமே தூற்றியதோ, நொந்து கொண்டதோ கிடையாது. இனியும் அப்படிச் செய்யமாட்டேன், மாருக உங்களைப் போற்றுவேன். என் இறுதி மூச்சை வெளிவிடும் போதும் நான் அதிலே உமக்கு நன்றியை இழையவிட்டுத்தான் வெளியேற்றுவேன். அவ்வளவு கடமைப்பட்டவள் நான் உங்களுக்கு. நீங்கள் எனக்குச் செய்த உதவிகள் கொஞ்சமா? அளித்த இன்பம் அளவிட்டுச் சொல்லக் கூடியதா? வற்றிப்போயிருந்த என் வாழ்வைச் செழிப்படையச் செய்தவர் நீங்கள்தான்! ஆம். நீங்கள்தான், உமது தூய அன்பு தான்; புனிதக் காதல்தான்! ஆ! அந்தப் பழைய நாட்களை நினைக்கும் போது..........!

அத்தான், இரண்டு வருஷங்களுக்கு முன்பு நீங்கள் மதுரைக்குக் கல்லூரியில் படிக்க வருகிறீர்கள் என்று அம்மா சொன்னபொழுது என் மனசிலே எழும்பித் தவழ்ந்த மகிழ்ச்சி எவ்வளவு தெரியுமா? பதினைந்து வருஷங்களுக்கு முன்பு நாம் இருவரும்

உங்களூரிலே எதிர் வீட்டுக்காரர்களாயிருந்த பொழுது மணல் வீடு கட்டி 'அப்பா-அம்மா' விளையாட்டு விளையாடிய காட்சிகளும், கோடிவீட்டுத்தோட்டத்திலிருந்து மாங்காய்களை அடித்துக் கொண்டுவந்து இருவரும் அந்தப் புளிப்புக்காய்களைச் சுவைத்துச் சுவைத்து சாப்பிட்டு மகிழ்ந்த அந்தக் காட்சிகளும் இன்னும் அந்தக் காலத்திலே நமது பிஞ்சு மனங்களிலே துளிர்விட்டு ஒன்

வெட்கமாக யிருந்தது. ஆனல் நீங்கள் வரும் நாளைத் தெரிந்து கொள்ள இனந்தெரியாததொரு புது ஆவல் பிறந்துவிட்டது. உங்கள் கல்லூரி விரிவுரையாளர் ஒருவரின் மகளான என் தோழியிடம் 'கல்லூரி எப்பொழுது திறக்கிறார்கள்?' என்று கூடக் கேட்டுவிட்டேன் என்றால் பாருங்களேன்! 'இன்னும் பதினைந்து நாட்கள் இருக்கின்றன!' என்று அவள் கூறிய பொழுது என்னு




றோடு ஒன்று இழைந்து தழுவி நின்ற அந்தப் பலம் பொருந்திய அன்பின் ஏவலால் நாம் இயங்கி விளையாடிய பலப்பல காட்சிகள் என் கண்முன்னே நிழலாட ஆரம்பித்தன. என்னை மனசுக்குள்ளாகவே சிரித்துக் கொள்ளச் செய்தன. கொஞ்சம் நாணம் கொள்ளவும் செய்தன. நீங்கள் இங்கு வந்தால் எப்படி உங்களிடம் பேசிப் பழகுவது என்று

டைய ஆர்வமும் உற்சாகமும் என்னைப் பார்த்து, 'இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் நாங்கள் பொறுத்திருப்பது?' என்று கேட்பதைப்போலிருந்தது.

நாட்களை எண்ணிக்கொண்டு வர ஆரம்பித்தேன். கல்லூரி ஆரம்பமாக ஐந்து நாட்கள் இருக்கும்போதுதான் உங்கள் அப்பாவிடமிருந்து இன்னொரு கடிதம் வந்தது. நீங்கள் கூட நான்கு

வரிகள் அதிலே எழுதியிருந்தீர்களே! அதைப் படித்தபொழுது தான், முன்பு நம் பிஞ்சு உள்ளங்களிலே முளைவிட்ட அந்த அன்பு என் உள்ளத்தில் உறுதிப்பட்டிருப்பதைப்போல உங்கள் உள்ளத்திலும் உறுதிப்பட்டு நிற்பதைக் கண்டேன். 'உறுதிப்பட்ட அன்பு என் மனத்திலே பருவ மாற்றத்தால் காதலாகக் கனிந்துள்ளதைப்போல உங்கள் மனத்திலும்......?' என்ற கேள்வியை என்னை நானே கேட்டுக்கொண்டேன். அப்படிப் பலமுறை கேட்டுப் பார்த்துக்கொள்வதிலே ஒரு இன்பத்தைக் கண்டேன். நீங்கள் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்த அந்த வரிகள்:— 'அன்புள்ள அமிர்தம்மாளுக்கும் கனகத்திற்கும் என் வணக்கங்கள். நான் அங்கு நாளை மறுதினம் வருகிறேன். கல்லூரி விடுதியில் இடம் கிடைக்கும் வரை உங்கள் வீட்டிலேயே தங்கியிருக்க நேரிடும் என்று எண்ணுகிறேன். கனகம் இப்பொழுது எந்த வகுப்பில் படிக்கிறது? ரொம்பவளர்ந்துவிட்டிருக்கிறதா? கனகுவைப் பார்க்க மிகவும் ஆவல்!'—இவைகளை எத்தனை முறை அலுப்புத்தட்டாமல் படித்தேன்! குறிப்பாக அந்தக் கடைசி இரண்டு வரிகளை! ஒவ்வொரு முறை அதைப் படித்து முடித்ததும் ஒரு புது அர்த்தம் அதிலே அடங்கிக் கிடப்பதாகத் தோன்றியது! நாளெல்லாம் உங்களைப் பற்றிய எண்ணமே தான்! பகலெல்லாம் என்னைப் பற்றிக்கொண்டிருந்த அந்த உங்கள் நினைவு—இன்பவுணர்வு—இரவு நேரத்திலே சும்மாயிருந்து விடுமா? பகலைவிட இரவுதானே அதன் இயங்குதலுக்கு மிகவும் இதமானது! அத்தான்! நீங்கள் இங்கு வருவதற்கு முன்னாலேயே என் கனவில் இரண்டு மூன்று முறை வந்துவிட்டீர்கள்!........

நீங்கள் இங்குவந்த அன்று உங்களை ரெயிலடியிலேயே சந்திக்க வேண்டும்போலிருந்தது. அம்மாவிடம் அதைக் கேட்க எனக்கு வெட்கமாயிருந்தது. நான்கைந்து நாட்களாக என் போக்கிலே ஒரு உற்சாகம்; நடையிலே ஒரு குதிப்பு; பேச்சிலே ஒரு புது மகிழ்ச்சி யிருந்து வந்ததை அவள் பார்த்து வைத்திருந்தாள். அதற்கெல்லாம் காரணத்தை ஓரளவிலே புரிந்து கொண்டவளைப் போலத்தான் அவள் தோன்றினாள். அவளுடைய அனுபவக் கறைபடிந்த அன்பு உமிழும் அர்த்தம் தோய்ந்த சிரிப்புகள் எனக்கு அதை அறிவித்தன. இரண்டு மூன்று முறை அவள் என்னைக் கூப்பிட்டபொழுது நான் உங்கள் கடிதத்தைப் படிப்பதை நிறுத்தி விட்டு வருவதை அவள் கண்ட பொழுது அத்தகைய புன்னகையைச் சிந்தினாள்!........ஆகவே தான் அம்மாவிடம் அதைக் கேட்க வெட்கமாயிருந்தது. நான் அன்று காலை நாலுமணிக்கெல்லாம் படுக்கையிலிருந்து எழும்பி விட்டு அவசரம் அவசரமாகக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அந்தத் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் கூவும் சத்தத்தைக் கேட்க ஆவல் மிகுதியுடன் காத்துக் கிடந்தேன். அடிக்கொரு தரம் கடியாரத்தை என் கண்கள் பார்த்து அதன் ஓட்டத்தை நொந்து கொண்டன. ஏழுமணி வாக்கில் ரெயில் மதுரையில் நுழையும்போது கூவும் சத்தம்




கேட்டது. பல நாட்கள் சோம் பேறியாகிய என்னைத் தூக்கத் திலிருந்து எழுப்பித் தொல்லை தரும் அந்தச் சத்தம் அன்று என் மனத்திலே தேனைப்பொழிந்தது! ஏழுமணியிலிருந்து ஏழரை மணி வரை—நீங்கள் ஸ்டேஷனிலிருந்து விடுவரும் வரை—நான் துடித்த துடிப்பு........! அது என் உள்ளத் திற்கு மட்டும்தான் வெளிச்சம்!

நீங்களும் வந்தீர்கள். அம்மா உங்களை வாசலிலேயே வரவேற் றார்கள். அப்பொழுதே உங்கள் குறும்பு விழிகள் என்னைத் தேடி யதை நான் ஹாலின் கதவோரத் திலே நின்றுகொண்டு பார்க்கத் தான் செய்தேன். நீங்கள் வந்த தும் வராததுமாக அம்மா கேட்ட 'வீட்டிலே எல்லாரும் சௌக்கி யமா' என்ற கேள்விக்கு 'நல்ல சௌக்கியம்!' என்று பதில் சொல்லிவிட்டு அதே மூச்சில், 'கனகு எங்கே?' என்றீர்களே அப்பொழுது என் உடலிலும் உள்ளத்திலும் பாய்ந்தோடிய அந்தப் புது உணர்வு........! பதி னைந்து வருஷங்களுக்கு முன்பு அம்மாவிடம், என்னை விளையாட அழைக்க, 'கனகு எங்கே?' என் பீர்களே அந்தக் குரல் என் செவி களிலே அப்பொழுது அந்தக் குர லிலே இழைந்தோடிய பாசம், குமிழ்விட்ட அன்பு எல்லாம் இப் போதும் இந்தக் குரலிலே இருந் தன. அதோடு முன்பு அந்தக் குர லிலே பிரதிபலித்த குழந்தையுள் ளமும் இப்பொழுது இந்தக் குர லிலே பிரதிபலித்தது!

அம்மா அர்த்தம் தோய்ந்த சிரிப்புச் சிரித்துவிட்டு என்னைக் கூப்பிடவே நான் உங்கள் முன் தலைகாட்டி இரு கைகளையும் கூப்பி வணங்கினேன். நீங்களும் வணக்கம் தெரிவித்துவிட்டு என்

னைப்பார்த்துக் களங்கமில்லாத குழந்தைச் சிரிப்புச் சிரித்தீர்கள். நான்தான் நாணிக்கோணி நின்று கொண்டு களங்கப் பார்வையால் பார்ப்பதைப் போலக் கடைக் கண்களால் பார்த்தேன். அடுத்த படி நீங்கள் என்னிடம் பேசுவீர் கள் என்பது எனக்குத் தெரியும். என்ன கேட்டாலும் பதில் சொல் வது என்று தீர்மானித்துக் கொண்டேன். நீங்கள், 'கனகம் ரொம்ப வளர்ந்துவிட்டிருக்கி ருயே!' அடையாளமே தெரிய வில்லையே என்றுதான கேட்க வேண்டும்? அதற்கு நான் என்ன பதில் சொல்வது?........' நீங்களுங் கூடத்தான்!' என்று சொல்ல வேண்டும்போலிருந்தது. ஆனல்........! பெண்மை, பெண் களை இம்மாதிரியான பதில்களை ஆண்களிடம் சொல்லத் தனிமை யில்தான் அனுமதி தருகிறது! அதாவது ஆண்மை பெண்மை யிலே அன்பினல் கட்டுண்டு தவ ழும் சமயத்தில்! ஆமாம். தனி மையாக நாம் இருவரும் இருந்த நேரங்களில் நான் உங்களிடம் பேசிய பேச்சுக்கள்........!

அன்று நீங்களே என்னிடம், 'என்ன கனகம், என்னிடம் பேசவே மாட்டேன் என்கிருயே!' என்று கேள்வி கேட்கும் அள வுக்கு மௌனியாக இருந்து கொண்டேன். தோசையும் காப் பியும் உங்களுக்குப் பரிமாறிய பொழுது மட்டும் 'என்ன கனகம், இந்தத் தோசையும் காப்பியும் எனக்கு நம்ம பழைய மண் தோசையைப்போல ருசிக்கவில் லையே!' என்று சொல்லி நீங்கள் சிரித்தபொழுது நானும் 'களுக்' கென்று சிரித்தேன். அவ்வளவு தான். ஆனல் இரண்டு நாட்களுக் குப்பிறகு, 'என்ன கனகம், முதல் நாள் பேச்சையும்சேர்த்து வட்டி யும் முதலுமாகப் பேசுகிருயே!' என்று நீங்கள் என்னைக் கேட்கு மளவுக்கு உங்களுடன் பேசிப் பேசிச் சிரித்துச் சிரித்து......... இன்பத்திலே மிதந்தேன்.

அப்பொழுதே உங்களுக்கு விடுதியிலே இடம் கிடைக்கக் கூடாதென்ற எண்ணம் எனக்கு உண்டானது. அதை நான் அதிக மாக எதிர்பார்த்து வந்தேன். நீங்கள் அங்கு போய் விட்டால் எப்போதாவது தானே வீட்டிற்கு வருவீர்கள் என்ற விசனம்! என் னுடைய 'பிரார்த்தனை'(!) க்கு இணங்க உங்களுக்கு விடுதி யிலே இடம் கிடைக்கவில்லை! அப்பொழுது நான் கொண்ட ஆனந்தம்! அத்தான், நீங்கள் எங்கள் வீட்டிலேயே தங்கிக் கொண்டு படிக்க ஆரம்பித்தது என் பாக்கியம், தவப்பயன்!

ஆஹா! அந்த இன்ப நாட்கள்! நாம் இருவரும் எங்கள் வீட்டிலே படித்த அழகு!........இப்பொழுது நினைத்துக்கொண்டாலும் சிரிப்பு ஊற்றெடுக்கிறது. இரவு பனி ரெண்டு மணி வரை விளக்கைப் போட்டுக்கொண்டு ஒருவரை யொருவர் படிக்கவிடாமல் வம்புக் கிழுத்துக்கொண்டும் சிரித்துக் கொண்டும்........! என்னை வலிய சண்டைக் கிழுப்பதில்தான் உங் களுக்கு எவ்வளவு இன்பம்! ஒரு முறை என்னைப் பரிக்ஷைக்குப் படிக்கவிடாமல் தொந்தரவு செய்தீர்களே, அப்புறம் நான் கண்ணீரைக் காட்டியதும் அடங்கி ஒடுங்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டீர்களே ஞாபகம் இருக் கிறதா?

வீட்டிற்குக் கடிதங்களில் 'நன்ருகப் படிக்கிறேன், முதல் வகுப்பில் பாஸ் பண்ணி விடுவேன்!' என்றெல்லாம் எழுதிவிட்டுப் பாட புத்தகங்களையெல்லாம் ஒழுங்காக அடுக்கி வைத்துவிட்டு எழுத்தை நம்பிப் பிழைக்கும் குடும்ப எழுத்தாளரைப்போல கதை எழுதிக்கொண்டிருப்பீர்களே நினைவு இருக்கிறதா? நான் ஏதாவது சொன்னல், 'நீங்க ஒண்ணும் புத்தி சொல்ல வேண்டியதில்லீங்க!......... கனகு, இந்தக் கதை எப்படியிருக்கிறது என்று படித்துச் சொல்லேன்!' என்று சிரித்தபடி சொல்வீர்கள்! என்னைக் கதை படிப்பதிலே வெறி கொள்ளச் செய்தது நீங்கள் தான்!........

அன்ருெருநாள் இரவு விடாது இரவு பனிரெண்டு மணிவரை சிறுகதைகள் எழுதித்தள்ளிக் கொண்டிருந்தீர்களே அப்பொழுது நீங்கள் ஒரு கதையை எழுதி முடித்து, சோம்பல் முறித்து இன்னெரு கதையை எழுத ஆரம்பிக்கும் சமயம் நான் உங்கள் மேல் பரிதாபப்பட்டு பால் தம்ளருடன் உங்கள் பின்னே வந்து நின்றதை நீங்கள் பார்த்து விட்டுத் தம்ளரை வாங்கிக் கொள்ளாமல் கடிதாசியில் 'தர்மபத்தினி' என்று தலைப்புப் போட்டு, 'இரவு பனிரெண்டு மணிக்கு மேலாகி விட்டிருந்தது. நான் கதை யெழுதிக்கொண்டிருந்தேன். என் சகதர்மினி கனகம் என்மீது என்று மில்லாத அக்கறையுடன் பால் தம்ளரை யேந்தியபடி என் பின்னே வந்து நின்ருள்' என்று புதுக்கதையை ஆரம்பித்தீர்களே, அப்போது நான் 'பொய்க் கோபத்துடன்' பால் தம்ளரை மேசைமீது வைத்துவிட்டு என் அறைக்கு வேகமாக நடந்தேனே—நீங்கள் 'கனகு, கனகு, கோபித்துக் கொண்டாயா? இல்லே. இதோ அந்த வரிகளை அடித்துவிட்டேன்!, என்று கூறி அந்த வரிகளை அடித்ததைச் சட்டை செய்யாமல் நடந்தேனே—அவைகளையெல்லாம் நினைத்துக்கொண்டால்....! அத்தான் அன்று இரவு நான் கண்ட கனவு! இன்பக்கனவு! உங்கள் பேச்சுக்கள், செய்கைகள், அன்புருவம் எல்லாம் எனக்கு இன்பத்தை அள்ளி அள்ளி வழங்கின.

என் தோழிமார்கள் என்னிடம், 'கனகு, உங்கள் வீட்டிலே இருக்கிருரே அவர் யார்?....ஓ.... தெரியுமே....உன்....' என்று கூறி கேலி செய்யும்போது பொய்க் கோபத்துடன் அவர்களை நொந்து கொள்வேன். ஆனல் உள்ளூர மனசிலே அப்பொழுது எழும் ஆனந்தமும் இன்பவுணர்வும்!....

அத்தான், நீங்கள் இங்கிருந்த இரண்டு வருஷ காலத்தில் நான் அனுபவித்த இன்பம் என் வாழ்நாளிலேயே நான் இதுவரை அனுபவித்தறியாதது! உங்களுடன் பேசுவதில், சண்டை போடுவதில், வாதாடுவதில்,.... கோபப்படுத்துவதில், பொய்க் கோபத்துடன் பேசா திருத்தலில், பரிகசித்து, 'வெவ் வெவ் வெவ் வெவ்வே!' என்று அழகை காட்டுவதில், உங்களுக்கு என் கண்ணீரைக் காட்டி மன்னிப்புக் கேட்க வைப்பதில், உங்களுடன் சினிமாவுக்கும், திருப்பரங்குன்றம், அழகர்கோவில் முதலிய இடங்களுக்கும் உல்லாசமாகச் செல்வதிலும் புகைப்பட மெடுத்துக் கொள்வதிலும் நான் கண்டு

அடைந்த இன்பம் எல்லையில்லா தது! இதற்காகத்தான் நான் உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். தந்தையை இழந்து ஏழைத்தாயுடன் வாழ்ந்த என்னை இன்பமாயிருக்கச் செய்தவர் நீங்கள்தான் அத் தான்! நீங்கள் எனக்கு இன்ப வூற்ருக அமைந்தீர்கள் அத்தான்! இதனுல்தான் உங்களுக்கு மிக வும் நன்றியுள்ளவளாயிருக் கிறேன்.

அத்தான், நீங்கள் இரண்டா வது வருஷம் முடித்துவிட்டு வீடு திரும்பும் சமயத்தில் 'டைபாயிட்' ஜுரம் கண்டு படுத்துவிட்ட பொழுது நான் இரவும் பகலும் உங்களுடனேயே இருந்து செய்த உதவிகள் நீர் எனக்குச் செய்த பேருதவிகளுக்கு ஈடாக முடியாது!

அத்தான், நீங்கள் அந்த விஷ ஜுரத்தினின்றும் தப்பிப் பூரண சுகமடைந்த பொழுது என் மகிழ்ச்சி எல்லையில்லாமல் நீண்டது. நீங்கள் இங்கிருந்து வீடு புறப்பட்டபொழுது ரெயி லடியில் பிரியாவிடை தந்தேன்.

அத்தான், அன்று வீடு திரும் பியதும் உடம்புக்கு அசதியா யிருந்தது. வீடு நீங்களில்லாமல் வெறிச்சோடிப் போயிருந்தது. என் அசதியை அதிகப்படுத்தி யது. படுத்தேன். அன்று படுத்தவள்தான் இன்னும் படுத்த படுக்கையாகக் கிடக் கிறேன். அத்தான், உங்களைப் பிடித்து வாட்டிய அந்த விஷ ஜுரம் என்னையும் பிடித்துக் கொண்டு வாட்டுகிறது! நான் அணு அணுவாகச் செத்துக் கொண்டே போகிறேன். நான் பிழைக்க முடியாதென்பது எனக் குத் தெரிந்துவிட்டது. இப் பொழுது என் உருவத்தை நீங்கள் பார்த்தால்....! நீங்கள் கிள்ளும் சிவந்த சதை நிறைந்த என் கன்னங்கள் இப்போது இருக்குமிடம் தெரியாமல் இருக் கின்றன!

அத்தான், நான் மீண்டும் உங் களுக்குச் சொல்கிறேன். உங் களிடமிருந்து அந்த நோய் எனக்கு வந்ததாக எண்ணிக் வருந்தி வீணுக அலட்டிக் கொள்ளாதீர்கள். புனித காதலின் வன்மையைக் காட்டும் செயல் என்னை ஆட்கொண்டது. நான் காதல் தியாகியாகச் சாகிறேன். அவ்வளவுதான். உங்களுடன் வருங்காலத்தில் நான் இல்லற வாழ்வில் இன்ப மாக வாழ எழுப்பிய இன்பக் கோட்டை இடிந்து நொறுங்கி விட்டதை நினைக்கும்போது எனக்கும் வருத்தமும் வேதனை யும் மேலிடத்தான் செய்கின்றன. என்ன செய்வது? எனக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்!

அத்தான், என் உயிரினும் இனிய அத்தான்! தயவுசெய்து இந்தக் கடிதத்தைக் கண்டதும் என்னைப் பார்க்க இங்கு வாருங் கள். தவருமல் வருவீர்கள் என்று நம்புகிறேன். கடைசி யாகத் தங்களைப் பார்க்கத் துடிக் கிறேன். அத்தான், உங்கள் வாழ்விலே காதலை மூட்டி இன் பத்தைச் சேர்த்து மறையும் உங்கள் உயிர், கனகத்தை என் றும் மறக்காதீர்கள். உங்கள் உள்

ளத்திலே என்றும் அவள் படிந்து கிடக்கட்டும்! அது ஒன்றுதான் உங்கள் கனகு உங்களுக்குப் பிறப்பிக்கும் அன்புக்கட்டளை!

அத்தான், உடனே புறப்பட்டு வாருங்கள். என் உயிர்த்துடிப்பு உங்கள் வருகைக்காகக் காத்துக் கிடக்கிறது. அது நின்றுவிடுவதற்குள் வந்து விடுங்கள்.

அன்பு முத்தங்கள் பல.

உங்கள் உயிர்க்காதலி

**கனகவல்லி.**

* நான் இந்தக் கடிதத்தை ஒரு வாரகாலமாக மிகவும் சிரமப்பட்டு எழுதினேன்.— "கனகு"

* * *

என் அன்பு வாசகர்களே, இது தான் அந்தக் கடிதம். கடிதத்தை அப்படியே எழுதிவிட்டேன். என் வேண்டுகோளைத் தயவுசெய்து அலட்சியம் செய்யாதீர்கள். அது உங்களில் யாருக்காவது கிடைத்திருந்தால், அல்லது இனிக் கிடைத்தால், அல்லது இந்த அறிக்கையைப் படித்தபின் அதைத் தேட ஆவன செய்தபின் கிடைத்தால் தயவு செய்து அதை அந்தக் கவரின் மேல் எழுதப்பட்டிருக்கும் என் விலாசத்திற்கு உடனே அனுப்பித் தாருங்கள்.

நான் என் உயிர்ச் செல்வத்தைத்தான் இழந்து விட்டேனென்றால் இந்த ஜீவமுடங்கலையுமா இழந்து விடவேண்டும்? இல்லை. இந்த ஜீவமடல் இழந்தும் பெறக் கூடியது! தயவுசெய்து என்மீது கருணை வைத்து எப்படியாவது அந்த ஜீவமடலை எனக்கு அனுப்பிவையுங்கள்,

நான் கடைசியாக என் கனகத்தை மரணப்படுக்கையில் சந்தித்த பொழுது, அவள், 'அத்தான், அந்தக் கடிதத்தை என் நினைவுச் சின்னமாக வைத்து பத்திரமாகப் பாதுகாத்து வாருங்கள்' என்று சொல்லி முழுசாக மூன்று மாதங்கள் கழிவதற்குள்ளாகவே அதை யிழந்து விட்டேனே!........ஐயோ......நான் போனவாரத்தில் என் ராணியின் கல்லறையைக் காணச் சென்ற போது ஏன் தான் இந்தக் கடிதத்தையும் உடன் எடுத்துச் சென்றேனோ!

அன்பு வாசகர்களே, என் உயிர்த்துடிப்பு அந்தக் கடிதத்திலே தான் இருக்கிறது. அது கிடைக்காவிட்டால் நான் செத்து மடிந்து விடுவேன். தயவுசெய்து எப்படியாவது அதை என்னிடம் சேர்ப்பித்து விடுங்கள், நான் தினமும் அந்தக் கடிதத்தின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருப்பேன். அதை அனுப்பி வைக்கும் அன்பருக்கு நான் என்றும் நன்றியுள்ளவனயிருப்பேன்! *

# இன்பம் பெற...

"எழில்வேந்தன்"

பண் : சண்முகப்பிரியா. தாளம் : ஆதி

எடுப்பு

இன்பம் பெறவேண்டின் இவ்வுலகில் நீவிர்
இன்குறள் ஓதிடுவீர் உண்மை (இன்பம்)

தொடுப்பு

அன்பை வளர்த்திடும் அறத்தையுணர்த்திடும்
மன்பதை யாவும் மகிழ வழிகாட்டும் (இன்பம்)

முடிப்பு

ஆக்கம் தனைப்பெறவும் வாழ்வில்
ஊக்கம் தனைக்கொள்ளவும்
ஆட்சியிதென்றறியா அரசியலில் அமைந்த
சூழ்ச்சிதனைநீக்கி மாட்சிதனைப் பெறும் (இன்பம்)

# மலரட்டும் மக்களாட்சி!

அ. சு. மணி (மாணவன்)

அழகிய சோலை. குயில்கள் கூவுகின்றன. மயில்கள் ஆடுகின்றன. அருவியின் சலசலப்பு உணர்ச்சியை அறைகூவி அழைத்தது. சஞ்சலம் நிறைந்த உள்ளமும் அங்கே சாந்தி காண முடியும். முல்லை நாட்டிற்கு இச்சோலை எல்லையாயிருப்பதுமல்லாமல் அந்நாட்டிற்குக் கொல்லையாக விளங்கியது. இச்சோலையின் அருகே ஒரு அடர்ந்த காடு இருந்தது. இதுவும் அந்நாட்டைச் சேர்ந்ததுதான். அக்காட்டின் மேற்குப் பகுதியில் வேடர்கள் வசித்து வந்தனர். அவர்கள் முல்லை நாட்டினர். பச்சைக்கிளிகள் உலவும் சோலையிலே பாம்புகள் நெளிவதைப் போன்று அவ்வழகிய சோலையும் அக்காடும் அருகருகே அமைந்திருந்தது. சோலையின் புல் பரப்பிலே ஒரு இளைஞன் உட்கார்ந்திருந்தான். அவன் பார்வை அங்கு தோய்ந்திருக்கும் ஆனந்தத்தை அள்ளிக் குடித்துக் கொண்டிருந்தது. அவன் கையிலே வில் இருந்தது, ஆனால் கருத்திலே களங்கமில்லை அவன் வேறு யாருமில்லை. அக்காட்டில் வசிக்கும் வேடர் குலத் தலைவன் மகன்.

அங்கு நிலவிய அமைதியைக் குலைக்கும் வண்ணம் காட்டின் ஒரு ஓரத்திலிருந்து மனித அரவம் கேட்டது. இளைஞன் திரும்பிப் பார்த்தான். ஒன்றும் தெரியவில்லை. ஆனால் தெளிவின்றிக் குரல் கேட்டது. ஒரு குரல் அல்ல பல குரல்களின் எதிரொலிப்பு அது. இளைஞன் எழுந்து காட்டை நோக்கி நடந்தான். சிறிது தூரம் சென்றிருப்பான். அங்கே ஒரு கூட்டம் காட்டைக் கடந்து வந்து கொண்டிருந்தது. இளைஞன் விரைந்தான். நெருங்கியும் விட்டான். அங்கே அவன் கண்ட காட்சி.

கையிலே குழந்தையும், கண்ணிலே கண்ணீரும் அலங்கரிக்கும் வனிதையர்கள். கருத்திலே கலக்கமும் கண்களிலே பீதியும் நிறைந்த வயோதிகர்கள். சிங்கார நாட்டின் சிந்து பாடும் சிறார்கள். இவர்கள்தாம் அக்கூட்டத்திலே காணப்பட்டனர். இளைஞன் திகைத்து நின்றுவிட்டான். அவர்கள் சென்று கொண்டு இருந்தனர். ஒரு பெரியவரைப்பார்த்து இளைஞன் "ஏன் இப்படிச் செல்கிறீர்கள்" என்று கேட்டான். அப்பெரியவர் பேசினார், இல்லை புலம்பினார். அடுத்த நாட்டு அரசன் நமது (முல்லை) நாட்டு மன்னன் மீது வசை மாரி பொழிந்து வம்புக்கு இழுத்ததுமன்றி, பொறுத்திருந்த நமது நாட்டின் மீது போர் தொடுத்துவிட்டான். இந்நிலையில் நமது மன்னனை நயவஞ்சகர்கள் கொலை செய்துவிட்டனர். களத்திலே காளையர்கள் எதிர்த்துச் சண்டையிட்டுக் கொண்டு இருக்கின்றனர். அறம் அங்கே அழிக்கப்படுகிறது மாற்றார் நமது மங்கையர்களை மானபங்கப்படுத்தினர். ஆகவே நாங்கள் பெண்களுடன் இந்தக் காட்டிற்கு வந்து விட்டோம்.

பெரியவர் மேலும் பேசிக் கொண்டே இருந்தார். ஆனால் இளைஞன் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. விரைந்தான்! விரைந்தான்!! அவன் வீடு நோக்கி விரைந்தான்!!!

மேற்றிசையில் கதிரவன் மறையும் நேரம். மேளதாளங்களுடன் வேடர்கள் ஆடிப் பாடிக் கொண்டு இருந்தனர். அவர்களது அன்றாடப் பொழுது போக்கு அதுதான். ஏன் ஆனந்தமும் அதுதான். இளைஞன் வரும் வேகத்தைப் பார்த்த வேடர்கள் அவனைச் சூழ்ந்துவிட்டனர். இளைஞன் அவர்களைப் பார்த்துப் பேசினன். பேசவில்லை, போர்முழக்கம் புரிந்தான் "வயிர நெஞ்சுடை வீரர்களே!— வேடன் இவ்வளவு நன்ருகப் பேசுவானு என்ற சந்தேகமா? சற்று விவேகம் படைத்தவன் அவன். இளைஞன் பேசிக்கொண்டு இருந்தான்—நமது முல்லை நாட்டைச் சுற்றிலும் முட்புதர்கள். மறக்கும் தன்மையும், மன்னிக்கும் தன்மையும் மறத்தமிழருக்கு உண்டு எனும் வகையில் இழிசொல் கூறிய அடுத்த நாட்டு வேந்தனை மறந்தார்கள்; மன்னித்தார்கள். ஆனல் அவன் அறிவிப்பின்றி நமது நாட்டின்மீது போர் தொடுத்து இருக்கிருன். இந்நிலையில் நமது மன்னன் இறந்து பட்டான். போர்க்களத்திலே வாலிப வீரர்கள், புலம்பலுடன் காட்டிலே நமது நாட்டு வனிதையர்கள்; வயோதிகர்கள்; வாழ்வின் செல்வங்கள். புறப்படவேண்டும் நாம் போர்க்களம் நோக்கி. செயல் வீரர்களே! நாளை செங்கதிர் முளைக்கும் வேளையிலே சென்றிடவேண்டும். அறம் அங்கே அழிக்கப்படுகிறது மறம் அங்கே மகுடம் தரித்திருக்கிறது. வீழ்ந்துபடும் அறத்தைக் காத்திட வீரர்களே வாரீர்". இளைஞன் பேசிமுடித்தான். கூட்டத்தினர் "அறம் வாழ்க! மறம் வீழ்க!!" என்று குரல் எழுப்பினர். கூட்டம் கலைந்தது.

களத்திலே காவலன் இல்லை. ஆனாலும் காளையர்கள் கட்டுப்பாடு கண்ணியம் கடமையுணர்ச்சி இவற்றினின்றும் வழுவவில்லை. காற்றுடன் போட்டியிட்டு வந்த கணைகளைக்காட்டி நின்ற மார்பிலே ஏற்றி மடிந்த கணக்கற்றக்காளையர்களின் முடிவைக் கண்ணுற்றும் வீரர்கள் மனம் கலங்காது போரிட்டுக் கொண்டு இருந்தனர், களிறுகளின் கர்ச்சனை, குற்றுயிராய்க் கிடப்போரின் மேல் குதிரைகளின் குளம்புகள் பட்டுத் தெறிக்கும் ஒசை கேட்பதற்கு மிக கொடூரமாக இருந்தது. செங்நெல் விளையும் நிலம் அன்று செங்குருதிக் குளம் எனக்காணப்பட்டது. முல்லை நாட்டுப் படையிலே வளர்ச்சியில்லை. ஆயினும் அவர்கள் உள்ளத்துத் தளர்ச்சியில்லை. அந்த வாய்த்துடுக்கு வீரன். வக்கிர மூளைக்காரன் கொக்கரித்தான். இந்த நேரத்தில் இளைஞன் படை வந்து சேரவே முல்லை நாட்டு வீரர்கள் முன்னிலும் மும்மடங்கு மும்முரமாகப் போரிட்டனர். இதைக்கண்ட அந்த நாட்டு வேந்தன், அருகிலிருந்த ஒரு ஆளைக்கூப்பிட்டு. இளைஞனைச் சுட்டிக் காட்டி ஏதோ காதோடு காதாய்ச் சொன்னன். அந்த ஆளும் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தான்.

இருள் பரவ ஆரம்பித்தது. இன்னும் போர் நிற்கவில்லை. அந்நாட்டு வேந்தனை முன்னின்று தாக்கினான் இளைஞன், வில்லிலிருந்து பறந்த அம்புகள் ஒவ்வொன்றும் அவனது விண்ணுலக யாத்திரைக்குப் படிகள் அமைத்தன. போரின் உச்சக் கட்டம். புகை மண்டலம் உயரக் கிளம்பி எழுந்தது. இளைஞன் தன் திறமையனைத்தும் திரண்டெழ ஒரு அம்பு விட்டான். அது அந்நாட்டு வேந்தனின் உடலிலே ஊடுருவிச் சென்றது. அடுத்த கணம் அந்த வேந்தன் அனுப்பிய ஆளின் குத்துவாள் இளைஞன் முதுகிலே ஆழப்பதிந்து நின்றது, அங்கு மன்னன் இறந்து கிடந்தான். எதிரிகள் மண்டியிட்டு விட்டனர். இங்கு இளைஞன் குற்றுயிராய்க் கிடந்தான். அனைவரும் கூடிவிட்டனர்.

கலங்கி நின்ற அனைவரையும் பார்த்து கடமை வீரன் பேசினான், "என்வாழ்நாள்முடிவிற்காக நான் வருந்தவில்லை. புத்தொளிபெற்று பூத்துவரும் புது யுகத்தில் நமது புது முகங்களாம் சிறார்கள் நமது பொன்னாடாம் முல்லை நாட்டில் பெருமையுடன் உலவிட உரிமை காத்திடும் பணியில் பங்கு பெற்றேன் என்று பூரிப்படைகிறேன். மன்னன் இல்லை. மக்களாட்சி மலரட்டும். மாற்றார் அது நாட்டை அடிமைப்படுத்த வேண்டாம். அங்கும் மக்களாட்சி மலரட்டும். ஏற்றத் தாழ்வில்லா எழிலரசு ஏறுநடை போடட்டும். அதில் ஏர் பிடித்த உழவனும், செங்கோல் ஏந்திய தலைவனும் சமம். வாழ்க அறம்! வளர்க நமது பண்பு!! வருகிறேன், வணக்கம்." வார்த்தைகள் முடிந்தது. இளைஞனது வாழ்வும் முடிந்தது. விசையொடிந்த நாட்டிலே இசையெழுப்பிய இளைஞன் இறந்து விட்டான். கூடியிருந்த அனைவரும் "வாழ்க அறம்! வீழ்க மறம்!!" என்று குரல் எழுப்பினர்.

தூங்கிக் கொண்டிருந்த நலங்கிள்ளி "அறம் வாழ்க! மறம் வீழ்க!!" என்ற சப்தமிட்டதைக் கேட்டு அவனது தாயார் அவனை எழுப்பி என்னவென்று விசாரித்தாள். அவன் அதற்கு நேரடியாய்ப்பதில் ஏதும் சொல்லவில்லை. ஆனால் அவன் நேற்றிரவு படித்த "அறம் வாழ்க! மறம் வீழ்க!!" என்ற கதையை இன்று பகலிலே கனவாகக் கண்டது அவனுக்கு சிரிப்பாய்த்தான் வந்தது. நலங்கிள்ளி கைகால் கழுவிக் கொண்டு வெளியே சுற்றிவரப் புறப்பட்டான், அப்பொழுது ஒரு பூனை அவனுக்குக் குறுக்கே ஓடியது. இதைப் பார்த்த அவன் தாயார் "டே நலங்கிள்ளி, பூனை குறுக்கே ஓடுது. பக்கத்து வீட்டிலே போலீஸ் வந்து என்னமோ கேட்டுகிட்டிருக்காங்க. கொஞ்சம் வந்து உட்கார்ந்துட்டுப் போ" என்று வற்புறுத்தவே அவனும் திரும்பி வந்தான். வந்தவன் தனது அறையிலே சப்தம் உண்டானதைக் கேட்டு அங்கு சென்று பார்த்தான். அங்கே சுவரிலே மாட்டியிருந்த தமிழ் வேந்தனின் படம், மேரு மலையே மோத வரினும் மேனிசிலிர்க்காத தமிழன் இன்று அறியாமையிருளில் ஆழ்ந்து வௌவாலின் வாழ்வு வாழ்வது காணச்சகியாதோ என்னவோ தரையிலே உடைந்து கிடந்தது.

*



# நமது மருத்துவர்

**G. வெங்கடப்பா** M. B. B. S. (Ex) I.A.M.C.

*"நோய்நாடி நோய்முத லுடி யதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்ப செயல்"* என்ற வள்ளுவர் இன குறட்பாவிற்கிணங்க, இப்பகுதியில் மக்களுக்கு அடிக்கடி யுண்டாகும் நோய்களைப்பற்றி, பொன்னி அன்பர்கள் கேட்கும் வினாக்களுக்குத் தெளிவான விடையினை, மருத்துவப் பேரறிஞர் வெங்கடப்பா அவர்கள் தக்கமுறையில் விடையிருப்பார். அன்பர்கள் படித்துப் பயன்பெற வேண்டுகின்றோம்.

—ஆசிரியர்.

*வினா: ஐயா, எனக்கு முகப்பரு அடிக்கடித் தோன்றி என் அழகினைக் கெடுத்துவிடுகிறது. எங்கள் பள்ளி விடுதியிலும் பல மாணவர்களுக்கு இப்பரு தோன்றியிருக்கின்றது. இதனை ஒழிக்கும் முறைகளைத் தாங்கள் தெளிவாக்க முடியுமா?*

எஸ். சந்திரமோகன்—திருச்சி.

விடை: தங்களது வினாவிலிருந்து தாங்கள் காளைப் (வாலிபம்) பருவம் அடைந்தவர் என்பதை அறிகின்றேன். இப்பருவத்தில் தோன்றி பின் மறையும் முகப்பருவைக் கவலையுடன் கவனியாவிடில் நச்சுக் காய்ச்சலோ (விஷ ஜுரம்) முகத்தில் பள்ளமான தழும்புகளோ உண்டாகி உடலைப் பாதிக்கும்.

வருமுன் காப்பு முறை:

எந்த நோயையும் வருமுன் காப்பதே நல்லது. எனவே முகப்பரு தோன்றுதற்குரிய ஏதுக்கள் எவையென்று ஆய்வோம்.

(1) மலச்சிக்கல் இருப்பின் முகப்பரு தோன்றலாம். நாள்தோறும் பழங்களையும், கீரை வகைகளையும், தண்ணீரையும் மிகுதியாக உட்கொள்ள வேண்டும். வயிற்று அறையின் தசைகளுக்குப் பயிற்சி (அப்பியாசம்) அளிக்கவேண்டும்.

(2) பல்வலி, Tonsil வீக்கம், காதில் சீழ்வடிதல், உடலில் எங்கேனும் சீழ் கட்டிகளிருத்தல் முதலியனவும் முகப்பரு தோன்றுவதற்குக் காரணங்களாகும். இவற்றைத் தக்க மருத்துவரிடம் (டாக்டர்) காட்டி நீக்கிக்கொள்ள வேண்டும்.

(3) முகத்திலுள்ள தோலில் எண்ணெய்க் கோளங்களும், வியர்வைக் கோளங்களும் சற்றுப் பெரிதாகித் துரிதமாக வேலை செய்கின்றன. எண்ணெய்க் கோளங்களிலுள்ள கொழுப்புப் பொருளோடு கிருமிகள் கலந்து சீழ் உண்டாக்குகின்றது. பருவுள்ள முகம் எண்ணெய் படிந்து வழவழப்பாயிருக்கும். தோலில் கொழுப்புப் பொருளைக் குறைக்க வேண்டும். எனவே ஸ்னோ (Snow) வாஸ்லைன், வெண்ணெய் போன்றவைகளை முகத்தில் தேய்த்தல் ஆகாது.

(4) சாக்லேட் போன்ற மிட்டாய் வகை, நிலக்கடலை இவற்றை அதிகமாக உண்ணல்; டீ, காபி, குடித்தல்; புகையிலை போடுதல் இரவில் நீண்டநேரம் கண்விழித்தல் ஆகியவற்றை நீக்குதல்வேண்டும். ஏனெனில் இவற்ருல் முகப்பருக்கள் உண்டாகின்றன.

(5) காலையில் கண் விழித்தவுடன் உள்ளங்கைகளால், நெற்றி, கன்னம், காது, கழுத்து ஆகிய உறுப்புக்களை இரண்டு நிமிடங்கள் நன்ருகத் தேய்த்துவிட வேண்டும்.

(6) உடலில் குருதியின்மை, நீடித்த நோய் ஆகியவற்றை மருத்துவரிடம் நேரிலேயே காட்டி உடலைத் தேற்றிக்கொள்ளவேண்டும்.

வந்தபின் காப்பு முறை:

• பொதுவாக ஒரு நல்ல மருத்துவரிடம் காட்டி மருத்துவம் பெறுதல் நல்லது.

(1) பருக்களைக் கசக்குவதோ கிள்ளி விடுவதோ கூடாது. அவ்வாறு செய்தால் இதர கொடிய கிருமிகள் காயத்திற்குள் புகுந்து முகத்தை வீங்கச் செய்து நச்சுக் காய்ச்சலை யுண்டாக்கும். பருக்களை அப்படியே நாம் விட்டுவிடுவோமாளுல் சீழிலுள்ள அணுக்களை நம் இரத்தத்திலுள்ள வெண் அணுக்கள் அகற்றிவிடும். பள்ளமான தழும்புகளும் உண்டாகாது. ஆயினும் பருக்கள் நன்ருகப் பழுத்துச் சீழ் வெளிவரத் தயாராயிருந்தால் பின்கண்டவாறு செய்யலாம்:— ஸ்பிரிட், டின்க்சர் ஆப் அயோடின், டெட்டால் ஆகிய கிருமி கொல்லி மருந்துகளில் ஒன்றைப் பஞ்சில் எடுத்துப் பருவின் மேலும் சுற்றுப் புறங்களிலும் தடவுதல் வேண்டும். மருத்துவம் புரிவோர் தமது கைகளைக் கிருமி கொல்லி மருந்தில் சுத்தம் செய்து கொண்டு, ஒரு ஊசியைக் கிருமி கொல்லியில் நனைத்துப் பருவை மெதுவாகக் குத்தி சீழை எடுத்த பின்னர் கிருமி கொல்லி மருந்தைத் தடவலாம்.

(2) இரண்டு கைக்குட்டைக்களை எடுத்து வெந்நீரிலும் தண்ணீரிலும் விட்டுப் பிழிந்து முதல் ஐந்து நிமிடங்கள் வெந்நீர் ஒற்றடமும் அடுத்து ஐந்து நிமிடங்கள் தண்ணீர் ஒற்றடமும் கொடுத்தல் வேண்டும். இவ்வாறு சில நாட்களுக்குக் காலையிலும் மாலையிலும் தவருமல் கொடுத்து வருதல்வேண்டும்.

(3) பருக்களில் புனுகைத் தடவலாம்.

(4) 'நறுவிலி,' மரத்தின் இலைச்சாற்றையோ பழசசதையையோ தடவினாலும் குணம் பெறமுடியும்.

(5) பலாசு மரத்தின் (Butea Monos Perma) இலை அல்லது மலரை அரைத்து ஒரு தேக்கரண்டியில் இட்டு நீர் சேர்த்துக் கொதிக்க வைத்துப் பருக்களுக்கு பூசினும் பயன் காணலாம்.

(6) பப்பாளி மரத்தின் பாலைப் பருக்களுக்குப் போடுவதும் உண்டு.

(7) நில அவரை இலையைக் கொடியுடன் அறைத்துப் பருக்களுக்குப் பூசலாம்.

(8) சோலைப்புளி (Gancinica Morella) மரத்துப் பட்டையை அறைத்துப் பருக்களுக்குப் பூசலாம்.

(9) சந்தன எண்ணெயுடன் இரண்டு பங்கு கடுகு எண்ணெய் சேர்த்துப் பருக்கள் மேல் தடவ விரைவினில் குணம் கிடைக்கும்.

(10) புதிதாக முகப்பரு வந்தவர்கள் கார்போ வெஜிடேபிலிஸ் (Carbo Vegetablies) X 6 என்னும் ஹோமியோபதி மருந்தை நாள் தோறும் மூன்று வேளை ஐந்து சொட்டுகள் நாக்கின் மேல் விடவும். நீண்ட நாட்களாகவிருக்கும் பருக்களுக்கு ரேடியம் பிரேமைட் X 30 (Radium bro Mide X 30) என்னும் ஹோமியோபதி மருந்தை வாரம் ஒருமுறை நாவின் மேல் ஐந்து சொட்டுகள் விடவும்.

(11) நெடுநாட்கள் பருக்களால் துன்புறுகின்றவர்கள் அல்ட்ரா வொயலெட் கதிர் (Ultra Violetray) அல்லது எக்ஸ் கதிர் (X Ray) மருத்துவம் பெறவும்.

---


**மாதவிடாய் நின்றுபோனதா?**

**நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)** Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

**கர்ப்பதடை**

**நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)**
Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பாவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
பிராஞ்ச் 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST. கொழும்பு-11.

# இரக்கம்!

**சுப்ரதீபன்**

கதைகளில் வர்ணித்து விடுகிறேனே, அந்தக் கன்னங்கள் அமிழ்ந்து, அது இருக்க வேண்டிய இடத்தில் இரண்டு பள்ளங்கள் இருந்தன. நரைத்துச் சிக்கேறிய தாழை நார் தலை; முள்ளில் மாட்டி இழுத்ததைப்போல கிழிந்து தொங்கும் பொத்தல் சொக்காய் சகிதம் அவன் அங்கு நின்றுகொண்டிருந்தான்.

"இன்று புயல் அடிக்கும்" என்று சென்னை வானிலை ஆராய்ச்சிக் கூடத்தார் அன்று அறிவித்திருந்தார்கள்.

வானம் இருண்டு திரண்டு வந்தது. கறுத்தடர்ந்த மேகப் படலம் வானில் கவிழ்ந்து குமுறியது. மழையைத் தினம் தினம் எதிர்பார்த்துக்கொண்டிருந்த உழவர்களும்கூட அதைக்கண்டு சிறிதே அஞ்சினர்கள்.

காற்று சுற்றிச் சுழன்று ஊளையிட்டது.

இவை எதையும் பொருட்படுத்தாது, பொருட்படுத்த முடியாத நிலையில், பூவிருந்தமல்லி நெடும் பாதையில் இயற்கை லாவண்யம் கொஞ்சிக்குலாவிடும் கிராமத்துக்கும், நாகரிகம் தலைவிரித்தாடும் சென்னை நகருக்கும் உள்ள இடைவெளியில், ஒரு ஆலமரத்தடியில் அந்தக் கிழவன் நிற்கவும் சக்தியில்லாமல் நின்றுகொண்டிருந்தான்,

வாழ்வெனும் சூறைக்காற்றில் அடிபட்டுப் பழகிப்போன அவனுக்கு அது துச்சமாகத் தோன்றியதோ. என்னவோ? இல்லாவிட்டால், 'அண்ணமலை தீபத்தை அணைக்கவே இந்தக்காற்று வந்திருக்கிறது' என்ருவது சொல்லியிருப்பானே.......!

ஒட்டி உலர்ந்த உடல். 'கன்னக் கதுப் பழகும்' என்று நான்கூட

'ஏற்பது இகழ்ச்சி' என்ற ஔவை தந்த பொன்னுரையை அனுசரிக்க முடியாத அந்தக் கிழவன், நீட்டிய கரங்களுடன் 'ஐயா பசிக்குதே' என்று அதை அனுசரிக்கும் வசதிநிறைந்த மனித ஜீவ கோளங்களைப் பார்த்துப் பிரலாபித்துக்கொண்டிருந்தான்!

பிச்சை எடுப்பதற்காக அவன் உயிர் வாழவில்லை; உயிர் வாழ்வதற்குப் பிச்சை எடுப்பதைத் தவிர வேறு வழியே இல்லையென்ருல்.......? அங்கு தத்துவங்களுக்குப் பயங்கரமான விளக்கம் ஏற்பட்டுவிடுகிறது!



கண்கள் இருண்டு, காதடைத்து கால்கள் தடுமாற, நீட்டிய நடுங்கும் கரங்களுடன் 'ஐயா பசிக்குதே; காலணு இருந்தா கொடுங்கய்யா!' என்று அவன் வீதி வழியே போவோர்களிடம் பல்லிளித்துக் கொண்டிருந்ததற்கு உயிர் மேல் இருந்த ஆசைமட்டும் காரணமல்ல; அப்போதைய அவன் உணர்ச்சியின் தூண்டுதலும் அதுவாகவே இருந்தது. சாதாரண மக்களுடைய வாழ்வில் உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டு போவதே இயல்பு. அசாதாரண மானவர்களின் தத்துவம் அதற்கு ஒத்துவராது!

அந்த வழியில் யார்யாரோ போய்க்கொண்டிருந்தார்கள்; வந்துகொண்டிருந்தார்கள்.

வீட்டுக்கு விரைந்தோடிவரும் பள்ளிச் சிறுவன், மாட்டு மந்தை ஓட்டிவரும் இடைப்பையன், மோட்டார், ரிக்ஷா, குதிரை வண்டி, மாட்டுவண்டி, டாக்சி....

....மனிதனுடைய துரித முயற்சியின் விளைவான நாகரிகங்கள் அந்த வீதியில் வெள்ளம்போல் உருண்டோடின.

தூரத்தில் ஒரு பாதிரி வந்து கொண்டிருந்தார். இச்சைகளை வென்றுவிட்ட அவர்கூட சிகரெட் புகைத்துக்கொண்டிருந்தார்!

கிழவன் அவரைப் பார்த்து விட்டான். அவனுக்கு ஆசை, காலணு அவன் கையில் விழ வேண்டுமென்பது. அவன் சத்தத்தோடு சோகத்தைக் குரலாக்கினுன்:

"ஐயா, பசிக்குதே; காலணு இருந்தா கொடுங்கையா!"

பரலோகத்துப் பிதாவின் மோட்ச சாம்ராஜ்யத்திலே, அளவிலா நிரந்தர இன்பத்தை அனுபவிக்க இகத்தை இச்சையற்ற தாக்கிக்கொண்ட அந்தப் பாதிரி, அவனைத் தலையைச் சற்றே சாய்த்து காக்கையைப்போல் ஒற்றைக் கண்ணுலேயே பார்த்து விட்டுப் போய்விட்டார். அவர் ஆங்கிலப் பாதிரி, அவருக்குத் தமிழ் தெரியாது. ஆனல், 'மனிதனுடைய தோற்றம்?' அது புரிந்திருக்குமே!

நீட்டிய நடுங்கும் கரங்கள் காலியாகவே இருந்தன. அவன் உணர்ச்சியால் உந்தப்பட்டு பிரலாபித்தான்.

காலம் நகர்ந்துகொண்டிருந்தது; நிமிடங்கள் ஓடி மறைந்தன. அப்போதும் அந்த வீதியில் யார்யாரோ போய்க்கொண்டிருந்தார்கள்; வந்துகொண்டிருந்தார்கள்.

சாவர்க்காரை ஏற்றிவரும் ஆட்டோ ரிக்ஷா, காலேஜ் கிளியோ பேட்ராக்களுக்காகச் சைக்கிளில் விரைந்தோடும் அண்டோனியோக்கள், வயிற்றுப் பாட்டுக்காக ஏர்க்காலைப் பிடித்தவாறு சவாரியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் ரிக்ஷாக்காரர்கள்........இன்ன பிறவற்ருல் அந்தச் சாலை சலசலத்துக்கொண்டிருந்தது.

அதனிடையே........காசுமாலை நெஞ்சில் தவழ, தங்க வளையல்கள் கையில் குலுங்க, பட்டுச் சேலைத் தரையில் புரள ஒரு மாது வந்துகொண்டிருந்தாள். கையில் வாழை இலைச்சுருளுடன் வந்துகொண்டிருந்த அவளைப் பார்த்த கிழவன் ஆரம்பித்தான்:

"அம்மா, பசிக்குதம்மா; காலணு இருந்தா கொடுங்கம்மா!"

எங்கோ எதையோ பார்த்தவாறு அவன் அருகில் வந்து

கொண்டிருந்த அவள், அவன் குரல்கேட்டுச் சட்டெனத் துள்ளிக் குதித்தாள்! அவன்மேல் பட்டு விடாதிருக்கச் சற்றே விலகி நடந்தாள்!

நிமிடங்கள் கரைந்துகொண்டே இருந்தன; அப்போதும் அந்த நடுங்கும் கரங்கள் காலியாகவே இருந்தன.

அந்தப் பாதையில் புதிது புதிதாக யார் யாரோ போய்க் கொண்டிருந்தார்கள். ஆபீஸிலிருந்து வீடு திரும்பும் குமாஸ்தாக்கள், அவனைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் எங்கோ கவனமாகச் சென்றுகொண்டிருந்தார்கள். வழி மாளவேண்டும் என்பதற்காகத் தில்லானுப் பாடிக்கொண்டு போகும் லாரி கூலிகள், அவனைப் பார்த்து 'ஐயோ பாவம்' என்றனர், இன்னும் யார் யாரோ என்ன என்னவோ நினைத்துக்கொண்டு போனார்கள். யாரும் அவனைச் சட்டை செய்யவில்லை. அவன் வயிற்றைப்போல அவன் கைகளும் வெறுங்கையாகவே இருந்தன.

பொழுது மாண்டுகொண்டே இருந்தது; சூரியன் மறைந்து விட்டான், அப்போது அந்த வீதியில் ஆள்நடமாட்டம் அவ்வளவாக இல்லை.

இந்த உலகில் பணம் படைத்தவர்கள் எல்லோருமே கல்நெஞ்சம் உடையவர்கள். அவர்கள் மனத்திலே பரோபகார சிந்தையுடன் இரக்கம் இழைவிடுவதே இல்லை என்று அந்தக் கிழவனும் அப்போது நினைத்துவிட்டானே என்னவோ? அவன் ஒன்றும் கத்தாமல் நின்றுகொண்டிருந்தான்.




அப்போது தூரத்தில் வெள்ளை ஜிப்பாவும், வேட்டியுமாக வாட்டமுள்ள முகத்துடன் ஒருவன் வந்துகொண்டிருந்தான். அவன் மனத்தைப்போலவே நடையிலும் சுறுசுறுப் பில்லாதிருந்தது. நாகராஜன்—அவன்தான் வீதி வழியே வந்துகொண்டிருந்தவன்—அவனும் வாழ்வெனும் சூறைக் காற்றில் அடிபட்டவன் தான். ஆனால். இன்னும் பிச்சை எடுக்கும் நிலைக்கு வந்து விடவில்லை. இல்லறத்தில் ஏற்பட்ட மனத்தாங்கல் அவனைக் குடும்பத்தை விட்டு — ஊரை விட்டுப் பிரித்து இந்த நிலைக்குக்கொண்டு வந்து விட்டிருந்தது.

நாகராஜன் வேலை தேடி அலைந்துவிட்டு மனம்போன போக்கில்—எங்கே எதற்காகப்

போகிறோம் என்று புரியாமல்—போய்க் கொண்டிருந்தான்!

அவனைப் பார்த்து அந்தக் கிழவன் பழைய பாட்டை ஆரம்பித்தான்.

அவனுக்குத் தெரியுமா இவனும் நம்மைபேன்றவன்தான் என்று? காசைச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டே, கேவலம் பிச்சைக் காரனிடம் இல்லை என்று பொய் சொல்லி விட்டுப்போன நூற்றுக்கணக் கான மனிதர்களைப் பார்த்த அவன் நாகராஜனையும் அப்படித் தான் நினைத்திருப்பான். ஆனால், ஏனோ பாட்டை ஆரம்பித்தான்!

"ஐயா! வயிற்றைப் பசிக்குதையா; காலணு இருந்தா கொடுங்கய்யா!"

அந்தக் கிழவனின் பரிதாபகரமான உருவத்தை நாகராஜன் பார்த்து விட்டான். கிழவனின் குழி விழுந்த கண்கள் அவன் நிலையை எடுத்துக் காட்டிற்று, நாகராஜனின் இதயம் அன்பால் சுரந்து, துன்பம் தாளாது விம்மி வழிந்தது. அவன் வாஞ்சையோடு—மன்னிப்புக் கேட்பதைப் போல—அந்தக் கிழவனின் நடுங்கும் கரங்களைப் போய்ப் பிடித்துக்கொண்டான்! அவனுடைய நிலை அவனுக்கே பரிதாபகரமாக இருந்தது. அவன் இதயத்தில் உள்ளதைத் துன்பப் பெருக்கால் வெளியிட்டான். வார்த்தைகள் தடைப்பட்டு வந்தன!—

"ஐயா! என்னிடம் காசில்லை.. உண்மையாகவே என்னிடம் இல்லை........ உங்களுக்கு உதவி செய்ய முடியவில்லையே என்று வருந்துகிறேன்; ஐயோ என்னிடம் காசில்லையே!"— என்று இன்னும் என்னவெல்லாமோ கூறி அழுதான்! நாகராஜனின் இளகிய மனத்தின் அடையாளமாக இரண்டு சொட்டு நீர் அவன் கன்னத்திலிருந்து வழிந்து அந்தக் கிழவனின் கைகளில் விழுந்தது.

கிழவன் சில கண நேரம் பசியையும் மறந்து ஆறுதல் மேலீட்டால் மெய்சிலிர்க்க நின்றான்.

அன்புக்கும் — அழுகைக்கும் இடையே ஒரு சில நிமிடங்கள் ஓடி மறைந்தன.

பிறகு அவர்கள் பிரிந்து விட்டனர்.

நாகராஜன் தூரத்தில் சென்று கொண்டிருந்தான். கிழவன் அவனையே வைத்தக் கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான்.

நாகராஜனின் உருவம் மறைந்து விட்டது, கிழவன் அன்பு சுரந்து நின்ற அவனின் உடல் மறைந்த திக்கை நோக்கி கையெடுத்து வணங்கிவிட்டு கைகளை ஒற்றிக் கொண்டான்! உண்மை வாழ்க்கையில் காசுக்கு உதவாத அந்தக் கண்ணீர்த் துளிகள்—அந்தக் கிழவனின் கண்களில் பட்டவுடன் அவன் இதயம் குளிர "பைத்தியக்காரா, இரக்கமும் அன்பும் உன்னைப்போன்றவர்களிடமே இருக்கிறது!" என்று வாய் விட்டுக்கூறிச் சிரித்தான்.

பிறகு அவன் எதிரே கவிழ்ந்துள்ள — இரக்கம் ஓடி ஒளிந்து கொண்ட — சூன்ய வெளியில் காலடி எடுத்து வைத்தான், அவன் கண்கள் பின்னிலும் இருண்டு மங்கிற்று, கால்கள் பின்ன, தரையில் குப்புற வீழ்ந்தான்.

*

# பாட்டாளி மக்களே!

" சிலம்பின் செல்வன் "

மண்ணினின்றெழுந்து விண்ணை முட்டும் மாட மாளிகைகளை, கண்ணுக்குத் துணையாய் கலத்திற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கங்களை, மன்னவன் வாழ்ந்திட்ட மதில் சூழ்ந்த மாப்பேராலயத்தை, கண்ணைக்கவர்ந்து விண்ணகம் தேடும் கற்கோவில்களை, வண்ணம் ஊட்டி வரைந்திட்ட ஓவியங்களை, வடித்தெடுத்த வண்ணச் சிலைகளை, எண்ணக் குவியல்களை எடுத்துணர்த்தும் கலைக் காட்சியாய், மண்ணையும் மரத்தையும் மாப்பெரும் பாறைகளையும் துணையாகக் கொண்டு, குருதியை நீராக வடித்து நெற்றி வியர்வை நிலத்தை முத்தமிடசத்தெல்லாம் உருட்டித் திரட்டிக் கட்டிக் கொடுத்துக் களிக்கச் செய்தவன் யார்?

ஒட்டிய வயிற்றுடன் பசிப்பிணி பற்றி வாட்டிட உள் விழுந்த கண்களுடன் உள்ளம் நொந்து நொந்துருக, பறட்டைத் தலைக்குச் சிறிது பசையூட்ட எண்ணெய் அற்று, குந்தக் குடிசையின்றி குளிரிலும் மழையிலும் நொந்துவாடி, கைகளையும் கால்களையும் குளிர்போக்கும் கருவிகளாக்கி மெய்தனைப் பொத்திப் பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும் ஏழைகளாம் பாட்டாளி மக்கள்,

கோபுரங்களைக் கட்டிக் கொடுத்தவர்கள்தான்; ஆனால் குந்த குடிசையுமின்றி மரப்பொந்திலே ஒண்டியிருப்பவர்கள்.

மன்னனுக்கு மாளிகை அமைத்து மகிழ்ந்தவர்கள்தான்; ஆனால், தன்னருமைக்குழவிகள் தங்குவதற்கும் தளம் அமைக்கும் தகுதியற்றவர்கள். கலங்கரை விளக்கங் கட்டி கலம் செலுத்துவாருக்குத் துணை காட்டியவர்கள்தான்; ஆனால், கலங்கிய கண்களுடன் கட்டிய மனைவியும் புழங்க இடம் அமைக்காதவர்கள். பிறர்க்கென வாழ்ந்து தனக்கெனத் தங்குவதற்கும் இடம் அமைக்காத இந்த மனிதப் பிறவிகள் யார்? பாட்டாளி மக்கள். ஆம்! வாழ்க்கையில் பட்டு அழிந்து கொண்டிருக்கும் பாட்டாளி மக்கள் தான்.

* * *

மினுமினுக்கும் பட்டாடைகளை, மேனிக்கு அழகூட்டும் மெல்லாடைகளை, மின்சார உதவியாலல்ல தன் மேனியை வருத்திக் காணிக்கையாக்கிக் கொடுத்தான்; பருத்தி எடுத்தான்; பஞ்சை நூற்றான்; பல வண்ண ஆடைகளாய்ப் பாகுபடுத்திக் கொடுத்தான்.

ஆடையுடுத்தி அலங்காரப் பொம்மைகளாய் மேடை மீதமரச் செய்தான்; பட்டாடையுடுத்திப் பாங்குடன் பேசி சிட்டு நடைபோடச் செய்தான் சீமாட்டிகளை; வேட்டியும் சொக்காயும் வேண்டுமட்டும் விளைத் தளித்தான்; ஆடையும் சேலையும் அணங்குகளுக்கு ஆக்கிக் கொடுத்தான்; ஊராளும் வேந்தராய், உல்லாச புரி

யினராய் சல்லாபம் புரிந்தாட தங் கச்சரிகையொடு 'கொள்ளே காலம்' கொடுத்தான். இவன் யார் ?

ஆயிரக் கணக்கான ஆடை களை ஆக்கிக்கொடுத்தும், தாயின் மானங்காக்க ஓர் ஆடை வாங்கத் தகுதியற்று வாழும் பாட்டாளி மகன். பாட்டாளிக் கூட்டம்! தொழிலாளத் தோழர்கள்.

பட்டாடைகளைப் பளபளப்புடன் பிறர்கட்டி மகிழக் கொடுத்தவர் கள்தான்; ஆனால், கட்ட உடை யின்றி கந்தல் ஒரு முழத்தை சுற் றித் திரிபவர்கள்.

பருத்திப் பஞ்சைத் திருத்தி யமைத்துப் பக்குவமாய்ப் பகட்டு டையாக்கிக் கொடுத்தவர்கள் தான்; ஆனால், உடுத்த உடை யின்றி ஓராயிரம் பீறல்களை உடன் கொண்டிருக்கும் கிழிந்த துணி களை அணிந்து மகிழ்பவர்கள்.

கோமான் வீட்டுச் சீமாட்டிகள் கோலங் கொண்டாட பூவேலை கொண்ட புத்தாடை அளித்தவர் கள்தான்; ஆனால், மானங்காக்க மனைவிக்கோர் ஆடை மக்களுக் கொரு கந்தை வாங்கிக் கொடுக்க மாட்டாதவர்கள்.

பிறர்க்கெல்லாம் ஆடைகளை ஆக்கிக் கொடுத்து பெண்டாட் டியின் மானங்காக்கத் தகுதியற்ற இந்தப் பெருந்தகையாளர் யார்? தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து காட்டும் இந்தத்தகைமை யாளர்கள் யார்? அவர்கள்தான், பட்டினும் மயிரினும் பருத்தி நூலி னும் மற்றவர்க்கெல்லாம் ஆடை யளித்து, தான் மட்டும் பஞ்சை யாய் பராரியாய் வாழும் பாட் டாளிக் கூட்டம்.

காலை முதல் மாலை வரை காடு திருத்தி மேடுவெட்டிக் கழனி கண் டான்; நிலந்திருத்தி வரப்புயர்த்தி நீர்சுரக்க கால்வாய் வெட்டினன்; பயிர் செழித்து வளங்கொழிக்க பல்வேறு எருவிட்டான்; பட்டப் பகலிலே பகலவன் சூட்டிலே குருதி நீரெல்லாம் கொதிப்பேற உழைத்தான்; காலையிலே கலப்பை பிடித்தவன் தன் காதலி யையும் மறந்து கதிரவன் தன் கதிர்க்கை மடக்கக் காரிருள் சூழ்ந்ததையும் அறியாமல் உழைத் தான்; பயிர் செழித்து கதிர் விளைத்துப் பக்குவமாய் மூட்டை களைக் களஞ்சியத்தில் சேர்த்தான்; கரும்பும் கதலியும் விரும்பி விளைத்தான்;

பலாவும் மாவும் பலன் காணப் பாதுகாத்தான்; உள்ளம் அற்றோர் உண்டு கொழுக்க உணவுப் பொருளை விளைத்துக் கொடுத் தான்; தொந்தி வயிற்றோர் குந்தி யிருந்துண்ண நெல்லும் பிறவும் அள்ளிக் குவித்தான்; உழைப்பின் பயன் கண்டு உள்ளம் மகிழ்ந்தான்; தான்பட்ட பாட்டின் பயன் கண்டு பரவசமடைந்தான். இவன் யார்?

அவன்தான், உழைத்து உழைத்து உருக்குலைந்து, நெஞ் செலும்பு நிமிர்ந்து முன்னிற்க, எலும்புந்தோலுமாய் ஏங்கிய முகத் துடன் "பாண்டுரங்கா உன்படைப் பில் ஒருவனாகிய என்னைப்பார்" என்றிருக்கும் பாட்டாளி மகன்; பாட்டாளி மக்கள்.

நெல்லை விளைத்துப் பிறர் உண்ண அள்ளிக் கொடுத்தவர் கள்தான்; ஆனால், தம் பிள்ளை களின் பெரும்பசி போக்க பிச்சை யேற்கும் நிலைபெற்றவர்கள்.

வாழை, பலா, மாவை வகை வகைக் கனிகளாக்கிப் பிறர்வாழக்

கொடுத்தவர்கள்தான்; ஆனல், ஏழைகளாய் நின்று பிறர் ஏசிக் கொடுக்க ஏற்று வாழும் கோழைகள். பிறர் உண்டு கொழுக்க உணவளித்தவர்கள்தான்; ஆனல், தான் குடித்துப் பசியாற கூழும் அற்றவர்கள்.

உழைப்பை யெல்லாம் அள்ளிக் கொடுத்து, புளிச்சேப்பக்காரரை ஊட்டி வளர்த்து; வயிற்றுப்பசிக்கு வற்றிய உடலுக்கு வார்த்திட கஞ்சியற்று வாழும் இவர்கள் யார்? பரந்த உலகத்தைப்படைத்து பாதுகாத்துத் தங்களை மட்டும் அழித்தலுக்கு ஆளாக்கிக்கொண்டிருக்கும் பாட்டாளிக் கூட்டம்! ஆம் பாட்டாளி மக்கள்!

பஞ்சையாய், பராரியாய், வஞ்சனை யற்று வாழும் பாட்டாளிக் கூட்டமே! உழைப்பது நீங்கள் உண்டுவாழ்வது மற்றவர். பிறர் உண்ண உணவை ஆக்கினீர்கள், உங்களுக்கோ குடிக்கக் கஞ்சியில்லை பிறர் உடுத்த உடைகளை அளித்தீர்கள், நீங்கள் உடுத்த கந்தையும் இல்லை, பிறர் தங்கி மகிழ மாளிகையைக் கட்டினீர்கள். நீங்கள் உறங்க உறைவிடமில்லை. இந்த நிலை ஏன்? ஏட்டிலே தீட்டிக் கொண்டிருக்கும் பாட்டாளியாயிருப்பதால் உங்களைப் பார்த்துக் கேட்கின்றேன்; பாட்டாளித் தோழர்களைப் பார்த்து கேட்கின்றேன் ஏன் இந்த நிலை?

உழைத்தவன் உருக்குலைந்து வாழ்வதேன்? பாட்டாளி பஞ்சத்தால் வதைக்கப் படுவதேன்? தொழிலாளி துயர்க் கடலில் நீந்திக் கொண்டிருப்பதேன்?

இதற்கெல்லாம் காரணம் எது? விதியா? இல்லை, விதியை நிதியாகக் கொண்ட சதிகாரர்கள் உண்டாக்கிய கடவுளர்களா? இல்லையென்று உலகப் பொதுமறை தந்த வள்ளுவப் பெருமான் ஓதிச் சென்றுவிட்டாரே.

"இவன் பிச்சையெடுத்துத்
தான் வாழவேண்டுமென்று
இறைவன் படைத்திருப்பானுல் அந்த இறைவன் அழிந்து
படட்டும்" என்று அறிவுறுத்திச் சென்றிருக்கின்ருரே.

"இரந்தும் உயிர் வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்"

என்று பாடிச் சென்றிருக்கின்ருரே. ஏழைகள் படும்பாட்டிற்கு ஏதுதான் என்ன?

முதலாளிதத்துவம்! அதனைக் கைக்கொண்டிருக்கும் முதலாளிகள். உழைப்பை யுறிஞ்சும் ஊதாரிக் கூட்டம். பணப் பெருமையால் குணப் பெருமையற்றிருக்கும் அந்தப் பாவிகள் கூட்டம்.

ஆலைகளை வழிச்சாலைகளை அமைத்துத் தந்த பாட்டாளிகள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையா யிருக்கும் அந்த முதலாளி தத்துவம் ஒழிக்கப்பட வேண்டும். முதலாளிகள் ஒழிக்கப்பட வேண்டும்.

முதலாளிகள் யார்?

பஞ்சாலை போன்றவற்றையும் பணமூட்டைகளையும் பாதுகாப்பவர்கள் மட்டும்தானு முதலாளிகள்? இந்த முதலாளிகளை மக்கள் ஒன்றுகூடினுல், மதிப்பிற்குரிய அரசாங்கம் மனம் வைக்குமானுல் தொழிலாளிகளாக்கிவிட முடியும். இந்த முதலாளிக் கூட்டமிருக்கின்றதே இன்று தோன்றி நாளை மறையும் பண முதலாளிக் கூட்டம். இந்தக் கூட்டம் மருந்து

கொடுத்தால் மாறியொழியும் நோய். அழிப்பதற்கு ஒரு சட்டம் போதும். பணத்தைப் பிடுங்கி விட்டால் முதலாளிப் பட்டம் மறைந்துவிடும்.

ஆனால் வஞ்சகத்தால் வாழ்ந்து தந்திரத்தால் தழைத்து மந்திர வித்தை காட்டும் மகத்தான முதலாளிக் கூட்டமொன்றிருக்கிறது. அதுதான் பிறவி முதலாளிக் கூட்டம். ஆண்டவன் நாமம் கூறி, அடியார்கள் புராணம் பாடி, தாய் மொழியைத் தலைக்கடைக்கனுப்பி, செத்த வடமொழியைச் சிங்காரி யாக்கி, மக்களை மடமையில் ஆழ்த்தி, அறிவை அகற்றிப் பொருளைச் சுரண்டும் ஓர் அனுதைக் கூட்டம்.........அந்தக் கூடடம் தான் பிறவி முதலாளிக் கூட்டம். அது பிறவிப் பிணியைப் போன்றது. எத்தனைப் பிறவி யெடுப்பினும் விடாத தொத்து நோய்கூட அல்ல, பிறவி நோய்.

பாட்டாளித் தோழர்களே ! பண முதலாளியை அழித்துவிட்டால் மட்டும் பஞ்சமின்றி பசியின்றி பகுத்தறிவுடன் வாழலாமென்று நினைத்தால் அது பகற்கனவாகி விடும். எனவேதான் பண முதலாளிகளோடு, பிறவி முதலாளி களையும் அகற்ற வாரீர் ! வாரீர் !! என வரவேற்கின்றோம் ! பாட்டாளியின் துயர்தீர வட நாட்டாட்சி யினின்றும் விடுபட வாரீர் என்று அறைகூவி அழைக்கின்றேன், வாழ்க ! பாட்டாளி மக்கள் ! வளர்க தொழிலாளர் முன்னேற்றம்.

## எழுத்தாளர்களுக்கு

●

பொன்னி இதழுக்குக் கதை. கட்டுரை, கவிதை முதலியவற்றையனுப்புவோர் கீழ்க் காணும் குறிப்புக்களை கவனித்தருள வேண்டுகின்றோம் !

★ பிறமொழிக் கலப்பின்றி, நல்ல, இனிய எளிய தமிழில் எழுதி யிருக்கின்றீர்களா ?

★ பகுத்தறி வுணர்ச்சியைச் சிறிதேனும் ஊட்டத்தக் கதா யமைந்துள்ளதா ?

★ தமிழ், தமிழர் தமிழ் நாட்டுப்பற்றை மக்களிடை உண்டாக்குமா ?

★ பண்டைத் தமிழ் இலக்கியக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துணர்த்துமா?

★ ஆராய்ச்சியுரைகள் உளவா? புதிய கண்டு பிடிப்புக்களா ? புதுமைகளா ?

ஆசிரியர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

Edited, Printed & Published by Aru. Periyannan for Ponni Ltd., at Ponni Achakam, 111, Coral Merchant Street, Madras-1.

அச்சுத் தொழில் வளருகிறது, எதையும் அச்சிலேற்றி அழகு காணும் நாள் இது, எனவே அச்சகங்களிலே வேலைகளை முடித்துக் கொடுப்பதில் நெருக்கடி ஏற்படுகிறது. என்றாலும் வாடிக்கைக்காரர்களுக்குக் குறித்த தவணையில் கலைப்பண்பு, புதுமை, உயர்வு திகழ அவற்றைத் திட்டமிட்டு முடிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள நாங்கள் காத்திருக்கிறோம்!

# பொன்னி அச்சகம்

111, பவழக்காரத் தெரு :: சென்னை-1

## உலக அரங்கில் ரூ. 1—0—0

தோழர் டி. கே. சீனிவாசனின் சிந்தனை அரங்கிலே நடம்பயி லும் சிறுகதைகள், உலக அரங்கிலே உயிர்பெற்று உலவுகின் றன. ஒப்பற்ற கருத்துக் களஞ்சியம், சிந்தனைச் செல்வம்.

★

## கடல் முத்து ரூ 1—0—0

இலக்கியக் கடலிலே மூழ்கி எடுத்துக் கோத்த உன்னத கதை முத்துக்களை நண்பர் ஆறுமுகம் மக்களுக்கு வழங்கி யுள்ளார். கடல் முத்தால் கிராமிய உலகம் ஒளிபெறுகிறது. உள்ளமும் உணர்வும் ஒருங்கே இசைவுறும் கதைக் காவியம்.

★

## நினைவுச் சின்னம் ரூ. 1—0—0

தோழர் இளமைப்பித்தனின் மூன்றாவது சிறுகதைத் தொகுதி இது. கருத்தாழங் கொழிக்கும் கலைச்சின்னம்; தமிழகம் கண்ட தணியாத கலையார்வத்தின் நினைவுச் சின்னம்.

★

## தபாலாபீஸ் விநோதங்கள் அணா 8

தபாலாபீஸ் சகல மூலைகளும் குவியும் கூடம். அங்கு நடக்கும் திருக்கூத்துக்கள் ஒன்றல்ல, ஆயிரம். அதன் இனிய படப் பிடிப்புத்தான் நண்பர் க. சண்முகசுந்தரம் தீட்டியுள்ள கட்டுரைகள். இனிய சுவை செறிந்த ஓவியம்!

★

நான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் தருவிப்போருக்கு
— அஞ்சற் செலவின்றி அனுப்பி வைக்கப்பெறும். —

★

# பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு. :: சென்னை—1.